ஓம் பரப்பிரம்மணேநம :

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.) [REGISTERED.

| | | |
|---|---|---|
| கமலம்-4. | சென்னை: சுக்கில௵ புரட்டாசி௴ 1௳ | இதழ்-42 |
| Vol. 4. | 1929-ம௵ செப்டம்பர்௴ 16௳ | No 42 |

## ஆநந்த  தரிசனம்

காதலனே! யருட்கார்முகிலே! யெங்கள் கண்மணியே!
கோதறு நற்குணக்குன்றே! பெரும்புகழ் கொண்டவனே!
தீதறவன்பரைத் தேற்றும் சுகானந்தத் தெள்ளமுதே!
நீ தரவேண்டு மெந்தாய்! நின் பாலன்பு நிலைபெறவே!

"வந்தாதரி யெந்தாய் வாரந் தந்தாளுன் பதந்தா." ஓ! அருட்குன்றமே! ஓ! அன்பின் பெருக்கே! ஓ! ஆநந்தக் கடலே! பாரார்ந்த பல்லுயிரும் புரக்குந் திவ்ய பரமனே! கருணாகரா! நின் ஸ்வர்ண கமலபாதம் துதிக்க அருள் செய்வாய். மனிதனை மனிதன் காண்கின்றான் ; எதைக் காண்கின்றான்? எது எதனைக் காண்கின்றது? தன் கண்ணால் மற்றொரு கண்ணைப் பார்க்கின்றான். ஒரு கண்ணிலுள்ள ஒளி மற்றொரு கண்ணிலுள்ள ஒளியை நோக்குகின்றது. அவ்வொளியுடன் கலந்தும் கொ[illegible]கின்றது. அங்ஙனம் கலந்த பின்னரே, தான் காண்பனவற்றை மனிதன் உணரும் அறிவு பெறுகின்றான். ஓ! தேவா! அக்கண்களில் விளங்கும் ஒளி நீயேயன்றோ? அது நின் ஒளியே யன்றோ? ஸர்வஜீவ தயாபரனே! எமது புன்மதியைத் திருத்துவாய். அன்பையடையும் நெறியில் இருத்துவாய். துன்புறுவண்ணம் நடத்

---

உலகத்தில் யாதாயினும் ஒரு பொருள் கிடைக்கில், அதனைத் தனியே உண்ணாது பலர்க்கும் பிரயோஜனப்படுமாறு செய்தல் பெரியோர் செய்கை. "சாகமுறவு கலந்துண்ணக் கண்டீர்" என்னும் ஸ்ரீதாயுமானார் அமுதவசனமும் இதற்குச் சாக்ஷி. ஆகவே, இந்த "அமிர்த குணபோதினி"யை நீங்கள் வாசிப்பதுமன்றி உங்களைச் சேர்ந்தவர்களையும் இதற்குச் சந்தாதாராகச் சேர்ப்பிக்க வேண்டுகிறோம். அது உங்கள் கடமை.

துவாய். இன்ப வாரிதியில் மூழ்க அருள் புரிகுவாய். நீ கடக்கணிப்பாயெனில் எமது வன்மனம் உருகுவது கடினமோ? எம்மிடத்து ஏற்கனவே செய்ய வேண்டியதைச் செய்தலெனும் பக்குவம் இல்லை யெனினும், அதன் பொருட்டுப் பலவிசையும் மன்னித்து அவ்வறிவு உதிக்கச்செய்யும் வழியைக் காட்டுகிற கடமை புத்திரவாத்சல்லியனுகிய உன்னதன்றே? ஓ! பதித பாவனு! ஓ! தீனதயாபரனே! ஓ! தொண்டர்குறை நீக்கும் தோழனே! எம் வாழ்க்கையைச் செவ்வனே சுகநெறியில் நடாத்த நின் அருள் விளக்கமன்றி வேறு சாதனமுண்டோ? எமக்குத் துன்பங்களெனத் தோற்றும் உலகத் தொல்லைகள் யாவும் நின்னிடத்து பக்தி பெருகி உனது அனுக்கிரஹமென்றே கருதும்படி அந்தஞானம் எமக்கு உதிக்குமாகில், யாம் எவ்வளவு சுகிகளென்று பெருமையும் ஆநந்தமும் அடைவோம். ஆதலின், அந்த உத்தம ஞானத்தை எம் உள்ளத்தில் உதிக்கச் செய்து கடைத்தேற்றுவாய். ஓ! சகல ஜந்து ஜால சரண்ணியா! சர்வ சுலபா! பக்தவத்ஸலா! திரிகுணதீதா! அதீந்திரியனே! எமக்குச் சர்வமும் நீயேயாதலின் நின்னையே நின்பொருட்டே சரணமடைந்தனம். இனி நின் திருவுள்ளம். ஒன்றுமறியாத ஏழைகளாகிய அடியாரை இனி எவ்வழி விடினும் அஃது நின் பொறுப்பே; நின் செயலே; நின் அருளே.

***

அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது செய்யவேண்டிய பிரார்த்தனை:—ஆத்மாவுக்கும் புத்திக்கும் பிரகாசத்தை யுண்டுபண்ணுபவராய், நித்தியனுய், நிரஞ்சனனுய், சுத்தனுய், களங்கமற்றவனுய், சாந்தனுய், நிர்விகாரியாய், நாசரகிதனுய் விளங்கும் உம்மைத் துதிக்கின்றேன். கடவுளே! அமிர்த வாரிதியே! நல்ல ஏதுவால் என் பிராரத்த வினைக்கு ஈடாக என்னை ஜனிப்பித்து, எனது பூலோக வாழ்நாட்களில் ஒரு நாளாகிய இந்த சுபதினத்தைக் காணும் பொருட்டும், குடும்ப ஸம்ரக்ஷணையின் பொருட்டும் நல்வாழ்வு தந்தருளியதற்கு உமது பொன்னடி பணிந்து போற்றுகின்றேன். தீயிலும், நீரிலும், செடிகளிலும், மரங்களிலும், எல்லா உலகத்திலும் வியாபித்திருக்கின்ற தேவரீருக்கு நமஸ்காரம்.

மெய்ஞ்ஞாநந் தாரு மெய்யா!—எம்
போய்ஞ்ஞாநம் போக்கி நின்புகழ் பதங்காண (மெய்)

சித்தந் தெளிந்தோ மில்லை—எங்கள்
பித்தந் தெளிந்து பெரும் பேறடைய (மெய்)

பத்திகள் செய்தறியோம்—யாங்கள்
புத்தியிற் சிறந் துன்னைப் புகழ்ந்து துதிக்க (மெய்)

உண்டுறங்கித் தினமு—முன்னை மறந்து
பண்டை நன்னுட்களைப் பாழிற் றுலைத்தோம் (மெய்)

***

---

தவறுதல்கள் ஏற்படுவதுண்டுதான். நடந்துபோன தவறுதலை சாதாரணமாக வாழ்வில் ஏற்படக்கூடிய ஸம்பவங்களுள் ஒன்றாகக் கொண்டு இனியேனும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். மறுபடியும் தவறிவிடக்கூடாது.

**ஸம்சாரத் தொல்லையிற் சிக்கியவரின் பிரார்த்தனை:**—ஈசனே ! இன்றேனும் இந்த இல்லம் கலகமில்லாதிருக்க அருள் செய்வாய். எவாது சிடுசிடுப்பும் கடுகடுப்புமின்றி இன்றைப் பொழுதை சமாதான ரூபமாய் இன்ப மயமாக்குவாய். மனோசாந்தி கெட்டுத் தடுமாறி உள்ளங்கொதித்துக் கண்ணீர் விடுதல் நேற்றோடு தொலைந்ததென்று முடிப்பாய். இன்றைக் காலைப் பொழுதை யாவும் மறந்த பொழுதாக்குவாய். சென்ற நாள்வரை ஏமாறிய ஏமாற்றம் இனி நீ காணாயென்றும், இனி எந்த நாளும் செய்தொழிற் பலித்து, தொட்டதெல்லாம் நிறைவேறுவதாகி ஜெயப்பிரதாபமே கொள்வாயென்றும் வாழ்த்துவாய். இறைவா! இல்லத்திலோ என் ஜீவியத்துன்பம் உணர்வாரில்லை; தெரிந்து தேற்ற அருகிலிருப்போருக்கும் பக்குவமில்லை; நித்த நித்தமும் லாபத்திற்கு எதிர் நோக்கி அது பெறாது கையில் உள்ளதையும் செலவிட்டு, செலவிட்டதுங்கூடக் கைக்குவராது தத்தளிக்கும் சோதனை போன்றவைகளை நிவர்த்திப்பாய். குடும்பத்தைச் சமாதானமாக நடத்திச் செலுத்துவாய். எத்துன்பத்திலும் இன்பத்திலும் உன்னை நினைக்க வைப்பாய். 'அதுவும் ஒரு நன்மைக்கே' என்று கொள்ளும் ஒரு பக்குவ அறிவினை நீ தாராய். உத்தமர்களான மனிதர்தம் கூட்டுறவு எனக்கு வலுவில் தானே வருமாறு இன்றைய தினப்பொழுதை இசைய வைப்பாய். என் இறைவா ! சரணம் சரணம்.

அடியவன் முகம் பாரையா ! உனை
யன்றி காப்பவ ராரையா !

படியிலுந்தனை பாவி தாவிப்
பற்றி னேன் தய வுற்று மேவி—(அடியவன்)

சுகுணச் சுமங்கல வாசனே !—தொழுகும் அடியவர் நேசனே !
நிகலச் சராசர போசனே!—நீடு புகழ் ஜகத் ஈசனே ! (அடியவன்)

அறைதற் கருதுயர் வம்பு—மதிகப்பட வயர்ந்து வெம்புஞ்
சிறியேற் கருள்புரி ததும்பும்—திவ்யக்கிர்பை வாரி நம்பும் (அடியவன்)

துங்கச் சுயம்பென மதிக்குந்—தூயா ! தயைமிக திதிக்கும்
பொங்கப் பரமனே கதிக்குப்—போற்றிச் சதநிதந் துதிக்கும் (அடியவன்)

***

**கைகால் முகம் சுத்தி செய்து, அல்லது ஸ்நானம் செய்த பிறகு செய்ய வேண்டிய பிரார்த்தனை:**—எனது குடும்பத்தின் குலதெய்வமே! குடும்பத்தலைவனே! எவர் கைவிடினும் என்றுமே என்னைக் கைவிடாத தயாளுவே! சத்தியஞான லோலனே! உமது அருளை நாடி வணங்கச் சித்தமாகின்றேன். ஸர்வசக்தியும் ஜீவகாருண்யமும் உள்ள கடவுளே! உமது கருணைப் பிரகாசம் இங்கே உதயமாகுக. நான் உம்முடையவன். உம்மையே கதியாகப் பற்றியவன். தேவரீர் என்னிடம் வருவீராக. பிரபஞ்சத்தின் கர்த்தனே ! பக்தர்களின் பரம பந்துவே! உதவியற்றும், போதிய சுகமற்றும், தாங்குதற்கேற்ற

---

இதில் அடங்கியுள்ள பிரார்த்தனைகளைப் பாலகர் பாலிகைகளுக்குப் போதிப்பதுமன்றி, நீங்களும் அனுஷ்டித்துவரின் மிகவும் மேன்மையைத் தரும். இவற்றை நித்திய பிரார்த்தனைகளாகவும் கொள்வது நலம்.

சக்தியற்றும் இருக்கிற என்னை உமது கிருபையால் இரக்ஷிப்பீராக. ஸ்வாமி! எனக்கு நீரே தாயும், நீரே தந்தையும், நீரே பந்துவும், நீரே சிநேகிதனும், நீரே வித்தையும், நீரே தருமமும், மற்றெல்லாமும் நீரேயாகையால் உம்மை நமஸ்கரிக்கின்றேன். கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கும் உள்ளமுவந்து அமுதளிக்குந் தந்தையே! உமது கட்டளையின்படி உலக நன்மையின் பொருட்டுச் சம்சாரத்தை நிர்வகிக்கப் பிரவர்த்திக்கின்றேன். தேவரீர் எனக்கு இட்ட கடமையைத் தொடங்குகின்றேன். எனது துர்க்குணங்களையும், துக்கங்களையும், சோதனைகளாகரங்களையும் உமது கிருபையினால் எப்போதும் நீக்கி, என் கை மேலாக, என் வாக்கு மதிப்பாக, அது எவருக்கும் தித்திப்பாக, என் இதயம் தூய்மையாக, என்றும் உம்மையே துதித்து நினைப்பதாக—செய்வித்து, இம்மைக்கும் மறுமைக்கும் நன்மையானதை நல்கி பேரானந்தத்தைக் கடாக்ஷிப்பீராக. சாந்தி : சாந்தி : சாந்தி: ஓம் தத்ஸத்.

***

**உண்ணப் புகுமுன் செய்யவேண்டிய பிரார்த்தனை** :—அன்னபூரணராகிய அந்தராத்துமாவே! இவ்வுலகத்து எல்லா பாடுகளும் இச்சிறு உணவுக்கே. இந்த உணவும் பாகமும் கொண்டுள்ள ருசிகரத்தின் முதல் பகுதியை உமக்குப் பக்தியுடனே ஸமர்ப்பிக்கின்றோம். இந்நல்லுணவை சமாதான சாந்தமாய் சந்தோஷ திருப்தியுடன் நாங்கள் அருந்தக் கிருபை உதவவேண்டும். இந்த அன்னபானாதிகள் எங்களுக்கு உத்ஸாகத்தையும், பலத்தையும், எங்களுக்குப் பின் மறைந்துள்ள சக்தி தத்துவத்தையும் பெருக்கும்படி அருள் புரிதல் வேண்டும். உணவு ஊட்டும் தயாநிதியே! உமது நாமம் என்றும் வாழி.

***

**தொழில் அல்லது உத்தியோகத்தில் புகும்போது செய்யவேண்டிய பிரார்த்தனை** :—பரமாத்மாவே! என்றும் ஒரே எல்லையின் வரவுதானா? அதிகம் காண இனி அருள்வாய். பெரிய வரவுடன் இதன்முன்பு தொடர்ந்து காத்த சிறு வரவையும் பின்பற்றி வரச் செய்வாய். மீறியே அதிகம் வந்து மிகுந்து தங்கி நின்று, அது ஒரு நிதியாகி, பின்னுக்கு ஒரு தைரியத்துணையாகி, அயர்ந்து சோர்ந்திடுங் காலத்து அது உதவியாகி—நான் உயர்வு கொள்ள உதவுவாய். என்னைப் பாபசிந்தையிலும், பாபகாரியத்திலும் விழாமல் பாதுகாத்து, இந்த உலக மாயையில் இருந்து விடுவிப்பாய். பிறர் மறந்ததையும் எடுத்துக்கொடுக்கும் நற்குணத்தை நாளும் நாளும் வளர்ப்பாய். சத்திய வாசகத் தூய்மை ததும்ப வைப்பாய். நன்மை, தீமை, இன்பம், துன்பம், சம்பத்து விபத்து—எதுவரினும் எனது சபல புத்தியை உண்மையே நிறைந்த ஸ்திரமான நிலைக்குக் கொண்டுவந்து, பொருள் ஆசையிலிருந்து விடுவித்து, உமது திருப்பாத கமலத்தில் இருத்திப் பாவக்கடலைக் கடக்க எனக்குக் கிருபை செய்தல்வேண்டும். இன்று நான் தொடங்குவன யாவையும் வெற்றியோடும் முடித்தருள்க. நம்பினேன் கைவிடேல் எனையே. ஓம் தத்ஸத்.

---

**வீண் சடங்கில் சிலர் விரயங்கள் செய்கிறார்,**
**வீண் சம்பங் காட்ட வேது கடன்கா ராகிறார்,**
**மாணபிலாத பேய்க் கூத்துக ளாடுகிறார்,**
**மதிகேட்ட வழக்கத்தால் வறுமைக ளடைகிறார்.**

**இரவு ஸ்யனத்திற்குமுன் செய்யவேண்டிய பிரார்த்தனை :**—பேரானந்தக் கடவுளே! எவ்வளவோ செலவுகளுக்கிடையில் இன்றையபொழுது உமது அருளாற் கழிந்தது. எனது இளைப்பும் களைப்பும் நீர் பிரஸாதித்துள்ள நித்திரையால் ஸாந்தி பெறுவதாக. இன்று முற்றும் என் பக்கத்தில் துணையிருந்து காத்ததுபோன்று என்றும் என்னை ரக்ஷிக்கவேண்டுகின்றேன். இந்த ஒருநாட் கடலைச் சமாளித்து நீந்துதற்குச் சக்தி தந்தை என் தந்தையே! ஆருயிரே! தேவதேவே! இந்த வீட்டையையும் இதிலுள்ள ஸகல பொருள்களையும் உமது திருவடியில் ஸமர்ப்பிக்கின்றேன். இதை யுமது பரிசுத்தத் தன்மையினால் புனிதமாக்கி இதில் வாழும் நின் அடியரை ஆசீர்வதிப்பீராக. உமது ஏவலால் இன்று யான் செய்த செயல்களும் நினைத்த நினைவுகளும் முடித்த காரியங்களும் உமது அருளே. அவையாவும் உமக்கு அர்ப்பணம்! அர்ப்பணம்!

(வேதாந்த சோபனக் கும்மிப் பாட்டு.)

சோபனமே சோபனமே—சுபசோபனந் தமிழ்ப்பாட
ஆதிபுங்கவனுக்குச் சோபனம், அருட்கோடையோனுக்குச்சோபனம்,
சோதிசுயம்புக்குச் சோபனம், சுருதிமுடிவுக்குச் சோபனம்,
மூவுலகேந்திக்குச் சோபனம், முன்னோன்வேதாவுக்குச் சோபனம்,
மூவுலகாளிக்குச் சோபனம், முத்தொழிற்றேவுக்குச் சோபனம்,
பரப்பிரம்மத்துக்குச் சோபனம், பரமேச்சுரனுக்குச் சோபனம்,
பரமபிதாவுக்குச் சோபனம், பராபரவத்துவுக்குச் சோபனம்,
நிருநாமனுக்குச் சோபனம், நீதிபரனுக்குச் சோபனம்,
நிருமலனுக்குச் சோபனம், நிராமயனுக்குச் சோபனம்.
சோபனமே சோபனமே, சுபசோபனந் தமிழ்ப்பாட.

***

"பரம சுகோதய நிலையைப் பழிச்சாயோ நாவே." (பழிச்சல்—துதித்தல்.) நெருங்கிய மணல்போலக் கணக்கிடக்கூடாத அண்டாண்டங்களை யெல்லாம் அளாவி நிற்கின்ற பெரியவனும், ஒரு கடுகிலும் புகுந்திருக்கும் சிறியவனும், பற்றுள்ள அடியார்களுக்குரியவனும், குற்றமுள்ளவர்களுக்கு அருமையாயிருப்பவனும், விஸ்தாரமாகிய கிருபையைவிட்டு நீங்காதவனுமாகிய கடவுளை நாவே நீ ஸ்துதி செய்தாயோ? பேரின்ப சுகம் உதிக்கும் நிலையாயுள்ளவனை நாவே நீ ஸ்துதி செய்தாயோ? இனியேனும் செய்யக்கடவாய். இக்கருத்தைப் பின்வரும் பாடலிற் காண்க.

அடர்ந்தமண லெனக்கணக்கி லண்டபகி ரண்டமெலாங்
கடந்துநின்ற பெரியானைக் கடுகினுழை சிறியானைத்
தொடர்ந்தவன்பர்க் குரியானைத் துகளுடையோர்க் கரியானைப்
படர்ந்தவருள் பிரியானைப் பழிச்சாயோ நாவே
பரமசுகோ தயநிலையைப் பழிச்சாயோ நாவே.

---

"தோளோடு தோள் சேர்த்துத் தொங்குகிற தோகைமார் தொகையிலே மிதந்து போனார். அவர்களின் மயக்கத்திலே ஈசனை மறக்க நேரிட்டதா?"

அமிர்தகுணபோதினி
சுக்கிலஹு புரட்டாசிமீ 1உ

# டேவிட் லிவிங்ஸ்டனின் யாத்திரை.

## —ஒரு லோகோபகாரி—

இன்றைக்கு நூற்றுப்பதினறு வருஷங்கட்கு முன்பு, அதாவது 1813-ம் வருஷம் மார்ச்சு மாதம் 19-ம் தேதியில் **டேவிட் லிவிங்ஸ்டன்** ஸ்காட்லாண்ட் தேசத்தில் பிறந்தார். 1913-ம் வருஷம் மார்ச்சு மாதம் 19-ம் தேதியன்று அவர் பிறந்த நூருவது வருஷத்தை ஸ்காட்லாண்ட் தேசத்தாரும், கிறிஸ்துவ தேசத்தார் ஸகலரும் கொண்டாடி மகிழ்ந்தனர். இவருடைய சரித்திரத்தை விஸ்தாரமாய் எழுதுவோமானுல், வெகு ருசிகரமாயும் அதிசயமான ஸம்பவங்கள் அடங்கினதாயும், அதிமானுஷமாயும் இருக்கும். ஆயினும், அவருடைய சரித்திர முழுவதையும் எழுதுவது நமது நோக்கமல்ல வாதலால், அவர் உலகத்திற்குச் செய்த உபகாரங்களை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம். அவர் வாலிபமடைந்த பின்பு ஒரு கிறிஸ்துவப் பாதிரியாக ஆபிரிக்காவின் வடமேற்குப் பாகத்துக்குப் புறப்பட்டுப் போனூர். இப்பொழுது ஆபிரிக்கா தேசமெல்லாம் ஐரோப்பிய தேசத்தாரால் குடியேற்றப்பட்டு, அங்கு பூர்வம் வசித்திருந்த மிலேச்சர்கள் அடக்கப்பட்டு நாகரீகம் பெற்றிருப்பதுபோல் அக்காலத்தில் நூறு வருஷங்கட்கு முன்பு இருக்கவில்லை. டேவிட் லிவிங்ஸ்டனுக்கு முன்பு வடமேற்கு ஆபிரிக்காவுக்கு ஒருவரும் போனதே யில்லை. இவர் உத்தேசித்துச் சென்ற பிரயாணம் கொடி செடியில்லாத மணற்பாங்கு நிலம். மிலேச்சர்கள் வசிக்கும் இடம். **நைல்** நதியின் உற்பத்தி ஸ்தானத்தைக் கண்டு பிடிப்பதும், அங்கிருந்த மிலேச்ச ஜனங்களை அரபி மகமதியர்கள் பிடித்துக்கொண்டுபோய் அடிமைகளாக விற்கும் மகா குரூரமான வழக்கத்தைப் போக்குவதும் இவருடைய நோக்கமாயிருந்தது.

---

ஒன்றை விற்கப்போவதற்குமுன் ஒரு வருஷம் யோசித்துப் பிறகு அதைச் செய்வதில் விசேஷித்த அநுகூலமும் எதிர்பாராத லாபமும் இருக்கிறது.

அரபி மகமதியர் மிலேச்ச ஜனங்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று கிழவர்களையும் குழந்தைகளையும் கொன்றுவிட்டு ஆண்மைப் பருவமுள்ளவர்களை அடிமைகளாக்கிக் கப்பலேற்றிப் பற்பல இடங்களுக்கு விற்பது வழக்கமாயிருந்தது. ஐரோப்பியர்கள் அங்குபோய் வரும்வழக்கம் ஏற்படுமானால் அந்தக் கொடிய வியாபாரம் நின்றுவிடுமென்று லிவிங்ஸ்டன் நம்பினார். நம்பி முப்பது வருஷகாலம் அதே வேலையாய் அந்த மிலேச்ச ஜனங்களோடு நேசம் செய்துகொண்டும், அடிமை வியாபாரத்தின் கொடூரங்களை ஐரோப்பியர் அறியும்படி வெளிப்படுத்தியும், தாம் சென்ற இடங்களில் பார்த்த ஸகல வஸ்துக்களையுங் குறித்துப் புஸ்தகமாக எழுதியும் வந்தார். பயங்கரமும் அசாத்தியமுமான இப்பிரயத்தனத்தில் ஆரம்பத்திலேயே இவருக்கு ஒரு பெரிய விபத்து நேரிட்டது. இவர் போன வழியில் ஒரு காட்டில் ஒரு சிங்கம் இவரைத் தாக்கி, அதுவும் இவருமாய்ப் போர்புரிய நேரிட்டு அது சுடப்பட்டும் இவர் ஒரு காலில் காயம்பட்டும் ஊனமாய்ப் போயிற்று. இன்னும் எவ்வளவோ ஆபத்துகள் இவருக்கு நேரிட்டன. ஜனங்கள் வசிக்காமலும், கேவலம் முகமறியாத முரட்டுத்தனமான மிலேச்ச ஜனங்கள் அடங்கியதும், வெகு தூரமாயும் உள்ள பிரதேசத்துக்குப் போவதை எண்ணி லிவிங்ஸ்டன் ஒரு மருந்துப் பையைக் கையோடு கொண்டு போனார். அந்த மருந்துப்பை நடுவழியில் திருட்டுப் போயிற்று. இவர் கதையை வாசிப்பின் திடுக்கிடும்படியான எவ்வளவோ அதிமானுஷமான ஸம்பவங்கள் நிறைந்திருக்கக் காணலாம். இந்த நிகழ்ச்சிகள் ஐரோப்பாவுக்கு எட்டுவதற்கு எவ்வித ஸாதனங்களுமில்லை. இவர் இருந்த இடத்துக்கும் நாகரீகமுள்ள உலகத்துக்கும் தந்தி தபால் ரயில் முதலிய போக்குவரத்து வசதிகளுண்டா? அங்கிருந்து தபால் எழுதினால் ஸ்காட்லண்டுக்கு வந்துவிடுமா? நரமாமிசம் தின்னும் ஜனங்கள் வசிக்கும் தேசம்; சிம்மம் போன்ற காட்டு மிருகங்கள் வசிக்குங் காடுகள்; புற்பூண்டு செடிகள் மரம் மட்டை எவ்வித பசுமையான வஸ்துகளும் காணப்படாத பாலைவனம்; உணவும் ஜலமும் கிடைக்காத வரண்ட பூமி. இப்படிப்பட்ட இடத்தில் தமது உழைப்பையெல்லாம் செலவிட்டு, முடிவில் எங்கோ ஒரு மூலையில் லிவிங்ஸ்டன் இறந்துபோனார்.

***

லிவிங்ஸ்டன் நைல் நதியின் உற்பத்தி ஸ்தானத்தைக் கண்டுபிடிக்கப் போய் வெகு காலமானபடியால் அவரைப்பற்றி ஸ்காட்லண்டிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் எந்த சமாசாரமும் தெரியாமல் கவலைமட்டும் அதிகப்பட்டுக்கொண்டு வந்தது. அமெரிக்

---

"அறிவு தெளிந்தது முதற்கொண்டு துன்பமே காண்கின்றேன், சந்தோஷம் சிவப்போ—கருப்போ யான் அறிந்திலேன்!"

காவில் "நியூயார்க் ஹிரால்ட்" என்ற பத்திரிகையின் அதிபரான டாக்டர் ஸ்டான்லி என்ற ஒருவரை லிவிங்ஸ்டனின் சமாசாரத்தைத் தெரிந்துவர நைல் நதியின் உற்பத்தி ஸ்தானத்துக்குச் சென்று வரும்படி யனுப்பினர். லிவிங்ஸ்டனுடைய தைரியத்துக்கு இரண்டாவதாகவே ஸ்டான்லியின் தைரியத்தைச் சொல்லவேண்டும். ஸ்டான்லி தகுந்த முன்னேற்பாடுகளுடன் புறப்பட்டுப் போனர். பசி, தாகம், பிணி, பயம் யாவற்றையும் சகித்துக்கொண்டு நைல் நதியின் உற்பத்தி ஸ்தானத்தை நோக்கிச் செல்லவே, அதற்கு ஸமீபமாய் ஓரிடத்தில் லிவிங்ஸ்டன் இறந்துபோனரென்று கேட்டுத் துக்கப்பட்டார். இவர் இறந்துபோன இடத்தை யறிந்து இவருடைய பிரேதசேஷங்களையும் கண்டு, அவைகளுடன் அமெரிக்காவுக்குத் திரும்பி, ஸ்டான்லி அவர் அஸ்திகளை ஸ்காட்லண்ட் தேசத்துக்கு அனுப்புவித்தார்.

***

லிவிங்ஸ்டனுடைய பிரயாணம் ஆபிரிக்காவின் அந்த பாகத்திற்கு ஐரோப்பியர் செய்த முதற் பிரயாணம். அவர் பிரயாணத்தினல் உலகத்துக்கும் ஆபிரிக்கா ஜனங்களுக்கும் அளவற்ற நன்மை யுண்டாயிற்றென்று நாம் சொல்லவேண்டியதில்லை. ஆபிரிக்கா ஜனங்கள் பச்சை மாமிசம் புசிப்பவர்களாய், உடுக்கத் தெரியாதவர்களாய், காட்டு ஜனங்களாக வசித்துக்கொண்டிருக்க, அவர்களின் மத்தியில் வயதுள்ள ஸ்திரீ புருஷர்களை அடிமைகளாய்க் கப்பலேற்றி விலைக்கு விற்கும் வழக்கம் நடந்துகொண்டிருக்க, இவற்றையெல்லாம் நிவர்த்திப்பதற்காக லிவிங்ஸ்டன் சலியாப்பிரயத்தனங்கள் செய்து வந்தார். அந்த ஜனங்களின் பரிதாபமான நிலைமை லிவிங்ஸ்டனுடைய பிரயாணத்தினல் முடிவுற்றது. ஆபிரிக்காவில் அடிமை வியாபாரம் வேரோடு அற்றுப் போய் அந்த ஜனங்கள் வரவர நாகரீகம் பெற்று, நல்ல ஜீவனம் செய்யக் காரணம் ஏற்பட்டிருப்பது லிவிங்ஸ்டனுடைய பிரயாணத்தின் பலனெனல் வேண்டும். இப்பொழுது ஐரோப்பிய ஜாதியார் பலர் ஆபிரிக்காவில் எங்கு பார்த்தாலும் குடியேறி வாழ்வதுமன்றி, அங்கு பூமியின் மேற்புறமும் அடிப்புறமும் கொடுக்கக்கூடிய ஸகல பொருள்களையும் பெற்று உலகத்தாருக்கு வழங்குவதும் லிவிங்ஸ்டனுடைய பிரயாணத்தின் பலன்.

***

இந்தக் கதையை இவ்வளவுடன் நிறுத்துகிறோம். லிவிங்ஸ்டனுடைய முழு சரித்திரத்தையும் விஸ்தாரமாய் எடுத்தெழுத நமக்கு இடமில்லாமைக்கு விசனப்படுகிறோம். இவ்விதமாகவே

---

கணவனுடைய வேலைகளுக்கு உதவாத மனைவி அவனுக்கு ஒரு பாரமான தீராச் சனியனே, அவளைக் கொண்டது பூர்வத்தில் செய்த பாபம்!

இந்தியாவிலிருந்து அன்னிய தேசங்களுக்கு மதாவேசத்தால் பிரயாணம் போனவர்கள் இல்லாமலில்லை. பௌத்த மதாசாரியர்கள் இந்தியாவுக்கு வெகுதூரத்துக்கப்பால் மேற்கிலும் கிழக்கிலும் உள்ள தேசங்களுக்குப் பிரயாணம் செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த மதாசாரியர்களில் எவருடைய சரித்திரமும் லிவிங்ஸ்டனுடைய சரித்திரத்தைப்போல் எழுதிவைக்கப்படவில்லை. லிவிங்ஸ்டன் தாம் செய்தது, கண்டது, கேட்டது—இவைகளை விஸ்தாரமாய் எழுதி வைத்ததுபோல் பௌத்தமதாசாரியர்கள் எவரும் எழுதிவைத்த தில்லை. மத ஸம்பந்தமா யில்லாவிட்டாலும், வேறு விஷயஸம்பந்தமாய் நம் முன்னோர்கள் ஆச்சரியமான பெருங்காரியங்கள் பல செய்யாமலிருக்கவில்லை. இவர்களுடைய சரித்திரமும் எழுதிவைக்கப்படவில்லை. ஸ்காட்லண்ட் தேசத்தார் லிவிங்ஸ்டனுடைய சரித்திரத்தை நூற்றுப் பதினாறு வருஷங்கள் பூர்த்தியாகியும், இப்போதும் நினைத்துப் படித்து, ஸந்தோஷப்பட்டு, கௌரவமும் பெருமையும் அடையக்கூடியதுபோல், நாம் கௌரவமும் பிரதாபமும் பெறக்கூடியதாய் எவருடைய சரித்திரத்தையும் எழுத்தில் படைக்கவில்லையே யென்று துக்கிக்கிறோம். லிவிங்ஸ்டனைவிடப் பிரமாதமான காரியங்களைச் செய்து முடித்த பெரியோர்களின் சரித்திரங்கள் புராணங்களில் எழுதப்பட்டிருக்கின்றன. அவ்விதம் எழுதியிருந்தாலும், நம்மவர்கள் கண்ணால் பார்த்து நேரில் அனுபவித்த எந்தப் பெரியோருடைய சரித்திரத்தையும் தெளிவாக அறிந்துகொள்வதற்குக் கூடவில்லை. இது நமது ஹீனஸ்திதிக்கு முதற்காரணமாகும். நமது முன்னோர்களது அரிய செயல்களின் ஸம்பந்தமான சரித்திரங்களை இத்தேசஜனங்கள் தம் பொதுப் பொக்கிஷமாக மதிக்கும்படியான உயர் வெய்துமாறு செய்து, அந்த அரும்நிதியை விலையற்ற பொக்கிஷம்போல் சேமித்து, உலகத்தாரின் வியப்புக்கும் நன்மைக்குமாக எடுத்துக் காட்ட நாம் சக்தியற்றவர்களா யிருக்கின்றோமென்கிற துக்கம் தேசபக்தன் எவனுக்குத்தான் உண்டாகாது? இந்தியாவுக்கு நேரிட்டுள்ள குறைகள் அந்தோ! ஒன்றிரண்டா?

> உன் கத்தியைப் போக்கடித்து விட்டதால் உனக்குத் தர இப் புதுக் கத்தியை வாங்கினேன் என்கிறான். உண்மை என்ன? பழய கத்தி நல்ல உருக்கும் கருக்குமுள்ளது. அதைத் தான் எடுத்துக்கொண்டு இப்புதிய கத்தியைத் தருதலாகும். இதன் கூர்மை சில தினங்களுக்கே. இதற்கே ஒப்பாரிஉறவு— டக்கு—என்பது. இது பிறகு வெளிவந்து ஆத்திரக்காரர் சொல்லிக்காட்ட, மற்றவரோ தம் மனதில் வைப்பர்.

# பிரபஞ்சதரிசனம்



## அக்பர் சமஸ்தானத்தின் உன்னதம்.

## IV

பீஜ் என்பவர் அக்பர் பாதுஷாவினுடைய காலத்தில் நடந்த விசேஷங்களைச் சரித்திரமாக எழுதிவரும்போது அவர் சகோதரராகிய அபுல்பேஜல் என்பவர் தேச முழுமையும் வித்தியாசாலைகளை ஏற்படுத்தினர். அந்தச் சாலைகளில் சுதேசத்தார் புறதேசத்தாருடைய சரித்திரத்தையும் வித்தையையும் படித்து வந்தார்கள். புறதேசத்தாருடை புத்தகங்களை இந்து தேசத்துப் பாஷைகளில் மொழி பெயர்த்து ஜனங்களுக்குக் கற்றுக்கொடுத்தார்கள்.

***

அக்பர் பாதுஷாவினுடைய காலத்தில் அவர் ஏற்படுத்திய பாடசாலைகளில் அவரவருக்கு வேண்டிய வித்தையைக் கற்றுக் கொண்டார்கள். அவர் மொகல் பாஷையைப் பிரதானமாகக் கொள்ளவில்லை. குடிகள் எல்லோரும் அரசனுடைய பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் உத்தரவு செய்யவில்லை. அரசன் குடிகளுடைய பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவருடைய கோட்பாடு. ஜனங்களெல்லோரும் அவருடைய பாஷையைப் படித்துத்தான் நாகரீகமடைய வேண்டுமென்று அவர் ஏற்பாடு செய்யவில்லை. ஜனங்கள் கிளிப்பிள்ளையைப் போல் பேசக் கற்றுக்கொள்வதில் என்ன பயன்? அவர்கள் சீர்திருத்தமடைந்து க்ஷேமமாக இருக்க வேண்டுமானல் அவர்களுடைய சொந்தப் பாஷையைக் கற்கவேண்டுமென்றும், அதுவன்றி வெளித்தேசத்தார் பாஷையைக் கற்பதில் விசேஷப் பயனில்லையென்றும் அக்பர் பாதுஷாவுக்கு நன்ருகத் தெரியும்.

***

இப்போது நடக்கிறதைப் போல் ஜனங்கள் அவர் காலத்தில் பல வருஷம்போல லாயர்பாஷையை வாசிக்க வேண்டிய நிபந்தனையில்லை. பாரசீக தேசத்தார் சாகித்தியமும், அரபி தேசத்தார் சாஸ்திரமும், மற்றப் புறத் தேசத்தார் சமயாசார நூல்களும் இந்து தேசத்துப் பற்பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டன. இவ்வாறு குடிகள் யாவரும் பிரயாசையின்றி வாசித்தறிந்து நாகரீகமடைகிறதற்கு ஏதுவாயிற்று.

***

பாதுஷாவினுடைய ராஜாங்க நிர்வாகமும் அரிய குணங்களும் யாவராலும் புகழத் தகுந்தனவா யிருக்கின்

றன. இவற்றைவிட ஆச்சரியப்படத் தக்க விசேஷமான குணம் அவரிடத்திலிருந்தது. மகம்மதிய ரெல்லோரும் புறச்சமயங்களைவேரோடுகளைந்து நாசஞ்செய்ய வேண்டுமென்கிற கருத்தினராய் அச்சமயம் இருந்தார்கள். அக்பர் பாதுஷாவானவர் மகம்மதியராயினும் அவருக்குக் கீழ்பட்ட குடிகளுடைய மதாசாரங்களைப் பற்றிக் கவனித்தவரே யல்ல. அவரவருக்கு இஷ்டமான மதத்தை அநுசரிக்கும்படி விட்டுவிட்டார். இந்த தயாள குணத்தினால் அவருக்கு "ஸர்வஜன ரக்ஷகன்" என்று ஜனங்கள் பெயரிட்டார்கள்.

***

அக்பர் பாதுஷாவானவர் சாதாரண மதங்களில் சேர்ந்தவரல்ல. கடவுள் ஒருவர் உண்டென்றும், அவரைத் துதிக்கவேண்டியது தம்முடைய கடமை யென்றும் எண்ணியிருந்தார். அவருடைய தேசத்தாரைப் போல் அல்ப மதபேதங்களில் தலையிடார். கடவுளை அறிவினலறிந்து பூசை பண்ணவேண்டு மென்றும், எந்த வேதத்தையும் முற்றிலும் நம்பக்கூடாதென்றும் அவர் எண்ணம் கொண்டிருந்தார். ஹிந்துக்களென்றும் மகம்மதிய ரென்றும் பேதம் செய்யாமல் அவ்விரு சமயத்தாருக்கும் உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுத்துவந்த அரசர் அவர் ஒருவரே. அவருக்கு முன்னிட்டு ஒருவரும் இருந்ததில்லை. ஹிந்துக்களுக்கும் மகம்மதியருக்கும் இருந்த பகையை மாற்றி அவர்களை ஒருமித்துச் சமாதானமாக வாழச் செய்து, அப்படி ஐக்கியமான ஒரு ஜாதியாருக்குத் தான் அரசனாகஇருக்க வேண்டு மென்று பாடுபட்டார். தான் எண்ணிய வண்ணம் நிறைவேறும் பொருட்டுக் "கடவுள் ஒருவரே, தாம் அவருடைய தீர்க்கதரிசி" என்றும் சொல்லி அந்தக் கொள்கையைப் பரவச் செய்தார்.

***

மகம்மதியருக்குள் பூஜை, விரதம், புண்ணியயாத்திரை, கோயில் தொழுதல் முதலியவை யெல்லாம் அவரவர் இஷ்டப்படி நடத்தலா மென்று உத்தரவு செய்தார். பன்றி யிறைச்சியைப் புசிப்பவருக்குத் தண்டனை யில்லை யென்று விதித்தார். மிதமாக சாராயம் குடிக்கலா மென்றும், காலப்போக்குக்காகப் பாச்சிகை யாடலாமென்றும், பன்னிரண்டாவது வயதுக்கு முன்பாக சுன்னத்துக் கல்யாணம் செய்யக்கூடா தென்றும் சட்டம் ஏற்படுத்தினர்.

***

ஹிந்துக்கள் பலி கொடுப்பதையும், கொடுமையான சத்தியம் செய்வதையும், சரியான வயது வருவதற்கு முன் விவாகம் செய்வதையும் மனவொப்ப மில்லாமல் விதவைகள் உடன்கட்டையேறுவதையும் கூடாதென்று தடுத்தார். விதவைகள் இஷ்டமிருந்தால் புனர் விவாகம் செய்து கொள்ளலா மென்றும் உத்தரவு செய்தார்.

***

ஒவ்வொருவரும் அவரவருடைய தோற்றத்தின்படி கடவுளை பூஜை செய்யும்படி இடங்கொடுத்துப் பெருமை யடைந்தார். தாம் அனுசரித்த சமயத்தை அனுசரியாதவர்களை அவருக்கு முன்னிருந்த அரசர்கள் நிர்ப்பந்தம் செய்ததுபோல் அவர் எக்காலத்தினும் செய்ததில்லை.

(தொடரும்.)

---

கெஞ்சிக் கேட்பவனை நாளைக்கு ஆகட்டுமென்று அனுப்பிவிடுகிறார்கள். கண்டிப்பாய் அடத்துடன் கேட்பவனுக்கு அப்போதே கொடுத்தனுப்புகிறார்கள். ஏமாறியவனுக்கு எங்குபோனலும் பட்டுக்குல்லாதான் போலும்!




# கமலாவதி

(All Rights reserved by the Author.)

(208-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 11

கோழி கூவும் தருணமாயிற்று. இஸ்லாமியர் அதிக நேரம் தூங்குவதற்கில்லை. ஆலசியம் செய்வது ஆபத்தென்றெண்ணி பத்ஜிங்கு உடனே சண்டை யாரம்பிக்க சங்கநாதம் செய்தான். அவர்கள் ஆர்த்தெழுந்து அகழியைத் தாண்டி அப்பாலுள்ள கோட்டை மதிலடியில் தாம் கொண்டுவந்த ஏணிகளை வைத்து அவற்றில் ஏற ஆரம்பித்தார்கள். இருட்டானதால் அவர்களைக் காண்பவர் யாருமில்லை. முதன் முதல் பத்ஜிங்கு ஏற, அவன்பின் இஸ்லாமியர் ஒருவர்பின் ஒருவராக ஏறிக் கோட்டைக்குள் குதித்து, அங்குள்ள காவலாளரைக்கொன்று கோட்டைமத்தியிலிருந்த கொலுமண்டபத்தில் நுழைந்தார்கள்.

***

காவலாளர்க்குள் தப்பிய இருவர் சங்கத்தொனி செய்ய, அங்கிருந்த ராஜபுத்திரர் விழித்தெழுந்து கொலு மண்டபத்தை நாடி ஓடிவந்தார்கள். சிறியோர் உயிரை அலக்ஷியஞ் செய்வராதலால் கத்தியும் கேடகமுமல்லாது வேறு ஆயுதங்கள் அணிந்திலர். பெரியோர் தேக முழுமையும் இருப்புக் கவசமும் அநேகவித ஆயுதங்களும் தரித்துநின்றனர். இருதரத்தாருக்கும் சண்டை யாரம்பித்தது.

***

இஸ்லாமியர் நிரை நிரையாக அணிவகுத்து நின்றமையாலும், ராஜபுத்திரர் தூக்க மயக்கத்தில் சிதறிக் கிடந்தமையாலும் ராஜபுத்திரர் இஸ்லாமியரால் கொல்லப்பட்டனர். மிகுந்தவர் கோயில் கொத்தளங்களில் ஓடி ஒளித்தார்கள்.

***

இஸ்லாமியர் கொலு மண்டபத்தில் நுழைந்து சுவரிற் பதித்திருந்த பலவர்ணக் கண்ணாடிகளையும், அநேகவித சித்திரங்களையும், கீழே பரப்பியிருந்த சலவைக் கற்களையும், தங்கத் தகட்டுகளையும், விநோத விளக்குகளையும், சூத்திரப் பாவைகளையும் கண்ணுற்று வியந்தார்கள். சிலர் கோயி

இரண்டு ஆசிரியர்கள் சேர்ந்து ஒரு நூல் இயற்றியதாகச் சொல்வதில், எவர் அதிகமாக உழைத்த உழைப்பாளி என்பது வெளிக்குத் தெரிவதில்லை.

னுக்குள் நுழைந்து சிலைகளை யுடைத்து, மண்டபங்களைப் பெயர்த்து நகைகளையும் பொன்களையும் கொள்ளையாடினர். வேறு சிலர் அரசிளங்குமரிகளை அவமானம் செய்ய எண்ணிக் கொலுமண்டபத்தை யடுத்த கன்னிமாடஞ் சென்றார்கள். அன்னையற்ற பால்மணம் மாறாப் பாலர்க்கும், ஆதரவற்ற அரிவையர்க்கும் தாயினும் நல்ல தயாபரன் துணை நிற்பாரென்பர் பெரியோர். அந்தப்புரத்தைக் காவல் புரிந்த ராஜபுத்திரர் சிலரேயாயினும், அவர்கள் வேண்டிய ஆயுதங்கள் அணிந்திலரேனும் இஸ்லாமியர் மாடப்படிக் கட்டில் ஏறும்வரை சும்மாவிருந்து அப்பால் அவர்களைக் கீழே தள்ள இஸ்லாமியர் ஒருவர் மேலொருவராக விழுந்து மடிந்தார்கள்.

***

அச்சமயத்தில் பத்ஜங்கின் கொம்போசை கேட்டது. இஸ்லாமியர் அனைவரும் ஒன்றுகூடி கொள்ளையடித்த பொருளைக் கொண்டு போக யோசித்தார்கள். ஆனால், பத்ஜங்குக்கோ அவ்வித எண்ணமில்லை. அவன் வேண்டியது பொன்னும் அல்ல; பூமியும் அல்ல. பொன்னைப் போன்ற மேனியும், பூமகள் போன்ற அழகும் உள்ள கமலாவதி யன்றோ? அவ்வம்பொன்மாது தன் அகத்தைக் கொள்ளை கொள்ளவும் அவளை விட்டுத் தான் திரும்பிப் போவதெப்படி? கரும்பு இருக்குமிடம் வந்த பின்பு அதைச் சுவைக்காது செல்ல மனம் வருமா? இனி உயிர் வைத்திருப்பதால் என் பயன்? பாவம், அவன் என் செய்வான்? தானும் தன் படைகளும் தப்பி ஓடுவதால் கமலாவதிக்காக சண்டையிற் சாவதா? அல்லது அவளது ஆசையைத் துறந்து தன் உயிரைக் காத்துக் கொள்வதா? அவன் இவ்வாறு நெடுநேரம் யோசித்து, உயிரினும் சிறந்த தொன்றும் இல்லையாதலால் ஓடிப் போவதே உசிதம் என்று எண்ணித் தன் படைகளைக் கூட்டிக்கொண்டு கோட்டை மதில் சென்றான்.

***

அங்கு அவர்களிற் சிலர் மதில்களிலேறி வெளியில் இறங்கும் தருணத்தில் மேலே காவல் புரிந்த ராஜபுத்திர வீரர் அவர்களை எளிதில் வீழ்த்தினர். மிகுந்தவர் திரும்பவும் கோட்டைக்குள் வந்து சண்டை செய்வதன்றி வேறு வழி காணகிலாது சண்டைக்குத் தயாராயினர். காரிகையரின் கற்பழிக்கவெண்ணிக் கன்னிமாடத்தை மறுபடியும் எதிர்ப்பதென்று மனவுறுதி செய்தனர்.

***

அத்தருணத்தில் அரசனுடைய தூதன் ஒருவன் ஓடிவந்து தான் பத்ஜங்கைக் காணவேண்டுமென்றும், அவனிடம் தனித்துச் சொல்லவேண்டிய சங்கதி ஒன்று உண்டென்றும் உரைக்க, அவனை அவர்கள் பத்ஜங்கினிடம் அழைத்துச் சென்றார்கள். அவன் பத்ஜங்கை நோக்கி "சமாதானமாவது சம்மதம்" என்றான். கன்னிமாடத்தைக் காப்பது சிலரே யாதலால் தன் சேனைகள் அவர்களைக் கொன்று பெண்கள் பலரையும் கற்பழிப்பாரென்று அரசன் அறிவானென்றும், ஆகவே அவன் அதற்கு அஞ்சி இப்போது சமாதானத்திற்கு உடன்படுகிறானென்றும் பத்ஜங்கு எண்ணி, தூதனைப் பார்த்து "அப்பா, சமாதானமென்பது சாமானிய காரியமன்று; என் சேனைகளிற் பலர் மடிந்தாராத

---

வியாபார நண்பர்களுக்கு நேசத்தின்மீதாவது, நேசனுடைய அவசரத்தின்மீதாவது, அவன் பரிதாபக்கோலமாய்த் தத்தளித்து உதவி வேண்டுவதின்மீதாவது கண்போகாமல், அவனால் வரக்கூடிய காசின்மீதே கண்போகிறது.

லால் கோட்டைக்குள் இருப்பாரைக் கொத்தோடு கொன்று அவர்களைப் பழிக்குப்பழி வாங்காது அப்புறம் அடி வையேன். ஆனால் உன் அரசன் மகள் கமலாவதியை நான் கடிமணம் செய்யச் சம்மதப்படின் ஒருகால் சமாதானத்துக்கு உடன்படுவேன்" என்றான்.

***

தூதன் நல்லதென்று எழுந்து போக எத்தனிக்க, பத்ஜங்கு திரும்பவும், "அப்பா இன்னொன்று கேள்; உங்கள் அரசன் தனக்கு வேண்டிய வீரன் ஒருவனை என்னோடு போர் செய்ய ஏற்பாடு நடத்தட்டும். போரில் நான் தோற்பேனாயின் கமலாவதியை மறப்பேன். கொள்ளை ஆடிய பொன்னையும் பொருளையும் துறப்பேன்" என்றுரைத்தான்.

## III

தூதன் வேந்தனிடம் நடந்த சங்கதியை விளம்புகையில், அங்குள்ள வீரர்க்கு சண்டை செய்வது சந்தோஷத்தைத் தந்தது. பத்ஜங்கு தோல்வியடைவானாயின் தங்கட்குக் கீர்த்தியும் புகழுமன்றிக் கமலாவதியும் பிழைப்பாள். அவள் அன்னியன் வசப்படுவதால் தம் குலத்திற்குண்டாகும் தீராப் பழியும் தீரும். ஆகவே, அவர்கள் பத்ஜங்கை எதிர்க்க நான் நான் என்று போட்டி போட்டனர். ஆனால், அரசன் அந்தப் புரத்தைக் காத்துவந்த இராம் சிங்குக்கு உத்தரவு செய்தான்.

***

இராம்சிங்கு இருபத்தைந்து வயதுள்ள இளைஞன். அகன்றுயர்ந்த மார்பும், திரண்டுருண்ட தோளும், முழந்தாள் தடவும் கைகளும் உள்ளவன். கருணைவழியும் கருவிழிகளைக் கொண்டவன். மாண்புடையவன். கத்தி வீசுவதிலும், குத்துச் சண்டையிலும் நிகரற்றவன். பத்ஜங்கை எதிர்க்கும் பாக்கியம் தனக்குக் கிடைத்ததை நோக்கி அவன் மகிழ்வுற்றான்.

(மறு ஸஞ்சிகையில் முடிவு.)

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

போய்விட்டவர்களைப் பற்றிய துக்கம் எவ்வளவோ பெரியது. அவர்கள் விளைத்த விரோதம் சண்டையெல்லாம் இப்பொழுது வெகு அற்பம். அவர்கள் செய்த உதவிகளின்மீதே சதா நினைப்பு. அவர்களைப்போல வருமோ வென்ற அங்கலாய்ப்பு. அத்தகைய பொன்னானவர்களையும் வைது பகைத்த மடமைக்கு இப்போது இரங்கி நோக வைக்கிறது. எவரும் இருந்தவரை லாபமென்று விரோதிக்காமல் அன்பாயிருக்க அப்பியாஸம்செய்.

---

தர்ம வைத்தியசாலைகளில் நியமித்துள்ள வைத்தியர்களிடம் அவர்கள் தரும் மருந்தைப் பல நாள் புசித்தும் குணமில்லையென்றால், தங்களிடம் தனியாக சொந்தத்தில் வைத்தியம் செய்துகொள்ளும்படி தூண்டிவிடுகிறார்கள்.

---

"ராஜீய விஷயத்தில் வேளைக்கேற்றவாறு அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஒருவரோடு உண்மையான தேசாபிமானிகள் எவரும் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளமாட்டார்கள்" என்கிறார் ஒருவர்.

# கவிதா  விலாஸம்

## ஆஸ்திக நாஸ்திக ஸம்வாதம்.

**நாஸ்திகன் :**—கடவுளொருவனெங்கோ இருப்பதாயேதோ நீ
கழறலுற்றாயே விவேகனே—மிகத்
திடமாயதற்கொரு திட்டாந்தமோ சொல்லத்
திறமுனக்குளதோ சொல் விவேகனே.

**விவேகன் :**—புகையைக்கண்டு நெருப்புண் டென் றறிதல்போல்
புவனதோற்றங்கண்டு நாஸ்திகனே—இங்கு
திகழுமுலகத்துக்கே யாதிகடவுளெனத்
தெளியவே வேண்டு நாஸ்திகனே.

**நாஸ்திகன் :**—கடவுளுலகத்தைப் படைத்தாரென்பது சுத்த
கட்டுக்கதைகளல்லோ விவேகனே—கடவுள்
படைக்கும்போது கிட்டயிருந்து பார்த்தவனாரோ
பாமரர் நம்புவார் விவேகனே.

**விவேகன் :**—குடத்தைப் பார்த்தேயிதை நினைத்துச் செய்தவொரு
குயவனுண்டென்பீர் நாஸ்திகனே
அடைவுடை யுலகத்தைக் கண்டே யதைப் படைத்த
ஆண்டவனுண்டெனலாமே நாஸ்திகனே.

**நாஸ்திகன் :**—இடமாருலகத்தைக் கண்டே யிதைப் படைத்த
ஈசனிருப்பானென்பீர் விவேகனே
கடவுளையுங்கண்டு இவரைப் படைத்த வேறு
கடவுளிருப்பாரல்லோ விவேகனே.

**விவேகன் :**—திருத்த வுலகத்தைப் படைத்த கடவுளைச்
சிருட்டித்தவருமுண்டோ நாஸ்திகனே
கருத்தா நித்தியரென்று காணாமலே வீணாய்
கருதாமல் பேசலாமோ நாஸ்திகனே.

**நாஸ்திகன் :**—கடவுணித்தியமானா லுலகே(ன்) னித்தியமாகா
காரணமுரைத்திடாய் விவேகனே—சுத்த
மடயர் மயக்கி வைத்த மாறுபாடுகளிது
மதிகெட்டுப் போகேல் விவேகனே.

---

தங்களை ஊர் முற்றிலும் வெகு தாழ்வாக நினைத்தாலும், தங்களுக்கு மகா மதிப்பு இருப்பதாக நினைத்துக்கொண்டு பிரதாப கம்பீரம்பேசி மற்றவர்களின் மதிப்பை மிகவும் தாழ்வாகச்சொல்வது சில சுயாலப் புலிகளின் வழக்கம்.

**விவேகன்** :—நாமரூபமுள்ள யாவுநசிக்குமென
நவிலுகின்றன மறை நாஸ்திகனே—உலகமும்
நாமரூபமுள்ள தாகையாலே யொருக்கால்
நசித்துப் போவதுதானே நாஸ்திகனே.

**நாஸ்திகன்** :—உங்கள் கடவுளுக்கு நாமரூபமுண்டே
ஒழிந்து போவதில்லையோ விவேகனே—மேலும்
அங்கமுடைய அரியரயயன் முதலானோர்
அழிந்து போவதில்லையோ விவேகனே.

**விவேகன்** :—சர்வஞான சர்வசத்தி வியாபக
சத்திய நித்தியத்துக்கு நாஸ்திகனே—நிற
முருவமேது உட லேது நாமமேது
ஒப்பற்ற வொன்றதற்கே நாஸ்திகனே.

**நாஸ்திகன்**:—இயற்கை சுபாவமா யெல்லா நடக்கின்றதே
ஈச்சுர னேதுக்கோ விவேகனே—ஈசனுக்காய்
கயற்கண் மாதரை விட்டு காட்டிற் கடுந்தவசு
கயவர் செய்கின்றார் வீணே விவேகனே.

**விவேகன்**:—சுபாவத்திலே ஒரு சூத்திர மாடுமோ
சூத்திரதாரி யிலாமல் நாஸ்திகனே
அபாவமா மந்த இயற்கையா தொன்றையும்
அறிந்து தான் செய்யுமோ நாஸ்திகனே.

**நாஸ்திகன்**:—இயற்கையு மெண்ணமு மொத்தப்படி யொத்து
இருக்குமதைச் சொலும் விவேகனே—இரண்டுந்
செயற்கை யாவதற்குத் தெளிவாயொரு திட்டாந்தம்
செப்பு மிப்போதே நீ விவேகனே,

**விவேகன்**:—அக்கினியிற் சூடும் ஒளியும் அபின்னமாய்
அமைதி யுறுகின்றதே நாஸ்திகனே—ஓதும்
முக்கிய முக்குண வஸ்துவன்றி யாதொன்றுமே
முடியா தொருக்காலு நாஸ்திகனே.

**நாஸ்திகன்**:—இந்த வுலகத்தை யெதிலிருந் தெப்படி
ஈசன் சிருட்டித்தான் சொல் விவேகனே—உபகாரண
எந்த ஆயுதங்கொண்டு எங்கே யிருந்து கொண்டு
எத்தனை நாள் சிருட்டித்தான் விவேகனே.

**விவேகன்**:—சர்வ வல்லமையுள்ள சாமி நினைத்தப் போதே
சகலமுந் தோன்றாதோ நாஸ்திகனே
சர்வம் விட்டினியேனுங் கடவுளை நேசித்து
கடைத்தேறும் ஐயா நாஸ்திகனே

---

விலையைக் குறைத்துக் கொடுக்கும்படி எழுதுபவர்களுக்குப் பதில் தராததிலிருந்தே அவர்கள் தெரிந்துகொள்ளும்படி விட்டுவிடவேண்டும்,

**நாஸ்திகன்**:—கடவுளிருந்தக்கால் கண்ணுக்குப் புலப்படா
காரணமேனோ சொல் விவேகனே—இங்கு
கடபடாதிகளை நாம் காண்பது போலவே
காணலாகாதோ சொல் விவேகனே.

**விவேகன்**:—அகக்கண் புறக்கண்ணென விரண்டு கண்களுண்டு
அகக்கண்ணாலே பார் நாஸ்திகனே—அந்த
அகக்கண் குருடாகில் அவனைக் காண்பதில்லை
அஞ்ஞானி யென்போர் நாஸ்திகனே.

**நாஸ்திகன்**:—செயலெல்லா மானுடர் செயலா யிருக்குதே
திஷ்டாந்தமாய்ப் பார் விவேகனே—எல்லாந்
தெய்வச் செயலே செயலென்று பிதற்றுகிறீர்
செய்ததைப் பார்த்தாயோ விவேகனே.

**விவேகன்**:—உழுவதும் விதைப்பதும் ஊற்றுகள் வெட்டுவதும்
ஓதுமக்கள் செயலே நாஸ்திகனே—அது தழைக்க
மழை பெய்விப்பதும் வாரிவருவிப்பதும்
மனிதர் செயலாமோ நாஸ்திகனே.

**நாஸ்திகன்**:—அன்பு மிக்க விவேகரே! உம்மால் இன்றே என் அஞ்ஞானம் விலகிற்று. யாவும் மெய்தான். நீர் சொல்லுவதுபோல மழை பெய்யும் பருவத்தில் பெய்கின்றது, வெயில் காயும் பருவத்தில் காய்கின்றது, காற்று வீசும் பருவத்தில் வீசுகின்றது, பொழுது விடியுங்காலத்தில் விடிகின்றது, அஸ்தமிக்குங் காலத்தில் அஸ்தமிக்கின்றது. கரையின்றி கடல் தடைப்பட்டிருக்கின்றது. ஒரு துளி சுக்கிலமானது கரசரணாதி அவயவங்களாக உருப்பட்டு உயிர் பெற்று மிகவுஞ் சிறிதாகிய கருப்பாசயப்பையினிடத்திற் கட்டுண்டிருந்து பிரசூதவாயு முரித்துத்தள்ள அதோ முகமாய்த் திரும்பி நெருக்குண்டு சிசு உற்பவிக்கின்றது. மனிதர் கோடிக் கணக்கிலும் ஒருவர் முகத்தைப் போல் மற்றவர் முகம் இருப்பதில்லை. இது வெகு ஆச்சரியம். விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ் சாதிகளிலும், மரங்கள், செடிகள், கொடிகளிலும், மலர், காய், கனிகளிலும் எத்தனையோ பேதங்களும் விசித்திரங்களும் இருக்கின்றன. இவைகளைக் கண்டு யோசிக்குமிடத்தில் இன்னதற்காக இன்னது இப்படி யிருக்கவேண்டுமென்று எண்ணிச் செய்த கடவுள் ஒருவர் இருக்க வேண்டுமென நிச்சயப்படுகிறது. ஆகையால், இனி என் நாஸ்திக அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு உம்முடன் சேர்ந்து ஆஸ்திகனாய் விடுகின்றேன். வாருங்கள் நாம் இருவருமாக ஆலயத்திற்குச் செல்வோம்,

ஒருவனுக்குத் தாரம்—மற்றவனுக்கு தாய். ஒருவனுக்கு மகள்—மற்றவனுக்கு—மனைவி. ஒருவன் எஜமானன்—மற்றவன் வேலையாள். இவ்விதமேஉலகம் பொருந்திப் போய் உறவாடுகிறது.

# உன்னிடம் 12-கேள்விகள்.

1. உன்னிடம் ஆயிரம் ரூபாய் கொடுத்தால் அதை எவ்விதம் செல வழிப்பாய்?

2. எப்பொழுது ஒரு பொய் அநு மதிக்கக்கூடியது?

3. நீ குற்ற மற்றவனு யிருக்கையில், நீ ஏமாற்றி விட்டதாக அநியாயமாய் உன்மீது பழி சுமத்தப்பட்டால் நீ என்ன செய்வாய்?

4. நீ ஒரு உதவிக்கு உன் நண்பனிடம் சென்று கோரும்போது, அவன் அதில் பட்டுக் கொள்ளாமல் விலகி, தனது பெருமைப் பிரதாபங்களை மட்டும் நீ அறியும்படி வெகு நீளமாய்க் காட்டிவிட்டு ஒதுங்கிக் கொள்ளுவானுனல் அதற்குமேல் நீ செய்யப்போகிறது என்ன?

5. உன் சரக்குகளை விற்பதற்கு ஒப்புவித்திருக்கிற கடை வியாபாரியிடம் உன் சாமான்களை வருவோரின் பார்வைக்குப் படும்படி முன்பாக வைக்குமாறு வேண்டுகையில், அதற்குக் கடைவியாபாரி, அந்த சாமானைக் கேட்பவரைக் காணேமே, முன்பாக வைத்து என்ன பிரயோஜனம் என்கிருன். மறுபடியும் நீ அவனை வேண்டுகிருய். அதற்கு அவன் கடையிலுள்ள வேலைக்காரனிடம் சொல்லிவிட்டால் அப்படியே அவன் தினமும் உங்கள் சாமான்களைப் பார்வையான இடத்தில் எடுத்து வைப்பான் என்கிருன். வியாபாரி சொல்லாமல் நீ சொன்னுல் வேலைக்காரன் அவ்விதம் செய்வானு? அது இல்லை. வெட்டிப் பேச்சாக உனக்குச் சொல்லும் ஒரு பதில் இது. இதற்கு நீ மறுபதில் சொல்வதும், விருப்பமில்லாத வியாபாரியைக் கட்டாயப் படுத்துவதும் வீண் வேலையே. அதற்குப் பிறகு நீ செய்யப்போவது என்ன?

6. உன் சௌகரியங்களையும், உன்னைப் பராமரித்தலையும் சற்றும் கவனியாத ஒரு பெண் உனக்கு மனைவியாக ஏற்பட்டு விட்டு, பசியோடு ஒரு கவளம் அன்னம் நீ உண்ணப் போகும் வேளையிலெல்லாம் சண்டை சச்சரவு மாவதாகில், அப்படிப்பட்ட ஒரு பெண் நகைகளுக்காக உன்னிடம் நெருங்கித் தொந்தரை செய்யும் போது, நீ அந்த சமயத்தில் மனதில் கொள்ளும் புதிய தீர்மானம் என்ன?

7. அபிப்பிராய பேதங் கொண்ட பத்து மனிதர்களின் நடுவில் நீ இருக்கும்போது எவ்விதமாக நடந்து கொள்வாய்?

8. ஒரு கலகத்தின் நடுவில் முறித்துக்கொண்டு நீ ஒதுங்கி தூரப்போய் சமாதானமாக உன் மட்டில் இருந்து கொள்வதற்கான வழியை எப்படி உண்டாக்கிக் கொள்வது?

9. ஒரு வியாபாரத்தின் தொடக்கத்தில் எந்த லாபமும் காணுதபோது, செய்த செலவும் உன் கைக்கு வராத போது, அதை ஒரு விதமாய் ஒழுங்கு படுத்திக் கொள்வது எப்படி?

10. உன்னை அலக்ஷியம் செய்கிற மனிதர்களுக்கு உன் விவேகத்தைக்

---

ஒரு வியாபார ஸ்தலத்திற்கு வருவோரில் சிலர் அங்கு இருப்பனவற்றையெல்லாம் நுட்பமாக ஆராய்கிருர்கள். வியாபாரியின் முக்கியமான தொழில் மர்மங்கள் பல அவர்களின் கண்கட்கு எதிர்பட்டு விடுகின்றன. வியாபாரியின் மனதுக்கு அது சகியாமல் அவர்களின் வரவுக்கு வருந்தி நடுங்குகிருர்.

கொண்டு கற்பிக்கக்கூடிய கெடுவழியில்லாத-மிகச் சுடுகையாயுள்ள-புத்திமதிகள் எவ்வெவ்வாறிருக்கும் ?

11. உன் அவசரமான வேலையை நீ சொன்ன தவணையில் செய்து கொடுப்பதாய் ஒப்புக்கொண்டு முன்பணமும் பெற்றுக்கொண்ட ஒரு தொழிலாளி, பிறகு உன் காரியத்தைத் தாமதத்தில் போட்டுவிட்டுத் தனது முக்கிய வேலைகளைக் கவனித்துக்கொண் டிருப்பானாயின், ஸாந்தகுணமுள்ள நீ அவ்விடத்தில் அப்பொழுது எவ்விதமான பொறுமையைக் காட்ட உத்தேசிப்பாய் ?

12. (1) உன் வருகையின் ஒரு நாளிலேயே திருப்தி பட்டுப் போய், மறுநாளைக்கு நீ தங்குவதைப் பாரமாக நினைப்போர், (2) நீ அவசரமாய்க் கேட்கும் பதிலைத் தெரிவிக்காமல் அந்த சமயம் மௌனமாய் இருந்துவிடுவோர், (3) தூர விலகிவிட்டு மறுபடியும் தங்களின் காரியார்த்தமாய் உன்னிடம் உறவு பிடிக்க வருவோர்—இத்தகையோரிடம் விவேகமுள்ள நீ இனி நடந்து கொள்ள வேண்டிய வழி வகைகள் எப்படி ?

ஒருவனைப்பற்றித் துவேஷமாய் அநேக புகார்கள் ஒருவரிடம் சொல்லப்பட்டு விடுகிறது. அதைக்கேட்பவரோ அவற்றைக் காண்பித்துக்கொள்ளாமலே அந்த ஒருவருக்கு ஏதும் அறியாத பாவனையில் கடிதம் எழுதி விசாரித்தால், அந்த ஒருவர் தமது விஷயங்களை அவருக்கு எழுதுவதிலும் மௌனமே மேல். தன்மீது கூறிய முன் புகார்களை நம்பி இருபக்கமும் தலையாட்டுவோருக்கு எழுதிப் பயனில்லை.

## அவ்விதம் கேட்பது கேவலம்.

ஒரு கடையில் தனக்கு இருக்கும் கடன் பாக்கியை அக்கடையின் எஜமானன் அல்லது குமாஸ்தா கேட்கலாம். ஆனால் அங்குள்ள சில்லரைச் சிப்பந்திகள் "எப்போது பணம் தருகிறீர்கள் ?" என்று கேட்பது தாழ்மைப் படுத்துவதாகும். இது எஜமானன் தானே சொல்லாமல் அவர்களிடம் சொல்லிக் கேட்கும்படியாகத் தூண்டி விட்டதாகவே ஏற்படும். ஆதலின், உடனே அக்கடனைத் தீர்த்துவிட்டு, "இனி நீங்களே கேளுங்கள்—மற்றவர்களைக்கொண்டு கேட்கச் செய்யவேண்டாம்— அது மிகவும் கேவலம்"— என்றுகடையின் எஜமானனுக்குத்தெரிவித்துவிடவேண்டும்.

# சிக்கன வழக்கம்

அநேக ஜனங்கள் தங்கள் குடும்பத்திற்கு வேண்டிய பொருளைச் சம்பாதித்துக் கொண்டு சௌக்கியமாய் இருக்கலாம். ஒவ்வொரு கூலி வேலைக்காரர்களும் முதலாளியாகி மற்ற ஜனங்களையும் முன்னேற்றமடையச் செய்யலாம். அதற்கு அவர்களிடம் உழைப்பு, முயற்சி, ஸத்யம், சிக்கனம் என்ற நான்கு விஷயங்கள் இருக்கவேண்டும்.

ஜனங்கள் கஷ்டப்படுவது பணமில்லாமையாலல்ல; சிக்கன குணமில்லாமையால் தான். ஒருமனிதன் தன் ஸம்பாத்திய காலத்தில் பின்னுக்கு உதவும்படி சிறிய தொகையாவது மீதி செய்து வரவேண்டும். எத்தனையோ பேர் சிறிய கூலி வேலை செய்து பிழைத்து இப்போது உலகத்திலே ஒரு பெரிய மனிதனாய் விளங்குகிறார்கள்.

சிக்கனமாயிருக்கும் ஒருவனுக்குத் துன்பமும் அவமானமும் ஒருபோதும் வராது. ஊதாரித்தனத்தால் அடையக்கூடாத அநேக சுகங்களை சிக்கனத்தால் அடையலாம்.

சில குடும்பங்கள் திடீரென்று கஷ்ட நிலைமைக்கு வந்துவிடுவதேன்? அக்குடும்பத்தின் ஸம்பாத்திய நாயகர் அவர் தம் நாளில் சற்றும் மீதி வைக்காதிருந்ததே காரணம். இது பெரிய பாவம். குடும்பத் துரோகம்.

ஒருவருக்குக் கஷ்டமும் வியாதியும், திடீரென உண்டாகின் அக்காலத்தில் வேண்டியது பணமே. இதை நினைத்தாகிலும், சிறிது மீதம் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

சுதந்திரமாக ஒருவர் ஜீவிப்பதற்கு சிக்கன குணமே ஆதாரமாதலால் அது உயர்ந்த குணங்களில் ஒன்றாயிருக்கிறது. எவ்வளவு சிறிய தொகையாயிருந்தாலும் கொஞ்சம் சேர்த்து வைத்திருப்பவன் நிலைமை மேலானதுதான். **மாதம் பத்து ரூபாய் வரும்படியுள்ள ஒருவன் $9\frac{1}{2}$ ரூபாயைச் செலவு செய்துகொண்டு 8-அணாவாவது மீதிப்படுத்தி நிதியிற் சேர்த்து வைக்கவேண்டும்.** அந்த மீதி நிதியே பின்னால் அவன் கஷ்டத்தைத் தீர்க்கும் பெரிய ஆஸ்தியாகி விடும். விவேகமுள்ளவர்களுக்கே சிக்கனமும் செல்வமும் விருத்தியாகும்.

“மானிட சுகத்துக்கு வறுமை ஒரு பெரும் சத்துரு.” வறுமை சில தர்மங்கள் செய்வதைக்கூடக்கெடுத்து விடுவதால் அது அணுகாதிருக்க சிக்கனத்தைக் கொள்ளவேண்டும். சிக்கனமில்லாமல் ஒருபோதும் பணக்காரன் ஆக முடியாது. சிக்கனமுள்ள எவனும் என்றும் ஏழை ஆகான்.

சிக்கனத்தால் வரும் நன்மைகள் அநந்தம். சிக்கனம் சிறப்பைத் தரும்.

கா. அல்லா பிச்சை.

---

ஓய்வு என்பதே அபூர்வமாயுள்ள உழைப்பாளிகளான பத்திராசிரியர்களைக் காணவருவோர் நீண்ட பேச்சுகள் வைத்துக்கொண்டு குந்திக்கொள்வதில் அவர்களுடைய அன்றைய தினத்து வேலைகளெல்லாம் தவறுகின்றன.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

# அந்த சரக்கு இருக்கா?



அது தானடா அப்பா! விகடன் கேட்க வந்த கேள்வி. ஓடியும் கிழவிக்குப் பிறகேயா? அப்படித்தானே இருக்கிறது சங்கதி! எவ்வளவு பாடு பட்டாலும் அந்தத் துரதிர்ஷ்டப் புள்ளி தொலையக் காணோமே? காசிக்குப் போயும் கர்மம் விடவில்லையே! ஓடம் விட்ட இடம் அடி சுடுவதும், அடி சுட்ட இடம் ஓடம் விடுவதும்போல, விருத்தியும் தேய்வும் மாறிமாறி வந்தால் எவ்விதமோ சமாளிக்கப் பார்க்கலாம். ஆனால், என்றைக்குமே விருத்தி என்பது சூன்யமாய், தேய்வு என்பதே நிலையாக ஆனாலோ? அது தானே பெரிய சோதனை! செட்டியார் முடுச்கா, சரக்கு முடுக்கா என்றால் இரண்டும் முடுக்காய் இருந்தால் மேலான மேல்தான். சரக்கு முடுக்கா யில்லாவிடினும் செட்டியார் இருக்கிற முடுக்கிலே சரக்கும் விலையேறிவிடும். எங்கேயாவது ஒரு முடுக்கு இருந்தால் அது மற்றொன்றுக்கு உதவி. ஆண் குழந்தை இல்லாத இடத்தில் பெண் குழந்தையாவது இருக்கவேண்டும். பணமில்லாத இடத்தில் உள்ளது போதுமென்ற திருப்தியாவது இருக்கவேண்டும். முகத்தில் அழகில்லாவிட்டாலும் உள்ளத்தில் நற்குணமாவது இருக்க வேண்டும். இருவர் மந்தமாயிருந்தாலும் ஒருவனாவது சுறுசுறுப்பிலிருக்க வேண்டும். கையில் காசு இல்லா விட்டாலும் எவ்விதமும் சம்பாதிக்கலாம் என்கிற தைரியமாவது இருக்கவேண்டும். அப்பொழுது ஒரு சரக்கிலில்லாத முடுக்கு இன்னொன்றிலுள்ள முடுக்கால் சரிப்பட்டுப் போய்விடும். இரண்டு பக்கத்திலும் முடுக்கு இல்லாவிட்டாலோ அங்கு தாண்டா அப்பா தொங்கலாட்டமாய்த் தூக்கில் தொங்கும்படியாய் விடுகிறது! எல்லாமிருக்கிறது பெட்டியிலே, இலைக்கறி கடையச் சட்டியில்லை யென்ற மாதிரியாய், முக்கியமான **முடுக்கான பொருள் இல்லாமல் ஒட்டையாகி, மற்றதெல்லாம் வெளிக்குப் பசந்தாக இருந்தும் தோன்றியும் என்ன பயன்? ஆன**தால் தான் விகடன் அந்த முடுக்கான

---

நேசிப்பதற்கு இலகுவில் கிடைக்காத சிலாது நேசம் பெற்றபின் அவர்களைச் சாமான்யராக எண்ணிவிடுகிறார்கள். இவ்விதம் எண்ணி மதிப்பில் குறைத்தாலும் அப்பெரியோர்களது மதிப்பு எந்நாளும் குன்றுவதேயில்லை.

முக்கிய சரக்கு அததில் புகுந்து கொண்டிருக்கா இல்லையா என்று விசாரிக்கப் புறப்பட்டுக்கொண்டேன்.

***

பெரிய மனுஷன் வீடுதான், வீடு நிறைந்த ஜனம்தான், பெரிய மதிப்புதான், ஆனல் அங்கே சமாதானம்—ஒருமைப்பாடு என்கிற சரக்கு இருக்கா? அது இல்லாத குடி ஒரு மிக்கக் கெடுந்தானே? அங்கு வீட்டுக்காரனின் முடுக்கு கொஞ்சம் இருந்தால் அது அந்தக் கலகக்கோரணிகளை அடக்கியாள உதவியாகலாம். ஒருவனும் பிறப்பா, ஒன்றிமரம் தோப்பா; ஒருவனாய்ப்பிறந்தால் தனிமைதானே என்று உள்ளம் நொந்தால் இருவராய்ப் பிறக்கப்போய் அது பகைமையில் முடிகிறதே! அங்கே ஒருவருக்கொருவர் தழுவிச்செல்கிற உடன் பிறப்பு பாசச் சரக்கு இருக்கா? அந்தச் சரக்கு இல்லாத ஊனமே இவ்விதம் மானம் சிந்தவைக்கிறது. ஏராளமான சொத்தும் ஏராளமான கடனும் கொண்டு பெருமைப்படுவதிலே என்ன லாபம்? கடன் தொல்லைப் பிடித்து ஒழுகாத வீடு உள்ளங்கை அத்தனை இருந்தாலும் போதுமே. அந்த சரக்கு இருக்கா? எவ்வளவோ பேச்சுகள்; கடைசியிலோ அத்தனையும் வெட்டிப் பேச்சுகள்; எருமை இருந்தல்லவா பால் கறக்கவேணும்? இத்தனை மணி நேரத்துப் பேச்சுகளில் நாலு காசுக்கு வழியிருக்கிற சரக்கு இருக்கா? எலும்பு இல்லா நாக்கு எல்லாம் பேசும். பேசினது போலவே நடத்தி வைக்கிற சரக்கு இருக்கா? எல்லாத்துக்கும் உண்டு இலையும் பழுப்பும்; எல்லாத்துக்கும் ஒரு சொட்டு உண்டுதான்; ஆனலும் அவற்றை மூடிவைத்து மறைத்து அதற்காக ஏங்காமல் பொறுத்துக் கொண்டுபோகிற சரக்கு இருக்கா?

***

நாறற் சடலம், நலமில்லா மட்பாண்டமாய் இந்தத் தேகம் இருந்தாலும் இதைக்கொண்டு தனக்கும் பிறருக்கும் பரகதிக்கான வழி தேடிக் கொள்ளக்கூடிய சரக்கு இருக்கா? அது இல்லாமல் இவ்வுலகினில் என்ன வாழ்வு வாழ்ந்தாலும் அது வெறும் பூச்சே. நாறுவாயன் தேட, நல்ல வாயன் தின்ன என்பதாக முடிவதிலே லாபமென்ன? உழைத்துத் தேடியவனே உண்டு அநுபவிக்கும் சரக்கு இருக்கா? கரண்டியைத் தள்ளி அகப்பையால் நெய்யை வாரி ஊற்றி அத்தனை விமரிசையாய் நடந்த கலியாணமாயினும், அங்கே பிள்ளை குட்டிகள் உண்டான சரக்கு இருக்கா? அது இல்லாதபோது அத்தனை ஆயிரத்துக்கும் செலவிட்டதில் என்ன பயன்? அந்த விவாகத்திலே உழைத்தவர்கள் வருந்திக் கதற நேர, காரியம் ஆய்விட்டதென்று அவர்களைத் தெருவிலே விட்டுவிட, அந்த ஒரு பொல்லாப்பும், இன்னும் தான் செய்திருக்கும் பல பொல்லாப்பும் கூடிக் கொண்டு வாழவந்த பெண்ணின் வயிற்றில் ஒரு காய்கூடக் காய்க்காத படி செய்துவிடுகிறது. ஆண்டவன் எல்லாவற்றுக்கும் விட்டுக்கொடுத்து முக்கியமான சங்கதியில் சோதனை காட்டி விடுகிறுன்! நானும் ஓட்டை, என் நடுவீடும் பொத்தல் என்றிருந்தாலும், அங்கே குழந்தைகளும் குட்டிகளுமாய் நிறைந்து நின்றால் அதுதான் பெரிய அரண்மனை வாழ்வு. இனி, குழந்தைகள் பெற்றாலும் அவைகள்

---

நம்மிடம் ஒன்றைப்பெற விரும்பிவந்தவன் தான் ஒன்றை நமக்கு இனமாகத் தர முயலுவான். அவன் தர வந்ததை மறுத்துவிட்டு, அவன் கேட்க நெருங்கியதைக் கொடுத்தனுப்பி ஒதுங்கிவிடுதலே பெருந்தன்மையாகும்.

நல்ல வாலிப வயதுக்கு வந்த சமயம் கண்மூடிப்போகிற அலறும் சங்கதி கள்எத்தனையோ? எத்தனே பெண்கள் புஷ்பவதிகளாயிருந்து, எத்தனே பையன்கள் தக்கபருவம் வந்தவர்களா யிருந்து, எந்த விவாக முடிச்சும் காணு மலே கண்மூடிப் போனுர்கள்! அவ் வித அவகேடின்றி வீடும் பெண்ணும் மணவாளனும் குடித்தனமுமாய்க் கூடி வாழ்ந்து மங்களமாய் விருத்தி யடைகிற சரக்கு அங்கே இருக்கா?

***

நானும் பூசாரி, எனக்கும் சுவாமி ஆட்டமுண்டு என்று சொல்லிக்கொள் வதில் லாபமென்ன? அதை ஒரு வியாபாரப் பொருளாக எண்ணுமல் பக்தியாற் கண்ணீர் பெருகிப் பரம னேத் துதிக்கும் பக்குவத் தன்மை யான சரக்கு அங்கே இருக்கா? நான் என்ருல் இளக்காரம் என் பீ(சொத்து) என்ருல் பலகாரம் என்று சொல்லிக் கொண்டு உழைத்தவன் வயிறு எரிகி ருனே! அவன் தேடிக்கொண்டு வர, அதையே தானும் தன்னேச் சேர்ந்த வர்களும் தின்றுகொண்டு, அவனிடத் தில் நகையில்லே, உடையில்லே, இவ் வளவு சோறு தானே கண்டது என்று சண்டையிட்டு அவனே யொரு பகைக் காரனுக நினேக்கும் சண்டாளத்தனத் தை எத்தனேப் பெண்கள் செய்யாம லில்லே? அவ்விதமின்றி அவனேச் சந்தோஷமாய்த் திருப்திபட வைக் கிற சரக்கு இருக்கா? பெண் அழ குக் கொடிதான், செந்தாமரை முகம் தான், ஆனுலென்ன, ஐயோ அவள் மலடியாய்விடுகிருள். அங்கே காய்க் கிற சரக்கு இருக்கா? நான் கெட் டாலும் எதிரி வாழவேண்டும் என்று நினேக்கிற உத்தம சத்திய புருஷ னுக்கு மேலோங்குகிற சரக்கு இருக்கா? ஹா! அதை அங்கு காணுேமே! அப்படிப்பட்ட உத்த மப் பெரியோர்களின் வீடுதானே பேர் சொல்லவும் எவருமின்றி அநாதி யற்றுப்போகிறது! நான் செருப்பு விடுகிற இடத்தில்கூட அவன் நிற்க யோக்கியனல்ல என்கிருன் ஒருவன். ஆனுல் நடக்கும் சங்கதி என்ன? அந்த யோக்கியதை யற்றவனேத்தான் வீட்டிலுள்ள பெண்கள் விரும்புகிருர் கள். இந்த யோக்கிய குணமுள்ள வனே என்றைக்கும் அவமதிப்பாக வே நடத்துகிருர்கள்! இன்னும் இந்த யோக்கியனின் மனேவி அந்த யோக்கியதையற்றவன்மேல் ஒருமதிப் பும் பிரியமும் இச்சையும்கூட வைத்து விடுகிருள்! ஒருவன் எவ்வளவு யோக் கியனுய் நல்ல நடத்தையுடன் நடந்து கொண்டாலும் அதற்கு ஒரு பெருமை கொடுத்து அவனே ஒரு மேன்மையாக நினேக்கிற சரக்கு அங்கே இருக்கா? அவனேத்தான் வருவார் போவார் யாவரும் கேவலப்படுத்துகிருர்கள்! இதென்ன கொள்ளேயோ! இதைக் காணக் காண யோக்கியனுக்கே மனம் வெறுத்துக் கசந்து போகிறது!

***

அவன் படும்பாடு பஞ்சுதான் படு மோ? எத்தனேயோ வித்தைகள் கற் றிருந்தும், எத்தனே தடவைகளில் தொட்டுக் கொண்ட பிழைப்பு விட் டுப்போய், வெவ்வேறு புதிய பிழைப் புகளில் அவன் புகுந்து ஊரையும் மாற் றிக்கொண்டு தாளம் கொட்ட நேர்ந்தி ருக்கிறது! இத்தனே பாடுகளிலே நாலுகாசு சேர்த்த சரக்கு இருக்கா? வருவது ஆயிரம் போவது ஆயிரம் என்ற வாழ்விலே மிச்சப்படுத்திய சரக்கு இருக்கா? வருவது ஒரு காசு,

---

எவ்வளவு நல்ல சிநேகிதர்களானுலும், உறவினர்களானுலும் அவர்களும் பிரிந்து போகவேண்டி யிருக்கிறது. காலவினேயைக் கடக்க முடிகிறதா?

செலவிடுவது நாலு காசு என்று கால முழுது மாஞல் அங்கே விடிகிற உருப்படுகிற சரக்கு இருக்கா ? நான் வாழ்ந்த வாழ்வைச் சொல்லுகிறேன், அண்டை வீட்டுக்காரன் இருக்கிருனே பார் என்பதாய், வெளியிட்டுக் கொண்டால் வெட்கக் கேடாகத் தான் முடிகிறது. பெண்ணுகப் பிறந்து தெருவிலே நிற்கிறேனே என்று கண் கலங்கும் காரிகைமார் எத்தனை ? அங்கே அவர்கள் வாழக் கொடுத்து வைக்க நல்ல சுழியாகிய சரக்கு இருக்கா? கொட்டிய பாலின் முன் கூவியழுதாவ துண்டா ? கொண்ட பெண்சாதியே கூர் அறிவா ளாயிருந்தாள் என்று ஒருவன் துடிக் கும்போது அங்கே மனமொத்திருக் கிற சம்சார சுகச்சரக்கு இருக்கா ?

***

அந்த விதவைச் சீமாட்டி பெரிய பணக்காரிதான்; ஆனல் அங்கே மஞ் சள் குங்குமச் சரக்கு இருக்கா ? கண வனுடன் மோதிக் கொண்டாகிலும், திட்டுபட்டுக் கொண்டாகிலும் வாழ் கிற ஒரு தனிச்சீரும் அழகும் இந்தக் கைம்பெண் கோலத்தில் வருமா ? அவன் எவ்வளவோ செல்வத்திற்கு அதிபதி, உண்ணப் பாக்கியச் சரக்கு இருக்கா ? எலுமிச்சம் பழத்தளவு சாதத்திலேயே அவனுக்கு வயிறு நிறைந்துபோக, எல்லாவற்றையும் இலையில் அப்படியே வைத்துவிட்டு எழுந்திருக்கிருனே ! அவன் பெரிய வியாபாரி தான் ; நாணயச் சரக்கு இருக்கா ? பழய மோச புத்தி போகக் காணுமே ! ஏமாந்தவனுக்கு நாமம் போட்டு விடுகிருனே! நேசர்கள் தான்; நட்டாற்றில் விட்டுவிடாத சரக்கு அங்கே இருக்கா ? ஒருவனை ஒரு துய ரத்தில் ஆற்றித் தேற்றி அருகிலிருக் கும் ஆதரணைச் சரக்கு அந்த நேசத் தில் இருக்கா ? எங்கும் மடமாய்த் தான் இருக்கு ; தங்கி இருக்கிறதற்கு இடமிருக்கிற சரக்கு அங்கு இருக்கா? மிக்க மிக்க உபசரிப்புகள் தான் ; எப் போது இடம் விட்டுப் போவானே வென்று எண்ணுமல் இன்னும் அவன் இருந்து போகவேணுமென்று நினைக் கிற சரக்கு இருக்கா ? எல்லா விவகார நுட்பமும் தெரிந்தவர்கள் தான்; தன் வகையில் தானும்குடும்பமும் ஏமாறிப் போகாதிருக்கிற சரக்கு இருக்கா ?

***

மழை பெய்தோடி மறைந்தாற் போல, ஆபத்துக்கு வந்து உதவி நல் லது செய்துவிட்டுச் சொல்லாமலே போய்விடுகிற உத்தமர்கள் சிலர் இருக் கிருர்கள். அவர்களுக்குத் தானப்பா நாளும் நாளும் ஒவ்வொரு சோதனை? அவர்களுடைய நல்ல நினைவுகட்கு நன்மை கிடைக்கிற சரக்கு இருக்கா ? மழை பெய்து நிறையாதது மொண்டு வார்த்தா நிறையும்? இதற்குமுன் சான் எவ்வளவோ அன்பாய்நடந்தும் செல விட்டும் வாரிக்கொடுத்து மிருக்கிற துக்கு வராத நல்ல பேர் இனிமேல் மொண்டு ஊற்றியா வரப்போகிறது ? அந்த இடத்திலே நன்றி விசுவாசச் சரக்கு இருக்கா ? மனைவியும் கணவ னும் என்றைக்கும் பகையுளிச் சத் துருக்களாகவே வாழ்கிருர்களே ! அங்கே நல்வாழ்வுச் சரக்கு இருக்கா ? மலையின் உயரம் மலைக்குத் தெரியுமா என்பது போல சில கல்விமான்க ளுக்குத் தங்கள் படிப்பின் பரிபூர ணத்துவம் தெரிகிறதேயில்லை. அவர் கள் ஏதும் தெரியாதவர்களாய்த் தங் களை நினைக்க, நெடுந்தொலைவில் உள் ளவர்களோ அவர்களைப் பூசித்துப் போற்றுகிருர்கள். அத்தகையோரைப்

---

சிலர் வெகு படிப்பும் கௌரவமும் கொண்டவர்களா யிருந்தும், அவர்க ளுடைய நடையும் பேச்சுகளும் அதிவிநயமமாயும் வணக்கமாயு மிருக்கின்றன.

பக்கத்திலிருப்போர் மதிக்கிற சரக்கு இருக்கா? மல்லாந்து உமிழ்ந்தால் மார்மேலே விழும் என்பதாய்த் தான் செய்த கொடுமையைத் திரும்பத் தானே அனுபவிக்கும்போது அப்பொழுதேனும் நல்ல புத்திவரப்பெறுகிற சரக்கு இருக்கா? விறகுக்கட்டுக்காரனுக்குப் பிளவை புறப்பட்டால் விறகுக் கட்டையால் ஓடி என்பதாய் அத்தனை சுலபமாய் அது குணமாய்விட, அதே பிளவை பணக்காரனுக்கு வந்தால் அது சுளுவாய்ப்போகிற சரக்கு இருக்கா? வினை தீர்த்த கோயிலுக்குப் போயும் வினைதீரவில்லை யென்பதாய் எவ்வளவோ பிரார்த்தனைகள் செய்து கொண்டும் அது நிறைவேறுகிற சரக்கு இருக்கா? விஷம் தீர வைத்தியன் வேண்டும்; பாவம் தீர தெய்வம் வேண்டும்; அந்தத் தீருகிற அந்த நல்ல வேளையின் சரக்கு அருகில் இருக்கா?

படுக்கைக்கு உதவாத பாவையும் பாக்குக்கு உதவாத வெற்றிலையும் இருந்தென்ன பயன்? அங்கே ஒன்றுக்கொன்று ஒட்டிப் பொருந்தி இன்பம் உதவிக்கொண்டு குலாவுகிற சரக்கு இருக்கா? படுத்த படுக்கையிலிருந்து எழுந்திருக்கையில் இடுப்பை ஜிவ்வென்று தூக்கிக் கொடுத்து உயர்த்தி எழுந்திருக்க வைக்கிற சக்தி ஒன்று இருக்கிறது. நோயெடுத்துப் பாயிற் பிணியாளியாய்ப் படுத்த பிறகு அந்த சக்திச் சரக்கு இருக்கா? இன்னொருவர்வந்து தூக்கியல்லவோ உட்கார வைக்கும்படி யாகிறது! பேசுவதெல்லாம் பரோபகாரத்துவம், செய்வதெல்லாம் சுயநலம் நாடுகை என்கிற வகையிலே தந்திரத்தின் சங்கதி இருக்கிறதே தவிர சத்தியச் சரக்கு இருக்கிறதா? பெரிய நிர்வாகி; அதிக சமாளிப்புக்காரன்; திறமைசாலி என் பதிலே ஏமாற்றுக் கற்றுவித்தைகளும், மோசடித்தனங்களும், நேசங் காட்டிக் காசுக் கணக்கில் கண்ணாயிருக்கிற நயவஞ்சகங்களும், நாணயத் தவறுதலின் நாற்றங்களும் மிகுந்து கிடக்கிறதே யன்றி, உண்மைக்கு உத்தாரமாய் நடக்கும் யோக்கியதைச் சரக்கு இருக்கிறதா? ஆள் கம்பீரம் தான்; அழகான தலைப்பாகைதான்; அடுத்தவரை ஆதரிக்கிற சரக்கு இருக்கிறதா? பேர் சாவித்திரி, சீதா, சந்திரமதி தான்; அவர்களைப் போல நடக்கிற குணச்சரக்கு இருக்கிறதா? பேரு பெத்த பேரு; தாக நீளு லேது; ஏமி ஐயா இதி? பேருக்குத் தகுந்தபடி செழிப்புச் சரக்காவது, தாராளக்கையின் சரக்காவது இருக்கிறதா? அக்கரைக்கு இக்கரை பச்சை யென்று பார்வைக்குத் தூரத்தில் தென்பட்டாலும் உள் நுழைந்து தடவும்போது முக்கியமான சரக்கு — முதல்படியான சரக்கு முழுதும் சூனியமாய் "ஏமி லேது" என்று ஒட்டையாய் விடுகிறதே! அந்தச் சரக்கு இல்லாமல் மற்றதுகளெல்லாம் கூடியிருந்தும் என்ன பயன்? "அது" இல்லாமல் மற்றது இருந்து என்செய்ய? ஆகவே தான் விகடன் "அந்த சரக்கு" இருக்கா?" என்று ஒவ்வொன்றுக்கும் கேட்டுவிடப் புறப்பட்டேன். முடிவு என்ன? முக்கியத்தில் தான் மூன்று துளை விழுகிறது. அதை மூடிக் கொண்டு போனால்தான் முன்னே போகலாம் போலிருக்கிறது. உலகப் போக்கும் அப்படித்தான் மூடினவாழ்வில் நடக்கிறது. தெரிந்தீர்களா? ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

---

குமாஸ்தாவாக இருந்த குமரப்பன் பெரிய உத்தியோகத்தில் உயர்ந்து பெத்தப்பனாய்விடுகையில் குமாஸ்தா காலத்து நண்பர்களை மறப்பதுடன் குரலும் நடையும் மாதிரியும் பிசகி மாறிவிடுகிறது. கண்ணும் தெரிகிறதில்லை.



புண்ணியத்திற்காகத் தர்மம் செய்வதைவிடக் கீர்த்திக்காகச் செய்வது மேலென்று நாகரீகம் நவிலுகிறதாம்!

***

காலமுழுதும் வாரிக்கொடுத்து ஆதரிக்கும் பெண்வீட்டாரைவிட, ஒருவன் கழுத்தில் கட்டிக்கொடுத்துக் கைகழுவி எட்டி ஒதுங்கிவிடுபவர்களே பிழைக்கத் தெரிந்தவர்களென்று வேதாளம் தாளம் கொட்டுகிறதாம்!

***

ஏழைப்பெண்ணுக்கு அழகு கூடினும் உயர்ந்த இடத்தைக் காட்டாது; ஐசுவரியப் பெண்ணின் கருப்பும் அவலக்ஷணமும் பணத்தின்முன்னே தோற்றுது என்று கல்யாணப் பந்தல் பந்தயம் போடுகிறதாம்!

***

ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு நினைவு, ஒவ்வொருத்திக்கும் ஒவ்வொரு கருத்து. பேசுவதோ மற்றொரு பேச்சு. ஒருவரைப்பற்றி உலகத்தார் நினைப்பதொன்று, அவர் உண்மையில் இருக்கும் மாதிரியோ வேறொருவிதம். இதற்கே உலகம் பலவிதம் என்று ஏற்பட்டதாம்!

***

ஏமாந்தவர்கள் சிறைக்குப்போய் நோக, தந்திரசாலிகள் தப்பித்துக்கொண்டு கம்பீரமான அபிப்பிராயம் கூறிவிட்டு அழகான சோபாவில் வீற்றிருக்க—இதற்கே தான் தேசாபிமானம் என்று பெயராம்!

***

அங்கும் மோதுண்டு, இங்கும் மோதுண்டு, தங்கிய இடத்துச் சுவரும் சாய்ந்து மோதுண்டு துண்டு துண்டாவதே அதிகப்பட்ட பலே பலே திறமைசாலிகளுக்குக் கிடைக்கும் பெரிய சன்மானமாம்!

***

எந்தக் காய்க்கும் இல்லாத கிரீடம் தனக்கே இருக்க, "அது கத்தரிக்கா(ய்)", "அதி வங்காயா" என்று தமிழனும் தெலுங்கனும் ஒரு பழிப்புச் சொல்லாய் உபயோகிப்பதற்காக அவர்கள் மீது கத்தரிக்காய் மானநஷ்ட வழக்காடப் போகிறதாம்!

***

உங்கள் சம்பளம் எங்கே?

—"தாசி லீலாமணி கடனேயொழித்துவிட்டனே."

ஜீதம் எக்கடா?

—"நல்லமந்து (அபினி) அப்பு தீர்ச்சேசினுனு."

***

"உண்டுவிதுரன் மிடிவுற்றபோகோடினுன்—உண்டு விபூஷணன் உதவிகொண்டான் மாற்றனை—உண்டு தருமனையை யுதவிகொண்டான் சந்திரன்—கண்டுமேன் நாம் இடர்புரியக் கலங்கவேண்டுமே?" என்று விஸ்வாசக்கொக்கு ஒன்று பாடுகிறதாம்!

***

"தெள்ளற வித்தை கற்றுல் தெய்வ மேதென்னவேண்டும்——

---

எவருக்கு சிபாரிசு இருக்கிறதோ அவருக்கு சுலபத்தில் வேலை கிடைக்கும். சிபார்சு இல்லாமல் எம். ஏ. பட்டம் பெற்றிருப்பினும் உத்தியோகம் கிடைப்பது அபூர்வமே. இதுவே இந்நாளின் பிழைப்பினது உண்மை நிலை,

உள்ளது ஒழிந்ததானால் உயிர்விடல் உசிதமாமே"—என்கிறார் விகட முனிவர்!

***

அவ்வைக்கு மேலே செவ்வையாய்ச் சொல்லுகிறேன்:—அரிதரிது அடுத்தவரைக் காப்பது—அதனினும் அரிது காசு நோக்கமில்லாமை—அதனினும் அரிது சேர்த்த பணம் செலவாகாமை—அதனினுமரிது பொய்யின்றி நாள் போக்கல்—அதனினுமரிது சூதுடன் வஞ்சனைபுரியாமை—அதனினுமரிது நல்ல சமயத்தில் ஒதுங்காமை—அதனினுமரிது உண்ட வீட்டிலிரண்டகம் புரியாமை—அதனினுமரிது காலம்—தவணை தவறுமை—அதனினுமரிது எதிர்த்த மனைவியுடன் பேசாதிருக்கை—எல்லாவற்றிலும் அரிது சத்திய, நேச, அன்பாய் நடத்தலே. சொன்னது சரிதானு?

## அகப்பேய் சித்தர் பாடல்.

5

ஈட்டிய செம்பொருளை அகப்பேய்
இராவிலுந் தூங்காமல்
பூட்டிய பெட்டிக்கிட்ட அகப்பேய்
பூதம்போல் காத்திருப்பாய்.

6

வாடியே கெஞ்சினுலும் அகப்பேய்
வட்டியில் தள்ளாதே
மோடிக்காரர் காசை அகப்பேய்
மொட்டைதட்டிப் பறியே.

7

ஒரு உபதேசம் அகப்பேய்
உயிர் வெறுத்தேனும்
திரைகடலோடியும் நீ அகப்பேய்
திரவியந் தேடு.

## மாதத்திற்கு ரூ. 1—15—0 ஆவது மிச்சப்படுத்து.

பிரதி மாதத்திலும் உன் வருமானத்தில் அதிகம் மிச்சப்படுத்த இயலாவிடினும், எளிய வாழ்வில் ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ. 1—15—0 எடுத்து ஒரு பக்கம் வைத்துவிடு. அது நான்கு மாதத்தில் ரூ. 7—12—0 ஆகிவிடும். அதைத் தபாலாபீஸில் கொடுத்து "ரொக்கஸர்ட்டிபிகேட்" கேட்டால் 5-வருஷத்தில் வட்டியுடன் ரூபா 10-ஆகக் கூடிய தொகைக்கு உனக்கு ஸர்ட்டிபிகேட் தருவர். அது உன் கையில் இருப்பது உனக்கு ஒரு தைரியத்தைக் கொடுக்கும். ஒரு காசும் இல்லாத வாழ்வைவிட சொற்பமாவது இருக்கிற வாழ்வு மேல். தபாலாபீஸில் ரொக்க ஸர்ட்டிபிகேட்டில் பணம் போட்டால் ஐந்து வருஷங்களுக்குப் பின் கிடைக்கக்கூடிய விதமாவது:— ***7—12—0*** ரூபாய் ***10*** ரூபாயாகும். ***15—8—0*** ரூபாய் ***20*** ரூபாயாகும். ***38—12—0*** ரூபாய் ***50*** ரூபாயாகும். ***77—8—0*** ரூபாய் ***100*** ரூபாயாகும். ***387—8—0*** ரூபாய் ***500*** ரூபாயாகும். ***775*** ரூபாய் ***1000*** ரூபாயாகும். சேர்த்தவர்க்கே தான் செல்வாக்கு.

# யார் நல்லவர்?



எனது ஊருக்குச் சமீபத்தில் உள்ள மற்றொரு ஊரில் எனக்கு மிக நெருங்கிய நண்பர் ஒருவர் உண்டு. எனது ஊருக்கு அடுத்தே அவர் வசிப்பினும், நான் அங்குச் செல்லவோ, அடிக்கடி அவரைச் சந்திக்கவோ எனக்கு ஒழிவதில்லை. என்றாவது ஒரு நாளைக்குச் சந்தித்தால், பிரிந்திருந்த எல்லா நாளைக்கும் சேர்த்து அன்று பேசித் தீர்த்துவிடுவோம். ஒரு நாள் அவர் நான் வசிக்கும் இடத்திற்கே வந்தார். நான் உடனே 'ஏது அத்தி பூத்தாற்போல' என்றேன்; அதற்கவர் 'நீ தான் என்னை நினைப்பதில்லை; என்னால் அப்படியிருக்க முடியவில்லையே' என்றார். 'நண்பரே! நான் மறந்தாலும், என் மனம் என்றும் உம்மை மறவாது' எனக் கூறி, 'ஏது இன்று ஒரு மாதிரியாக இருக்கிறீர்?' என்றேன். 'இன்றுமட்டும் என்ன ஒரு மாதிரி; என்றும் இப்படித்தான்; எனினும் சில நாளாக என் மனம் மிகுந்த துயரில் மூழ்கியிருக்கிறது. நான் கூறவேண்டியவை முழுதும் கூறி முடித்த பிறகு, நீ ஏதாவது எனக்குச் சமாதானம் சொல்லக்கூடுமானால் சொல்லு', என்று எனது நண்பர் பின்வருமாறு கூறிமுடித்தார். நானும் எனக்குத் தோன்றியதைச் சொன்னேன். அதனால் அவர் திருப்தியடையவில்லை. ஆகவே, அவர் கூறியதை யப்படியே இங்கு வரைகிறேன். இதைக் கண்ணுறும் அன்பர்களாவது தக்க சமாதானம் கூறி அவருக்கு ஆறுதல் அளிக்க முயல்வாராக.

* * *

எனது நண்பர் கூறியதை அறிவிப்பதன்முன், அவருடைய குடும்ப நிலையை நீங்கள் அறியீர்களாதலின், அதனைமுன்னர் சுருங்கக் கூறிவிடுகிறேன். அவருக்குத் தாய் தந்தையரும், உடன்பிறந்த ஒரு அண்ணனும் உண்டு. அண்ணனுக்கு மனைவி மக்கள் உண்டு. தனக்கு மனைவியுண்டு; மகவில்லை. சமையல் மட்டும் தனித்தனியே தவிர, குடும்பத்தின் வரவு செலவு எல்லாம் ஒன்றுதான். வருஷ வருமானம் சுமார் 6000-ரூபாயாகும். இனி அவர்கூறியவை பின்வருவன;—

* * *

"உலகத்தில் வாழும் ஒவ்வொருவரும் தமது நிலைமையைத் தமக்கு எதிரிலேயே பிறர் உள்ளபடி எடுத்துக் கூறச் சகியார். இது மிகவும் வியத்தற்குரியது. மனம் வேறுபட்டுள்ள இரு குடும்பங்களுக்கும் நல்லவன் போல இங்கு நடப்பதை இவரறியாமல் அங்கு போய்ச் சொல்வதும், அங்கு நடப்பதை அவரறியாவகையில் இங்கு வந்து சொல்வதுமாக, அவிந்து போகும் பகைமையைத் தூண்டிவிடும் ஒருவனை அவன் நண்பன் சந்தித்துத் 'தோழ! இச்செய்கை நன்மையாமோ?' எனக்கூறின், 'என்ன; நான் இப்படி நடப்பதாக எவன் உனக்குச் சொன்

---

ஒரு படியாத முட்டாள்—ஆனால் அவன் மகா நிர்வாகசாலியாய் செல்வத்தில் உயருகிறான். படித்த கட்டைகள் பல அவனிடம் வேலையில் அமர்ந்து ஜீவிக்கின்றன. படிப்புமட்டும் இருந்து பயனில்லை. அதிர்ஷ்டமும் வேண்டும்.

னவன்? நீ யெனக்கு வேண்டியவ ளுகையால் பேசாமலிருக்கிறேன். வேறொருவன் இம்மாதிரி சொல்லி யிருந்தால் அவனை யென்ன பாடு படுத்தியிருப்பேன் தெரியுமா?' எனப் பெருங்குரலெடுத்துக் கனைக்கிறான். இவன் செய்கையை நன்கு அறிந்தே இவன் நண்பன் 'அந்தோ! இரு குடும்பமும் ஒன்றுபட்டதும் இவன் ஈனச்செயல் வெளிப்படின் வெளவால் போலத் துன்பம் உழக்க நேரிடுமே' என இரங்கி, அவன் மனதறிந்த செய் கையையே அவனுக்குக்கூறின், அவன் இல்லவே இல்லை யெனச் சாதிக்கி றான். களவையே தொழிலாகக் கொண்ட ஒருவனைத் 'தம்பீ! பல நாளைத் திருடன் ஒரு நாளைக்கு அகப்பட்டுக் கொள்வான்; இது என்றும் ஆபத்து; உப்புபோட்ட நீராலும் உழைத்துக் குடிப்பதே மேல்' என்று ஒருவர் சொன்னால், 'உன் தொழிலை இங்கு காட்டுகிறாயா?' என மீசையை முறுக்குகிறான். ஆகவே, அத்தகையோரிடத்தில் அவர் களின் இயல்பைக் கூறின், அவர்கள் தம்நிலைமை யங்ஙனமில்லையென்பதாக மறுக்கின்றனர். ஆனால் இதில் வியப் பில்லை. கம்பராமாயணத்தில் தேர்ச்சி பெற்று, அதிலுள்ள பாக்களின் நயங் களை யெடுத்து மொழிவதில் சிறந்து விளங்கும் ஒரு அறிஞரைக் கேள்வி மாத்திரத்தால் அறிந்த மற்றொருவர் அவரை நேரே சந்தித்து இன்னாரென அறிந்ததும், 'ஆ! தாங்களா? கம்பர் கவிநயங்களைக் கூறுவதில் தாங்கள் மிகச் சிறந்தவர்களென்று கேள்விப் பட்டிருக்கிறேன்; இன்று தங்களை நேரே சந்தித்துப் பேசும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது' என்ற தும், அவ்வறிஞர் திடுக்கிட்டு 'எனக்கு என்ன தெரியும்? நான் மிகவும் அற் பன்; கம்பர் பாக்களின் சீர்மையை யெடுத்து மொழிய நானா தகுதியுள்ள வன்?' எனக்கூறி அவர் சொல்லி யதை மறுக்கிறார். ஏழைகள் துயரைக் காணச் சகியாது, தன்னாலியன்ற மட் டும் அவர்கள் துயரைத் தீர்த்து, அன் பிலும் அருளிலும் சிறந்து விளங்கும் ஒரு உத்தமப் பிரபுவைச் சந்தித்த அவர் நண்பர் அவர் செயலைக் கண்டு பரவசப்பட்டு, 'அன்பரே! செல்வம் எல்லோரிடத்திலும் இருந்து என்ன பயன்? இவ்வுலகில் துன்பங் கண் டிரங்கி அதனைப் பரிகரிக்க முயலும் தங்களைப்போன்றவரை விரல்விட்டு எண்ணிவிடலாம்' எனக்கூறின், அவர், 'நண்பரே! தங்கள் பரிகாசத் திற்கு இலக்கு நான்தானோ?' என்று கூறி அவருரையை யேற்றுக்கொள்ள மறுக்கிறார். முன்பு கூறிய கீழ்மைக் குணமுடைய மக்களிடத்து அவர்க ளின் இழிதகைமையைக் கூறின், அதனால் தங்கட்கு எங்கே துன்பம் வந்துவிடுகிறதோ என அஞ்சி அவற்றை மறைக்க முயல்வது அப் பேதைகட்கு ஒத்தது. மற்று இப் பெரியார்களிடத்து, அவர்களின் உய ரிய தன்மையைக் கூறின், அவர்களும் முன்னவர்போன்று தங்கள் உண்மை நிலையை ஒப்புக்கொள்ள அஞ்சுகிறார் கள். இச்செயல் வியப்பு விளைவிப்ப தொன்றல்லவா? இனி யெனது விஷ யத்தைச் சொல்கிறேன். 'என்ன இதுவரையுங் கூறியது பீடிகைதானா? பீடிகையே இவ்வளவு நீளமானால் இன்னும் உமது விஷயத்தின் நீளம் எவ்வளவோ?' என்று நான் இடை மறித்துக் கேட்டேன். 'இல்லை,

---

பத்திராசிரியர்களும் நூலாசிரியர்களும் சிக்கன வாழ்வில் வாழ முடிகிற தில்லை. அவர்கள் காபி யுண்பதற்கு ஒரு அணுவுக்கு யோசிப்பர். தபாற் செலவில் பன்னிரண்டணா செலவிட்டு விடுவர். அவர்களின் காலமுற்றும் இப்படியே. எவ்வளவு கைக்கு வரினும் என்ன? அவ்வளவும் பல செலவே!

இல்லை; பீடிகையைக்கொண்டு விஷயம் அதனிலும் இரண்டு பங்கு அதிகமிருக்குமென நினையாதே' எனக் கூறி மேலே சொல்லத் தொடங்கினர்:—

***

"என்னுடைய நிலைமைதான் உனக்கு நன்கு தெரியுமே; நாய்போற் குலைத்து நரிபோல் ஊளையிடுபவனென்று. காலை ஆறுமணிக்குத்தோட்டத்திற்குச் செல்பவன் மத்தியானம் ஒருமணிக்குதான் வீட்டிற்குத் திரும்புவேன். அதுவரை என்னுலியன்ற வேலையை நானே செய்வதும், மற்றும் கூலியாள்களிடத்து வேலைவாங்குவதுமாக வெயிலும் மழையும் பாராது அலைவேன். நானே வேலைசெய்வதால் எனக்குக் கடினம் ஒன்றுமில்லை. கூலியாள்களிடத்து வேலைவாங்குவதுதான் மிகுந்த பிரயாசை. ஒருமணி நேரத்தில் ஆகக்கூடிய வேலையை மூன்று மணிவரை வளர்ப்பார்கள். எனக்கது பொறுப்பதில்லை. 'இப்படி வேலை செய்தால் பண்ணை சீக்கிரம் முன்னுக்கு வந்துவிடும்' என்று கோபிப்பேன். அதற்கவர்கள், 'என்ன, ஐயா! எங்கள் உடம்புமட்டும் இரும்பா? எங்களுக்குமட்டும் வருத்தமாயிருக்காதா?' என்பார்கள். என்னுடைய மீசை துடிக்கும்; என்றாலும், துடிக்கும் மீசையை முறுக்கிக்கொண்டே 'இருக்கும், இருக்கும்' எனக் கூறிவிட்டு வேறோரிடத்தில் போய் உட்கார்ந்துவிடுவேன். 'ஆட்கள் செய்யும் வேலையோ மிக மோசம்! அதிலும் இந்த வருஷத்துப் புஞ்சை வெள்ளாமை 2000-ரூபாய்க்குக் குறைவில்லையென்று அவை பயிராக இருக்கும்பொழுது மதித்து மனமகிழ்ந்திருக்க, அவை அறுவடையானபின் கணக்குப் பார்த்தால் 500-ரூபாய் தேறுவது கடினமாக இருக்கிறது. எத்தனை நாளைக்கு இந்தத்தொல்லை? தோட்டத்தைவிட்டு ஒழிந்தால்தான் மனம் சாந்தமடையும்' என நினைப்பேன். ஆனல் தோட்டத்தைவிட்டு ஒழிய இயலாது. எனது அண்ணன் காலை ஆறுமணிக்கு வருபவர். அங்கும் இங்குமாக இருந்துவிட்டு எட்டு மணிக்குப் போய்விடுவார். பத்திற்கு வருபவர் பன்னிரண்டிற்குப் போய் விடுவார். பின்பு மாலையில் வருவதென்பது நிச்சயமில்லை. அவருக்குப் பண்ணையின் மேற்காரியங்களைப் பார்க்கவே சரியாயிருக்கும். அதாவது கொடுக்கல் வாங்கல், வம்பு வழக்கு இவைகளுக்கே நேரம் போதாது. ஆனல் காலையில் வருகிறரே அப்பொழுதாவது பண்ணையின் காரியங்களைப் பார்த்துக்கொண்டு எனக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுப்பாரா? அது கிடையாது. வந்ததும் 'இவ்வளவு தானு வேலையாச்சு?' என்று கூலியாட்களையும், அவர்களோடு சேர்த்து என்னையும் குறிப்பாகத் திட்டிவிட்டு, யாராவது அந்தப் பக்கங்களில் இருக்கிறார்களா என்று நாற்புறமும் பார்த்து, எங்கேயாவது ஒருவர் தென்பட்டால் அங்கே போய்விடுவார் பேசிக்கொண்டிருப்பதற்கு. வயது சென்ற எனது தந்தையும் அடிக்கடி தோட்டத்திற்கு வருவதில்லை; என்றாவது ஒரு நாளைக்குத்தான். வந்தாலும் 'இது ஆகவில்லையே, அது ஆகவில்லையே' என்று என்னிடத்தில் தான் சொல்லிக் கோபிப்பார். 'நான்மட்டும் ஒருவனே கஷ்டப்படவேண்டுமோ? அண்ணன் கவனிக்கலாகாதா?' என்பேன் நான்.

---

ஆசிரியர்களிடம் இலவசத்தில் புஸ்தகங்கள் பெறுவோர் அவ்விதம் பெற்றதற்கு மட்டும் பல்லை இளிக்கிறார்களேயன்றி, அதிலுள்ள தவறுகளையும் உயர்வுகளையும் எடுத்துக்கூறி ஆசிரியர்கட்கு உதவி செய்ய முயல்கின்றார்களில்லை.

'அண்ணா? அவன்தான் தோட்ட வேலையோடு அதற்கு வேண்டிய மேற் காரியங்களையும் பார்த்துவருகிறானே! நாளையோடு நீ மேல்வேலையைமட்டும் பார்; வயலுக்கு வரவேண்டாம்; அவன் ஒருவனையே பண்ணை வேலையைப் பார்த்துக்கொள்ளச் சொல்கிறேன்' என்று இன்னொருமுறையும் என்னை வைதுவிட்டுப் போய்விடுவார். நான் என்ன செய்வேன்? என் மனம் குழம்பிவிடும். 'ஐயோ! இந்தக் கஷ்டங்களை யெல்லாம் என்னுடைய உயிருக்குயிராயுள்ள என் மனைவியிடத்திலாவது கொஞ்சநேரம் பேசி மனம் ஆறுவோம்' என்று பகல் ஒருமணியையும் இரவையும் எதிர்பார்த்து அந்த நேரத்திற்கு வீட்டிற்குப் போவேன். சிரித்த முகத்தோடல்லவா என் மனைவி என்னை வீட்டு வாசற்படியிலிருந்தே யெதிர்கொண்டழைத்துப் பேசுவாள் என நினைத்துப் போகிறேன். அங்கே ஒருநாளும் அப்படியில்லை. எங்கேயாவது பக்கத்து வீடுகளில் வீண்பேச்சு பேசிக்கொண்டே யிருப்பாள். நான் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்பதை யறிந்தும் உடனே வருவதில்லை; ஒரு நாழி, அரைநாழி சென்று தான் வருவாள். வந்ததும் வட்டிலைக் கழுவி யென் முன் 'தொப்' பென்று வைப்பாள். எனக்கு எப்படியிருக்கும்? 'ஏண்டி! நிழலிலேயே குந்திக்கொண்டிருக்கிறாயே, அதனால் உனக்கும் கஷ்டம் அதிகமாகிவிட்டதோ?' என்று கர்ஜிப்பேன். நீங்கள் இன்னும் அதிகாரங்கூட பண்ணமாட்டீர்கள், உங்கள் பவிசுக்கு? விறகில்லை என்று இரண்டு நாளாகச் சொல்கிறேன்; காதில் விழவில்லையே. என் காலை வைத்து எரிக்கட்டுமா? உங்கள் அண்ணன் தினம் வயலிலிருந்து வரும்பொழுது எல்லாம் அங்குள்ள காய்கறிகளைப் பறித்துத் தனது மேல்வேட்டியில் போட்டுக்கொண்டு வருகிறாரே; நீங்கள்மட்டும் வெறுங்கையை வீசிக்கொண்டு வரவேண்டுமோ? நானே வயலுக்குவந்து அறுத்துக்கொண்டு வந்தால்தானா? காரியத்தில் ஒன்றுமில்லாவிட்டாலும் அதிகாரம் பண்ண மாட்டீர்கள்' என்று என்னை அரித்து அரித்துவிடுவாள். வீடுபற்றி வேகும்பொழுது உள்ளேயிருப்பவர் வெளியே ஓடுவதுபோல, பாதி உண்டும் உண்ணாமலும் கையலம்பிக்கொண்டு வெளியே வந்துவிடுவேன். ஆனால் எங்கே போவது? மறுபடியும் அந்தத் தோட்டத்திற்கே—துயர்க்கடலுக்குத்தான்.

(மறு ஸஞ்சிகையில் முடிவு.)

பே. இராமாநுஜ ரெட்டியார்.

ஒருவருக்கொருவர் துணையாயிருப்பது இருவருக்கும் அது பெரிய தைரியம். எவ்வூராயினும் எதிர்ப்பவருடன் வாதிடத் துணிவு கொடுக்கிறது. ஒருவனுக்கு மற்றவன் பலமாயிருக்கவே எதிர்க்க வந்தவன் பின்னடைகிறான். ஒருவன் ஒருவேலைசெய்ய, அவனுக்கு முடியாததை மற்றவன் செய்வித்துக்கொடுக்கிறான். தான் போய் ஆகவேண்டிய வேலை தன் துணைவனால் முடிந்துவிடுகிறது. மனதொப்பிய ஒருவனின் துணை உலகமே துணைக்கு வந்தது போலாம்.






இன்று கூடிய நமது கடையில், "அலங்கோலத்திற்குப் பிறகு தான் நல்ல கோலம்'' என்று நடுவீதி நாதன் நவின்றார். ஆம், அதை நான் விவரிக்கிறேன் என்று தாண்டவக் கோன் எழுந்தார். "உதய காலத்திற்கு முன் அச்சந் தரும் இருள் கவ்வுகின்றது. நீராடி சுசிகரமாய்த் தோற்றுவதற்கு முன் எண்ணெயும் சீயக்காயும் ஜலமுமான அலங்கோல நிலை காணவேண்டி வருகிறது. ஒரு வேஷ்டி சுத்தப்படுவதற்கு முன் அது பலமுறை ஜலத்தில் நனைந்தும், கல்லில் அடிபட்டும், கிழிபட்டுங்கூட அலங்கோலமாகிறது. சொக்காய்க்கு ஒரு துணி தயாராவதற்குத் தையற்காரனால் எத்தனையோ துண்டுகளாகக் கிழிபட நேருகிறது. குழந்தை பிறந்தது என்று எல்லோரும் ஆநந்திக்க, அக்குழந்தையை ஈன்ற அன்னையோ அலங்கோலமாய்ப் பிரசவ அறையிற் கிடக்கிறாள். சற்று கவனத் தாழ்வு ஏற்படினே ஜன்னி பிறந்துவிடும். இந்த அலங்கோல மின்றி குழந்தைப் பேறாகிய நல்ல கோலம் காண இயலா. பரம சுந்தரமாய் அலங்கார வல்லியாய் ஸயன அறை சேர்ந்த ரமணீமணி அங்கு அலங்கோலம் கண்டுதான் நல்ல கோலமான விவாக சுகம் நுகருகின்றாள். சமையலுக்கு முன் பதார்த்தங்கள் எவ்வளவோ அலங்கோலம் கண்டாலன்றி பிறகு ருசியுள்ள காய்கறிகளாக நல்ல கோலம் காண முடியா'' என்று அடுக்கிக் கொண்டே போனார்.

***

நண்பர் வீட்டில் ஸல்லாபிக்கச் சென்றதைப் பற்றி நல்லதம்பி பேசினார். "எனக்கு ஒழிவு கிடைக்கும் பொழுதெல்லாம் என் நண்பன் இருக்கும் ஊருக்குச் சென்று இரண்டு தினங்கள் தங்குவது வழக்கம். என் நேசன் புஸ்தகப் பிரியனாதலின் ஒவ்வொரு தடவையும் நாலைந்து புஸ்தகங்களுடனே தான் சென்று காண்பது, அவன் நான் தரும் புஸ்தகங்களையெல்லாம் வெகு பிரியமாய்ப் பெற்றுக்கொள்வான். ஆனால் திருப்பித் தருவதில்லை. நானும் தரும்படி கேட்பதில்லை. விருந்தும் எனக்கு சம்பிரமமாகவே நடக்கும். நன்றாகப் பேசி ஸல்லாபிப்போம். ஒரு தினம் வாசிப்பதற்கு ஏதாவது ஒரு புஸ்தகம் தரும்படி கேட்டேன். அதற்கு என் நண்பன்—"நீ தந்த புஸ்தகங்களெல்லாம் எவரெவரோ கொண்டு போயினர். ஒன்றும் கைவசமில்லை'' யென்றான். பிறகு ஏதாவது ஒன்று எனக்குத் தருவதற்காகத்தன் பெட்டியைத் திறக்கும் சமயம் நான் திடீரென்று உள் நுழைந்தேன். அந்த சமயம் திறந்த பெட்டி என் கண்முன்பு தென்பட, அங்கு நெருங்கிக் கவனிக்கையில் பெட்டி

---

மத்தியான காலத்தில் பெண்கள் தூங்கும் வழக்கத்தைக் கொள்வது தங்களின் விருத்தியைத் தாங்களே தேய்த்துக் கொள்வதற்குச் சமானமாகும்.

நிறையப் புஸ்தகங்களாய் அவ்வளவும் நான் தந்தவைகளாய் இருந்தன. நண்பன் முகம் வெட்கி சுருங்கிப்போக நானும் ஜாடையாக வெளியில் வந்து விட்டேன். அதற்குப்பின் என் நண்பனின் மனத்தூய்மையைப் பற்றி என்னுள் வெறுப்பு மிகுந்தது. ஒரு தடவைக்கு இரண்டு நாள் நான் தங்குவதில் கிளப்பு சாப்பாட்டின் விலைப் படியே இரண்டு ரூபாய் ஆவதாக வைத்துக் கொண்டாலும், நான்தரும் புஸ்தகங்களின் விலை பத்துப் பன்னிரண்டு ரூபாய் பெறுமான முள்ளவைகளாகும். இனி புஸ்தகமும் தரவேண்டாம், இங்கு வரவும் வேண்டாம் என்று எண்ணிக்கொண்டு அதுமுதல் அங்கு செல்வதை நிறுத்தி விட்டேன். ஒரு வருஷத்திற்குப் பின் எனக்கு ஒரு அருமையான நூல் கிடைக்க, அதை என் நண்பனுக்குக் காண்பிக்க எண்ணி அவனிடம்சென்று "இதைப் பார்த்து விட்டுக் கொடுத்துவிடு" என்றேன். "வேறு புஸ்தகங்கள் கொண்டு வரவில்லையா ?" என்றான். இல்லை யென்று சொல்லி அப்பொழுதே விடைபெற்றுத் திரும்பிவிட்டேன். பிறகு சில மாதங்கள் பொறுத்து நான் தந்த அரிய புஸ்தகத்தைக் கேட்க, "அது எப்படியோ தவறிவிட்டது" என்றான். இவனா தவறி விடுபவன்? மிக்க மனவேதனையுடன் திரும்பலானேன். அத்துடன் நட்பும் முறிந்தது. நண்பர்கள் என்போர் இவ்விதம் பலவகைப்பட்டு மாறி நிற்கிறார்கள்" என்றார் நல்ல தம்பியார்.

* * *

"**தா**ன் ஒருவனைக் கோபிக்கும் போது தன் கோபத்திற்கு அங்கு ஒரு மதிப்பு இருக்கவேண்டுமென்று ஒவ்வொருவனும் விரும்புகிறான்" என்று தொந்திராயர் கூறினார். "ஆமாம் அது உண்மை. வீட்டுக்குள் நுழைந்த ஒரு ஆட்டை நான் வெகு கோபமாய் உதைத்துத் துரத்தினேன். என் கோபத்தையும் துரத்துவதற்கு நான் பட்ட அலைச்சலையும் அந்தப் பிராணி அறியாமல் ஒரு பக்கத்தில்போய் உட்கார்ந்து கொண்டது. என் கோபத்துக்கு ஒரு பெருமையும் இல்லாது போய்விடவே, நானும் சலித்து என் இடத்தில் போய் உட்கார்ந்தேன். இவ்விதமே, அடம் பிடித்த மனைவியிடம் கோபித்துக் கொள்வதில், அந்தக் கோபத்துக்கு மதிப்புத் தந்து அவள் அடங்காவிட்டால் இவனும் ஒரு மூலையில் போய் உட்காருகிறான்" என்று ஆமவடைப்பண்டாரம் பகர்ந்தார்.

* * *

"**ம**தனகாம நூல்கள் பெருகிப் போயின" என்றார் ஒருவர். "ஆம், விவாகத்திற்கு முன் ஒருவன் அந்த நூலை வைத்திருந்தால் அவனைப்பற்றி வித்தியாஸமான அபிப்பிராயம் ஏற்படலாம். விவாகத்திற்குப் பிறகு வைத்திருப்பினோ அது அவனுக்கு உதவக்கூடிய பள்ளிக்கூடத்துப் புஸ்தகமென்று நினைக்கிறார்கள்" என்றார் மற்றொருவர்.

* * *

"ஒருவனுக்கு அவனது முன் சரிதம் தெரிந்தவர்கள் அருகில் இல்லையாகில் பெருந்துக்கமே" என்றார் சின்னத்தம்பி. அது எப்படி யென்று மற்றவர் கேட்க, அதற்கு அல்லா பிச்சை பதில் சொல்ல எழுந்தார். "ஒருவனுடன் சிறுபோது முதல் கூடியிருப்பவர்கள் அவனது வாழ்நாளில் நடந்த பல சம்பவங்களையும் தெரிந்து வைத்தும், அதில் தாங்க

---

நாடகத்தில் சேர்ந்துள்ள சிறுமிகளெல்லாம் பெரும்பான்மையும் பிற்காலத்தில் கற்பு நலம் கெட்டோராகவே தயாரிக்கப்பட்டுவிடுவர். எனவே நாடகக் கம்பெனிகள் விபசாரத்தை வளர்க்கும் பகிரங்கமான படுகுழிகளாகும்.

னும் சம்பந்தப்பட்டும் இருக்கிறார்கள். பிறகு ஒருவேளை அவன் பழய சங்கதிகளை ஒருவரிடம் பிரஸ்தாபிக்கும்போது, அவன் விஷயங்கள் தெரிந்த ஒருவர் அதை அருகிலிருந்து கேட்டு உற்சாகப்பட்டு அவன் பேச்சுக்குத் துணையாக அவரும் பேசினால் எவ்வளவோ மன ஆறுதலாய் இருக்கும். அவ்விதமின்றி தன் முன் சரிதம் தெரியாதவர்களின் இடையிலிருந்து தனது சென்றுபோன நாட்களின் செய்திகளைக் கூறுவதில் அது கேட்பவர்களுக்கும் ஸ்வாரஸ்யமாகப் படுவதில்லை; சொல்பவனுக்கும் தன் விஷயங்களை அறிந்த ஒருவர் தன் அருகிலில்லையே என்ற ஏமாற்றமும் துயரமும் உண்டாகின்றது" என்றார் அல்லா பிச்சை.

***

"ஒருவனின் மனைவியை அடித்தவன் நல்லவனாய் விடுகிறான். அடித்ததைப் பார்த்து அவள் கணவனுக்குத் தெரிவித்தவனே பொல்லாதவனாகிறான். அடிபட்டவளோ தன்னை எவரும் அடிக்கவில்லை என்று கூறிவிடுகிறாள். அடித்த முரடனோ தான் எதும் அறியேன் என்கிறான். சொன்னவன் மட்டும் கடைசியில் அகப்பட்டுக்கொண்டு, கலகம் செய்ய எண்ணி வீண் கதை கட்டி விட்டதாக எல்லோராலும் தூற்றப்படுகிறான். இது உள்ள உண்மையைத் தெரிவிக்கப் போனதில் வந்த பொல்லாப்பு" என்றார் துன்னபோத்து முதலியார்.

***

"நம்மிடம் புதிதாய்ப் பேசவந்தவர் ஊர் சங்கதிகளெல்லாம் இழுத்து அவர் அப்படி, இவர் இப்படி என்று ஒவ்வொருவர் மீதும் கோணல் சொல்லும்பொழுது, நம்மைப்பற்றி மற்றவரிடம் கூறுவதற்கு என்னென்ன கோணல் தெரிந்திருக்கிறீர்களென்று கேட்டுவிட வேண்டும். அத்துடன் அந்த மனுஷ்யன் பிறரிடம் நம்மைப் பற்றிக்கூற எந்த சங்கதியும் தெரிந்து கொள்ளாதபடி செய்து சீக்கிரம் எழுப்பிவிட்டு அனுப்பிவிடவும்வேண்டும்" என்று காதர்பாட்சா நவின்றார்.

***

"நம்முடன் பிறந்தவர்களையோ நமது பெற்றோர்களையோ, நமது பால்ய நண்பர்களையோ, நம்மை வளர்த்து வாழ்வித்தவர்களையோ, இன்னும் நமக்கு உயிருக்குயிராக இருந்தவர்களையோ கனவிற் காண்கையில் எவ்வளவுக்கு மனம் ஒட்டி உடல் கருத்து ஒட்டிப் போகிறோம்? அவர்களின் பேச்சை எவ்வளவுக்குத் தாங்குகிறோம்? நமது பேச்சுக்கு அவர்கள் எவ்வளவு அன்பான மதிப்பு தந்து ஆதரிக்கிறார்கள்? அன்னோரின் முகத்தாமரை எத்துணை பாசத்துடனும் மலர்ந்து சோபிக்கின்றது? நம்மை எவ்வளவு பாராட்டி வார்த்தை பேசுகிறார்கள்? அவர்கள் சொல்லும் வேலைகளை எவ்வளவு பிரியமாய்ச் செய்து அவர்களுடன் கூடிக்குலாவுகிறோம்? எவ்வளவு உள்ளம் பொருந்தித் தழுவி அன்பு மாணிக்கங்களாகிறோம்? அவர்கள் இவ்வுலகில் இருந்த காலத்தும் உயிருக்குயிராகவே நின்றோம். கனவிலுங்கூட அவ்விதமே நிற்கிறோம். இந்த ஐக்கியப்பட்ட தன்மையும், ஒருவரை யொருவர் ஒட்டி ஆர்வத்துடன் அணைத்து நின்ற ஆதரணையும் இப்போது நம்மிடம் உறவு குலாவுகிற புதியவர்க்கத்தாரிடம் உண்டோ? அவர்கள் நடந்துகொண்ட தினுசிலே இவர்

---

பணம் உத்தியோகஸ்தனிடமே பெட்டியிலும் பாங்கியிலும் குவிந்து கிடக்கும். வியாபாரியிடமோ எவ்வளவு பணம் இருப்பினும், அந்தப் பணத்துக்குப் புது சரக்கு மூட்டையொன்று வாங்கிவிட்டிருப்பான்.

கள் நடக்கமுடியுமா? கண் மூடிப் போன அவர்களிடம் நாம் வைத்து ஏமாறிய அவ்வளவு ஆழ்ந்த அன்பை இவர்களிடம் வைக்கவேனும் நம்மால் முடிகிறதா? அப்படி அன்பு வைப்ப தற்குப் பொருத்தமாகவாவது இவர் கள் இருக்கிறார்களா? நடக்கிறார் களா?—போய் விட்டவர்களை நினைக்க நினைக்கப் பெருமூச்சுதான். ஆனால், ஒருசங்கதி; நமதுவயிற்றில் இப்போது பிறந்துள்ள குழந்தைகள் அந்த மறை ந்துபோனவர்கள் காட்டிய அத்தனை அன்பையும் அதிகாரத்தையும் தொந்த ரவையும் நமக்குக் காட்டி நம்மை இன் னும் இவ்வுலகில் சற்று மனஆறுதலோ டும் ஜீவித்திருக்க வைத்திருப்பதால், இதில் மயங்கி நாம் உயிர்வாழ்கி ரோம். ஏதாவதொன்றை முக்கிய மானதாகப் பார்த்து ஈசன் நம்மிட மிருந்து பிடுங்கிக்கொண்டு விடுகிறார். அதற்கு நாம் துடிக்கும் பொழுது,—"நீ ஆறுதல் பெறுவதற்காகத் தான் இன்னொன்றைக் கொடுத்திருக்கிறே னே, அதில் அவ்வளவோடு திருப்தி பெறு"—என்கிறார். என் செய்வது? போய்விட்ட ஒன்றுக்குத் துடிப்பதை மறந்து, இருக்கிறமற்றொன்றின் ஆறு தலில் மனம் சமாதானப் படவேண் டியதுதான்; வேறு கதியில்லை" என்று தாண்டவக்கோன் தமது அனு பவங்களை விவரித்தார். இத்துடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

'பஹதூர்' பொன்வண்டு செட்டியார்.

## நேசச் சங்கிலியின் விநோதத் தொடர்பு.

உத்தம அன்பினர்களாயுள்ளோர் தாங்கள் யதார்த்த மான வாஞ்சையையே ஒருவர்பால் கொண்டிருப்பதாக நம்பிவிடும்பொழுது, அவர்களைத் தங்களின் சொந்த மனுஷ் யர்களாக எண்ணிவிட்டு, கடிதம் முதலியவற்றை—"ஆகட் டும் பிறகு எழுதலாம்"—என்று பல வருடங்களை நெடுகத் தள்ளிக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். இவர்களை உண்மை யில் நேசித்துள்ளோரும்—"என்னவோ கடிதம் வரவில்லை; அவர் போக்கு அப்படி; எப்பொழுதாவது அவராகவே திடீரென்று வரைவார்; அப்பொழுது வட்டியும் முதலு மாகச் சேர்த்து மகிழ்வோம்"—என்று காத்து நிற்கிறார்கள். சில சமயங்களில் பரஸ்பரம் விலாஸமுங்கூடத் தெரியாமல் போய்விடுகின்றது. பின்பு ஒரு சிறு கடிதம் இவர்கள் இரு வரையும் முன்னிலும் அதிகமான அன்புடன் மீண்டும் ஜதை கூட்டிக் குலாவவைத்து விடுகின்றது. கடிதம் மட்டும் இவ்விதம் பஞ்சக்கோலமாய் மாயாஜாலம் புரியினும் இருவ ரும் தத்தம் அன்பை மறந்தாரல்லர். அலக்ஷியம் செய்தவரு மல்லர். அன்பிற்றாழ்ந்தாருமல்லர். மனம் மாறினோருமல்லர். இது ஒரு விநோதத் தொடர்பின் நேசச் சங்கிலியன்றோ!

# பணமே உலக காரணம்

பணத்தை ஆசிப்பது இழிதகைமை வாய்ந்தது என்றுகுறை கூறுவதும், குழந்தைகளுக்குப் பணத்தைச் சேர்க்க விரும்புவது பாவகரமானது என்று படித்துக் கொடுப்பதும், முன் யோசனையில்லாமல் வரம்பு கடந்து பொய் சொல்லுவதாகும். உள்ளதை மறைத்துப் போக்குக் காட்டுதலுமாகும். உலகெங்கும் பரவியிருக்கின்ற, பணஞ்சேர்ப்பதிலுள்ள ஊக்கமே நம்முடைய நாகரிகத்திற்கு ஒரு நம்பிக்கையுள்ள அடையாளம். அதுவே நம்முடைய சமூகத்தின் உண்மைத்தன்மை. உலகத்தில் பணந்தான் பிரதானம். பணம் நிறைந்திருப்பது-சுகமும், பலமும், கௌரவமும், கொடையும், கடமையும் நிறைந்திருப்பதற்குத் தெளிவான—மறுக்க முடியாத, அறிகுறியாக இருக்கிறது. ஆனால் தரித்திரமோ, சுகவீனம், பலவீனம், அவமானம், இழிதகைமை, அசிங்கம், அலக்ஷியம், திக்கின்மை முதலியவற்றைக் குறிக்கின்றது.

***

பணத்திற்கு இன்னுமொரு குணமுண்டு. அதாவது, அது நேர்மை வாய்ந்தவர்களைப் பலப்படுத்திக் கனம் பண்ணுவதுபோல, இழிந்தவர்களை அழிக்கின்றது. அது ஒரு சாபத்தீடாகுவது எப்பொழுது எனின், சிலருக்கு அது விலை குறைந்தும், சிலருக்குக் கிடைக்க முடியாதபடி அத்தனைவிலை யுயர்ந்தும் போகும்பொழுதுதான். அப்பொழுது வாழ்க்கையே ஒருசாபத்தீடாகி விடுகின்றது. ஏனெனில், வாழ்க்கையும் பணமும் ஒன்றையொன்று பிரிந்திருப்பதல்ல. பணத்தின் மூலமாகத்தான் சமூகவாழ்வு பரவுகின்றது. சவரனும், 'கரென்ஸி' நோட்டுக்களும் உண்மையில் எங்ஙனம் பணமேயன்றி வேறில்லையோ, அதேபோன்று பணமே வாழ்க்கை.

***

நாணயமான சம்பாத்தியத்தால் பணஞ்சேர்ப்பது ஒவ்வொரு மனிதனுடையவும் முதற் கடமையாகும். நாணயமான சம்பாத்திய மென்பது, பத்து அல்லது பன்னிரண்டு மணி நேரம் நெற்றி வியர்வை நிலத்தில் விழக் கடும் வேலைசெய்யும் நான்கு பேருக்குத் தலைக்கு ஆறு அணவும், ஒன்றுமே செய்யாமல் 'சும்மா' இருப்பவனுக்கு ஆயிரம் ரூபாயும் கொடுப்பதல்ல.

***

தேசத்திற்கு, இப்பொழுது இன்றியமையாத பொருள், உயர்ந்த நீதி போதனையல்ல; உணவுப் பொருள்களின் தாராளமல்ல; அடக்கமான வாழ்வல்ல; விடுதலையல்ல; கல்வியும் முன்னேற்றமும் அல்ல; நடத்தை தவறிப்போன சகோதர சகோதரிகளின் மீட்சி அல்ல; அன்பும், முத்தத்துவங்களோடு பொருந்திய (Fellow Ship of the Trinity) வாழ்

---

பழங்காலத்திய புஸ்தகங்கள் இன்னும் சில புஸ்தக வியாபாரிகளிடம் கிடைக்கின்றன. அவற்றை அங்கு விற்கத் தந்து காலமான ஆசிரியர்கள் அந்த விற்ற பணம் பெற்றனரா? அல்லது பெருமலே அலேந்து ஏமாறிக் காலமாக, அப்புஸ்தகங்கள் இவ்வியாபாரிகளின் சொந்த சொத்தாக ஆயினவா?

வுமல்ல; பின் வேண்டுவ தென்னவெனில் போதுமான பணமே. நாம் இப்பொழுது பாவவாழ்வை ஒழிக்கமுயலவேண்டாம்; கஷ்டங்களையும் பேராசையையும், புரோகிதச் சூழ்ச்சிகளையும் ஒழிக்கவேண்டாம்; அரசனுடைய சூழ்ச்சிகளையும், கலகங்களையும், சட்ட சுதந்தர பாத்தியதைகளையும் தொலைக்கவேண்டாம்; அறியாமையை அகற்றவேண்டாம்; குடியைக் குறைக்கவேண்டாம்; யுத்தத்தையும் உயிரையே குடிக்கும் இரத்தக் காட்டேறிகளையும் துரத்தவேண்டாம்; இன்னும் சீர்திருத்தக்காரர்கள் சொல்லுகின்ற பலவிதமான வேலைகளில் ஒன்றையுமே செய்யவேண்டாம்; ஆனால் வறுமையை மட்டிலும் நெருங்க விடாது ஒழிக்க வேண்டும். வறுமை நோய் தீர்க்கும் நன்மருந்து பணமே. பணமே உலக காரணம். இவ்வளவு பாடுகளும் வித்தைகளும் அந்தப் பணம் தேடுவதற்கே.

K. C. பிச்சுமணி ஐயர்.

ஒருவனைக்கொன்றவன் உடனே சாவான். பலரைக் கொன்றவன் பட்டமாளுவான். ஒரு தோஷச் செய்கைக்குட்பட்டவன் வருந்துவான். பல தோஷச் செய்கைக்காரன் அதிலேயே மகிழ்வான். காலணு திருடியவன் அகப்பட்டுக் கொள்வான். பல ஆயிரக்கணக்கில் களவாடியவன் பல்லக்கில் போவான். ஒருமுறை தவறியவளுக்கு விபசாரி. நாளும் தவறி நடப்பவட்கோ—தேவதாசி. ஒன்றும் செய்யாதவன் நல்லவன். பல செய்தவன் பாவி.

## காலம்—நேரம்—மன பக்குவம்.

நண்பராக ஆகிறவர்கள்தான் நண்பராகிறார்கள். உபசாரம் பேசும் அறிமுகஸ்தர்களும் அந்தக்குணம் இருந்தால்தான் அறிமுகஸ்தராகிறார்கள். கேட்டதற்குப் பதில் சொல்லி அவ்வளவுடன் தொலைந்ததென்று விலகும் அன்னியர் பற்றுதலென்கிற பாக்கியம் இன்மையால் அப்படி அன்னியப் பேய்த்தன்மை பூண்கிறார்கள். நண்பனாகக் கூடியவன் தன் எதிரே வந்திருந்தும் அவனிடம் நட்பு பாராட்ட நினைவு தோன்றாது வெறுமனே இருந்துவிட்ட துர்ப்பாக்கியக் கட்டைகள் எத்தனையோ? எதற்கும் பாக்கியம் இருக்கவேண்டும். அத்துடன் அதற்கென்று குறித்த அந்தந்தக் காலமும் நேரமும் அதிர்ஷ்டமும் ஒத்துக்கொள்ள வேண்டும். இல்லையாகில் ஒண்டி மரமே! வெறுஞ் சுவரே! வீணே!




## "கௌஹர்ஜான் காதல்"

**அல்லது கரளபுரி ரஹஸ்யம்:—**

"தாருல் இஸ்லாம்" ஆசிரியர் ஸ்ரீமான் பி. தாவூத்ஷா. பி.ஏ. அவர்கள் இயற்றியது. இரண்டு பாகங்களுடனும் கூடியது. படங்களுள்ளது. தனித்தனி விலை ரூ. 1—8—0.

கதை வாசிக்க ருசிகாமாயிருக்கிறது. படித்த வகுப்பாரின் கவலை வாழ்வில் அடுத்தநிமிஷம் சாகும் சவத்திற்குக்கூட மாங்கல்யம் சூட்டிப் பணம் பெறுவார் போன்றும் காட்டப்பட்டுள்ள கற்பனை விசித்திரமானது. இந்த ஸம்பவமே இந்த நாவலின் பிரதானபாகம். இங்ஙனம் முடிந்த விவாகத்தின் பிந்திய ஸம்பவங்கள் மிக்க மர்மமாகி அத்யந்த சுவையுடன் தொடரப்பெற்று, இறுதியில் கொலையின் உண்மையும் கதாநாயகியின் தந்தை இன்னாரென்று தெரியவரும் இடமும் திடுக்கிடக் கூடியதாகிறது. பாஷாண சம்பந்தமான கதை இது. ஆங்கில மொழி பெயர்ப்பாதலின் மிக்கவிரிவு கொண்டுள்ளது. கதா பாத்திரங்களின் பெயர்களை இஸ்லாமிய வடிவமாக்கியது ஆசிரியரின் குலாபிமானத்தைக் காட்டும். ஆக்கியோனின் பெயர்வரும் பக்கங்களை மறைத்து விட்டு இக்கதையை வாசிப்பினும், இது ஒரு கற்றறிந்த மேதாவியால் வரையப்பெற்ற நூலென்பதை எவரும் கண்டு கொள்வர். தமிழ்ச்சுவை, காதற் சுவை, அநுபவச்சுவை, இம்மூன்றும் நிரம்பிய நாவல்.

## "மாதவமணி"

**அல்லது மாசிலாக் காதல்:—**

"ஜகன்மோகினி" ஆசிரியை ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி அம்மையவர்கள் இயற்றியது. விலை அ. 3

உண்மைக் காதலின் உயரிய தத்துவங்களை நன்கு விளக்கியுள்ளது. இனிமை பொருந்திய நடை. பணமொன்றையே கவனித்துக் கல்வி மணத்தை அலக்ஷியம்செய்யும் பெண் வீட்டாரது பேதமையை இக்கதையில் காணலாம். மாதவன் ஸ்ரீமணி இவர்களின் ஆழ்ந்த காதலும் வாழ்க்கையும் வாசகர்களின் மனத்தைக் கவரச்செய்யும். கதை சிறிதேயெனினும் மிகச் சுவையுடையது.

## மதுரகான பக்திரஸ கீர்த்தனங்கள்:—

திரிசிரபுரம் ஸ்ரீமான் மங்களதாஸ் அவர்கள் இயற்றியது. விலை அணா 5.

"பருவந்தனில் மழை பெய்திடா பயிர்போல வாடினேன்" என்பது போன்ற மனத்தை யுருக வைக்கும் பாக்கள் இந்நூலின் கண் நிரம்பியுள்ளன. பக்திச்சுவை மிகுந்தது. பரமனைப்பாடிப் போற்றுவதற்குப் பக்குவமான நூல். எதுவும் கருத்தூன்றி ஆவலுடன் வாசிப்பவர்க்கே தெரியும்.

[இப்புஸ்தகங்கள் "அமிர்த குண போதினி" ஆபீஸில் கிடைக்கும்.]

---

எத்தனையோ பேர் கூடிக்குலாவி நின்ற வீட்டில் தான் தன்னந்தனியனாய் நிற்கும் நிலையை நினைக்க நினைக்க எத்துணையோ தவிப்பானதாக இருக்கலாம்




# ஏழு வாலிப யோகிகள்.

பல்லாண்டுகளுக்கு முன் சின்ன ஆசியாவில் ( Asia Minor ) நீர்வள நிலவள மிக்கதான யெபீஸஸ் (Ephesus) என்னும் நகரமொன்றிருந்தது. அந்நகரில் பொலிவுற்று விளங்கியிருந்த கட்டிடங்களில் கற்களால் உண்டாக்கப்பட்ட கம்பீரமான கோயில் ஒன்று இருந்தது. இதில் இருந்த டையானு (Diana) என்னும் தேவதையை ஜனங்கள் பூசித்து வந்தார்கள்.

***

கிறிஸ்து பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு இக்கோயில் கட்டப்பட்டது. ஸேயின்ட்பால் (St.paul) என்பவர் யெபீஸஸில் வசித்துவந்த பொழுது அவ்வாலயத்துள் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அனுதினமும் போய் வருவதைப் பார்த்திருந்தார். இந்த சந்நியாசியார் டையானு தேவதையைப் பூசிக்காமல் இயேசுகிறிஸ்துவை வழிபடுங்களென்று ஜனங்களுக்குப் போதித்ததாகவும், அதற்காகக் கோபாவேசம் கொண்ட சிலர் இவர் மீது துவேஷம் மிகுந்து நின்றனரென்றும் பைபின் (Bible) கூறுகிறது. பின்னும் ஒருநாள் சீற்றங்கொண்ட சிலர் "யெபீஸியர்களின் டையானுவே பெரிய தேவதை" எனக் கூவிக்கொண்டே நகர் முழுதும் திரிந்தார்கள். ஓர் சமயம் ஸெயிண்ட் பாலைக் கொன்றிருந்தாலும் கொன்றிருப்பார்கள். நல்ல வேளையாக அவர் இவர்கள் கையில் அகப்படாமல் தப்பித்துக்கொண்டு கிறிஸ்தவ மதத்தைப் பற்றிப் பிரஸங்கஞ் செய்துகொண்டே ஜீவித்து வந்தனர்.

***

இப்பெரியார் இறந்தபின், டையானுவையும், மற்ற தேவதைகளையும் பூசித்துவந்த யூதர்களே பெரும்பாலும் இருந்தார்களேனும், கிறிஸ்தவர்

---

[ஞானமுக்தி பெறுதற்குத் தமது மதமே உயர்ந்ததென்று கூறிப் பிற மதத்தினரைத் தமது மதத்திற் சேரும்படி யழைப்போர் தம்மதத்துள்ளும் எத்துணைக் கடைகெட்ட மாந்தர் மத வுணர்ச்சியே யற்றுக்கிடக்கின்றன ரென்பதைச் சிந்திக்கக் கடவர். பிற மதத்தினரை யழைப்பதைவிடத் தம் மதத்திலுள்ள மந்தமதிகளைத் திருத்துவது மேல். ஒரு மதத்தில் இருந்து விட்டதினாலேயே இறைவனைக் கண்டுவிட முடியாது. அதற்கென்று முயன்று பக்குவ ஞானம் பெறுவோர்தாம் பரமனின் திருவடி நீழலைக் காண்பர். அந்தப் பக்குவம் தத்தம் மதங்களிலிருந்துகொண்டே பெறலாம். பெற்றுள்ளார். பிறமதம் புகுதல் அவசியமில்லை. எந்தமதத்திலும் ஞானிகள், யோகிகள் எப்போதும் இருந்து வந்திருக்கின்றனர். ப-ர்.]

களும் அந்நகரில் அநேகர் இருந்தனர். அச்சமயம் டேஷியஸ் (Decius) சக்ரவர்த்தி அங்கு ஒருகால் வந்தான். அவன் கிறிஸ்தவமதத்தை விட்டுவிடும்படிக் கடுமையான கட்டளை யிட்டான். இவனது உத்தரவுக்கடங்கி நடவாதவர்களை யெல்லாம் கொன்றான். இதற்குப் பயந்து பலர் தங்கள் தங்கள் மதத்தை முற்றிலும் விட்டுவிட்டு யூதர்களானார்கள். சிலர் அரசனுடைய கட்டளையைக் கடந்த தங்கள் உறவினர்களையும் கூடக் காட்டிக் கொடுத்தார்கள். ஆனால், யெபீஸஸ் நகரில் கிறிஸ்தவ மதத்தினரும் ஒருவரிடத் தொருவர் நீங்கா அன்பு கொண்டவர்களுமான ஏழு வாலிபர்கள் இருந்தனர். அவர்களின் பெயர்:—

1. மேக்ஸிமியன் (Maxmian)
2. மால்கஸ் (Malchus)
3. மார்ஷியானஸ் (Marcianus)
4. டேனிஸ் (Denis)
5. ஜான் (John)
6. ஸிராபியன் (Serapion)
7. கான்ஸ்டன்டைடியின் (Constantine)

என்பனவாம். இவர்களுடைய ஸன்மார்க்க நிலைமையையும், ஏழைகளிடத்து இரங்கி அவர்களுக்கு வேண்டுவனவற்றைக் கொடுக்குந் தன்மையையும், கிறிஸ்தவமதத்தைப் பரவச்செய்வதில் அவர்கள் கொண்டிருந்த ஊக்கத்தையும் அறியாதவரிலர். ஆதலின் சக்ரவர்த்தியைச் சந்தோஷிக்கச் செய்யவேண்டுமெனும் ஆவலால் இவர்களைப் பலவாறு தூஷித்துக் காட்டிக் கொடுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டவர் பலர்.

***

டேஷியஸ் இவர்களின் பெயர்களைக் கேட்டதும் அவ்வெழுவர்களையும் தன் முன்பு கொண்டுவரும்படி ஆக்ஞாபித்து; தான் மறுமுறை நகருக்கு வருவதன்முன் டையானு தேவதையை அவர்கள் வழிபடவேண்டுமென்றும், இல்லையேல் அவர்கள் கொல்லப்படுவார்களென்றும் அவர்களுக்கு எச்சரிக்கை செய்தனன். இதனால் இவ்வேழு நண்பர்களும் ஆபத்துக் குள்ளானவர்க ளானார்கள். எல்லோரும்சேர்ந்து ஆலோசித்து நகரைவிட்டு நீங்குவதாக நிச்சயம்செய்து கொண்டு, சில மைல்கள் தூரத்திற் கப்பாலுள்ளகிலியன் (Celion) மலைக்கண்ணே உள்ள ஒருகுகையில் மறைந்துகொண்டார்கள். தினந்தோறும் அவர்களிலொருவன் பிச்சைக்காரனைப்போல் வேஷம் தரித்துக் கொண்டு, உண்பதற்காக ஆகாரப் பொருள்கள் வாங்குவதற்கும், இவர்கள் விஷயமாய்ஏதேனும் நடக்கிறதா என்பதை அறிவதற்கும் நகருக்குள் சென்று வருவது என்ற வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

***

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் மால்கஸ் என்பவன் யெபீஸஸ் நகருக்குட் சென்று மிக்க துயரங்கொண்டவனாய்த் திரும்பிவந்தான். ஏனெனில், சக்ரவர்த்தி மறுபடியும் நகருக்கு வந்திருந்ததாயும், இன்னுமொரு முறைஇவர்களைத் தன் முன்பு கொ

---

[கிறிஸ்துநாதரைத் தாழ்வாகப் பேசுகிறவர்கள்—அவர் உலக சுகங்களைத் துறந்த ஞானி, சிற்றின்பங்களை வெறுத்த பெரியார், பிரம்மசாரியாயிருந்த மஹான், சினம் என்பதையே உணராத ஸாந்த ஸமுத்திரமாய் தாழ்மையையே தமக்கு அணிகலமாகப்பூண்ட தயாநிதி, கருணைக்கடல்—என்பவைகளையாவது ஒப்புக்கொள்ளட்டும். இவற்றை யில்லையென்று மறுக்க முடியுமா? ப-ர்.]

ண்டுவரும்படிக் கட்டளையிட்டிருந்த தாயும் கேள்விப்பட்டான்.

***

ஆனால், இவ்வெழுவரும் மிக்க தைரியசாலிகள். அவர்களில் ஒருவனேனும் தான் கையாண்டுவரும் மதத்தினைத் திரஸ்கரிக்க நினைத்தானில்லை. "நம்மைப் பலவிதமாக ஹிம்ஸித்தால் அவற்றைத் தாங்குவதற்கேற்ற பலமுண்டாகுமாறு நாம் நன்றாய்ப் புசிப்போம்" என்று அவர்கள் கூறிக் கொண்டார்கள். ஏனெனில் தாங்கள் மறைந்து வசிக்குமிடத்தை எவ்விதமேனும்கண்டுபிடித்துக் கொடூரமான கொலைபாதகத்தைச்செய்வார்களென்பதை அறிந்தவர்களா யிருந்தனர்.

***

ஆகவே, அவர்கள் திருப்தியாய் உண்டு, குடித்து, தெய்வத்தைத் தொழுதுபின் உறங்கினர்கள். காலையில் (?) எழுந்தார்கள். தங்களுக்கு உண்டாகப் போகும் ஆபத்தையும் உணர்ந்தார்கள். இருப்பினும் ஆகாரத்திற்கு வேண்டுவனவற்றை வாங்கி வருதல் அவசியமாயிருந்தது. ஆதலின், மால்கஸ் என்பவனே மறுபடியும் பிச்சைக்காரன்போல ஆடைகளை அணிந்துகொண்டு செல்வதற்குத் தயாரானான். தன் நண்பர்களுக்கு ஆசிகூறிக் கடவுளை மானஸீகமாய்ப் பூசித்துக்கொண்டு நகரை நோக்கிப் புறப்படலானான்.

***

அவன் குகையைவிட்டு நீங்கிய பொழுது சற்று தூரத்தில் சில வேலையாட்கள் மலையின் பக்கத்தே சிதறுண்டு கிடக்கும் பெரிய கற்களை உடைத்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றான். அவர்கள் இவனை உற்றுநோக்கினர்கள். ஆனல் மால்கஸ் தன் மனதிலுள்ள விசாரத்தினால் அந் நிர்மானுஷ்யமான இடத்தில் மனிதர்களைக் காண்பது அபூர்வமாயிற்றே என்பதை யோசித்தானில்லை. மேலும் அவர்கள் உடைத்துக் கொண்டிருக்கும் கற்கள் அங்கு எவ்விதம் வந்தன என்பதைப்பற்றி ஆச்சரியங் கொள்ளவுமில்லை. வேலையாட்களுக்கு ஆசி கூறித் தன் வழியை நோக்கிச் சென்றான்.

***

கொஞ்சநேரத்திற்குள் நகரின் கதவுகளில் ஒன்று இவன் கண்களுக்குத் தென்பட்டது. அதன்மீது காலைக் கதிரவனின் கிரணங்கள் தாக்குவதால் ஒளி மிகுந்து விளங்கும்—சிலுவை யொன்று இருந்தது. தான் காண்பது பொய்யோ 'மெய்யோ என்ற ஐயப்பாடுற்றவனாய்க் கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தான். வாஸ்தவத்தில் சிலுவை இருந்தது. அதன் ஸமீபத்தேயுள்ள மற்றொரு கதவண்டை சென்று பார்த்தான். அங்கும் ஒரு சிலுவை இருந்தது. கிறிஸ்தவ மதத்தை வெறுத்த நகரத்தின் கதவுகளில் சிலுவை எங்கிருந்து வந்ததென்று மிக்க ஆச்சரியங் கொண்டவனாய் நடந்து சென்று கொண்டிருக்கும்பொழுது ஒவ்வொரு கதவின்மீதும் ஒவ்வொரு சிலுவை செதுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். இவைகளெல்லாம் ஸ்வப்

---

ஸம்சார பந்தத்தில் சிக்குண்டுள்ளயோகி தாம் அதில் பற்றுதல் எதுவும் கொண்டிருக்கவில்லை யென்று கூறினும், அவரிடத்தில் ஸம்சாரக் கதைகளும் காமஸம்பந்தமான கறைகளும் இல்லாமலிராது. இவரைவிட ஸம்சார பந்தமேயற்ற சிற்றின்பத்தை வெறுத்தயோகியே மேலானவர். இருவருள்ளும் ஸம்சாரபந்த மற்றவர்க்கே தூய்மை, ஞான ஒளி, பக்குவபாகம்—அதிகமாம்.

பணமே யென்று கருதினவனாய்க் கடைசியில் நகரத்துள் நுழைந்தனன். அங்கும் அறிமுகமாயிருந்த தெருக்க ளெல்லாம் மாறுபட்டிருந்தன. புதிய கட்டிடங்கள் பல காணப்பட்டன. ஜனங்களின் நடையுடை பாவனைக ளெல்லாம் வேறுபட்டிருந்தன. எல்லா இடங்களிலும், சாமான்கள் விற்கும் இடத்திலும், மூலைமுடுக்குகளிலும் ஒவ்வொரு சிலுவை வைத்திருப்பதை மால்கஸ் பார்த்தான்.

***

**இது யெபீஸஸ்** அன்று என்று கருதிக்கொண்டு தெருவில் செல்வோ ரனைவரையுங் கேட்டான். அவர்கள் "இது யெபீஸஸ்" என்று சொல்லி இவனை உற்று நோக்கினர். இதற்குள் மால்கஸ் தான் கொண்டிருந்த மன மயக்கம் நீங்கப் பெற்றவனாய்த் தன் வரவை எதிர்நோக்கியிருக்கும் நண்பர் களின் நினைவு உண்டாகவே, சாமான் கள் விற்கப்படும் இடத்திற்குச் சென் றான். சாமான் வாங்கிக்கொண்டிருக் கும்பொழுது அங்கு வந்திருந்தவர்க ளெல்லோரும் புனிதமான இயேசு கிறிஸ்துவின் திவ்யநாமத்தை உச்சரிப் பதைக் கேட்டான்.

***

முன்னிலும் அதிக ஆச்சரிய மடைந்தவனாய், "இது என்ன விந் தை? நேற்றுவரையில் இயேசுநாதரை நினைத்தவர்களெல்லோரும் மரணதண் டனை யடைந்தார்களே; இன்று யாவ ரும் அவருடைய பரிசுத்த நாமத்தைப் பாராயணஞ் செய்கின்றனரே, எவ்வி தம் இந்த மாறுதல் நேர்ந்தது" என்று மனதில் நினைத்துக்கொண் டான்.

***

பின், சாமான் வாங்கினதற்குத் துட் டைக் கொடுத்த பொழுது கடையி லிருந்தோரனைவரும் இவன்கொடுத்த நாணயத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்து, இந்த மனிதன் ஏதேனும் பழம் புதையலொன்றைக் கண்டெ டுத்தான் போலும் என்றனர்.

***

"உனக்கு இந்த நாணயம் எங்கே கிடைத்தது? இது நம் காலத்திய தன்று. முன்னம் இருந்த ஒரு சக் ரவர்த்தியின் காலத்தியதா யிருக்க வேண்டும்- எவ்விடமிருந்து நீ இதை எடுத்தாய் என்பதை எங்களுக்குச் சொல்லு. நீ கண்டு பிடித்துள்ள புதையலில் எங்களுக்குங் கொஞ்சம் பகர்ந்து கொடு, நாங்களும் நன்றி யுள்ளவர்களாய் இச்சங்கதியை வெளி யிடாமலிருக்கிறோம்" என்று கூறி னார்கள்.

***

**இதைக்** கேட்டதும் மால்கஸ் மிக்க திகிலடைந்தவனாய்த் தன்பணத் தையும் தான் வாங்கின சாமான்களை யும் வைத்துக் கொள்ளும்படி அவர்க ளைக் கெஞ்சிக் கேட்டான். ஏனென் றால், கொஞ்ச நேரத்திற்குள் டெஷி யஸ் சக்ரவர்த்திக்குத் தன்னைக் காண் பித்துக்கொடுத்து விடுவார்கள் என்று பயந்தான். இவன் சந்தேகித்தவண் ணமே அம்மனிதர்கள் இவனைச் சுற் றிச் சூழ்ந்து இவனுடைய கழுத்தில் ஒரு கயிற்றைப் போட்டுத் தெருவின் வழியே இழுக்க ஆரம்பித்தனர். இதற் குள், யாரோ ஒரு வாலிபன் பணப் புதையலொன்றைத் தோண்டி யெடுத் ததாகவும், அதைத் துரைத்தனத்தா ரிடம் ஒப்புவிக்க மறுப்பதாகவும் வதந்தி நகர முற்றிலும் பரவவே

---

செல்வம் என்பது சிந்தையின் அமைதி. அமைதியுள்ளம் கொண்ட உயர்ந்த சம்பளக்காரன் யார்? எவரும் இல்லை. எவரும் தமது சம்பளம் செலவுக்குச் சற்றும் போதவில்லை யென்று கூறுவதே எங்குமுள்ள முறையீடு.

ஜனங்கள் திரள் திரளாகக் கூடிவிட்டார்கள். மால்கஸைப் பிடித்தவர்கள் அவனை அதிகாரிகளின் முன் கொணர்ந்து நிறுத்தினார்கள்.

*_*

அதிகாரிகள்:—"நீ எந்த நகரவாசி?"

மால்கஸ்:—"என் நகரம் யெபீஸஸ் என்பதேயாம்?"

அதிகாரிகள்:—"உன்னுடைய உறவினர்கள் யாவர்?"

மால்கஸ் தன் பந்துக்களுடைய பெயர்களைக் கூறவே, ஜனங்களெல்லோரும் ஒருவரை யொருவர் பார்த்தனர். ஏனெனில் அவ்வாறான பெயரை யுடையவர்கள் அந்நகரத்திலேயே எவரும் கிடையார்.

அதிகாரிகள்:—"உனக்கு இந்நாணயம் எங்கிருந்து கிடைத்தது?"

மால்கஸ்:—"என்னுடைய நண்பர்கள் சாப்பாட்டிற்கு வேண்டிய சாமான்கள் வாங்கிவரும்படி இதை இன்று காலையில் என்னிடம் கொடுத்தார்கள்."

அதிகாரிகள்:—"ஆனால் இந்நாணயம் முந்நூற்று எழுபத்திரண்டு வருடங்களுக்கு முன் வழங்கி வந்ததாயிருக்கிறது. டெஷியஸ் சக்ரவர்த்தியின் காலத்தில் செய்யப்பட்டதாயிருக்கிறது."

மால்கஸ்:—(நடுங்கின குரலுடன்) "ஆனால் டெஷியஸ் சக்ரவர்த்தி இப்பொழுது இந்நகரிலில்லையோ?"

அதிகாரிகள்:—"டெஷியஸ் சக்ரவர்த்தியா? அவர் இறந்து நூற்றுக் கணக்கான வருடங்கள் ஆகின்றனவே."

(மறு ஸஞ்சிகையில் முடிவு.)

ச. முனிஸ்வாமி பிள்ளை.
"சரஸ்வதி சபை"த் தலைவர், டர்பன்.

[எந்த மதத்தினுள்ளும் அற்புதங்களுண்டு, ஞான ஒளிகளுண்டு; அவற்றினை அறியவல்ல பக்குவவிகள் மட்டுமே அறிவர். அந்தந்த மத தத்துவங்களை அந்தந்த மதங்களிற் பிறந்தவர்கள் அறிகிற உணர்ச்சிபோல் மற்றவர்கள் அறிவதற்கில்லை. தாம் பெற்றெடுத்த மக்களிடத்துக் காட்டும் அன்பையும் பாசத்தையும் மற்றவரின் மக்களிடத்துச் செலுத்த முடிகிறதில்லை. மதவிஷயத்திலும் இவ்விதமேயாம். தமது மதத்தின் மீதுள்ள அபிமானத்தால் அதை உயர்த்திப் பேசுதற்காகப் பிற மதங்களைத் தாழ்த்திக் கூறுதல் அறியாமையும் மௌடீகமுமாகும். தங்களின் மதத்தைப் பிறர் கௌரவிக்க வேண்டுமென்போர் மற்றவர்களின் மதத்தையும் தாம் கௌரவித்தலே நியாயம். அன்னிய மதங்களிலுள்ள உயர்ந்த ஞானதத்துவங்கள் துவேஷ உள்ளம் சோண்டோர்க்கு எளிதிற் புலனாகா. தூஷகர்கள் ஒரு மதத்தை இழிவுபடுத்துவதனாலேயே அந்த மதம் இகழ்ச்சியைப் பெற்று விடுவதில்லை. அதன் தூய்மையும் மாசுபடுவதில்லை. இகழ்ந்தவர்களின் காலம் முடிவாக, அவர்கள் கேவலப்படுத்திய மதமோ அதன் தத்துவங்களோ எப்போதும் போல் மலைவிளக்காய் ஞான ஒளிவீசி உயர்ந்து பிரகாசிக்கும். இதைத் தூஷகர்கள் உணர்வதில்லை. டெஷி

---

"முட்டாள்தனம்"—"சோம்பேறி" என்ற இப்பதங்கள் அவதூறு சொற்களாகாவென்று கோர்ட்டில் தீர்ப்பாயுள்ளது. எனினும் இச்சொற்களுக்கு சந்தர்ப்பானுசாரமான பலவித அர்த்தங்கள் எப்போதுமுண்டு.

யஸ் கிறிஸ்தவ மதத்தை ஸர்வ நாசம் செய்ய நினைத்தும் அது அழிந்ததோ? அவன் கோரிக்கை பூர்த்திபெற்றதோ? அவன் மண்ணோடு மண்ணாகி முடிய, கிறிஸ்தவமதமோ அவன் காலத்திற்குப் பிறகும் ஜெகஜ்ஜோதியாய் எங்கணும் வியாபிக்கலானது. **மதத்தின் மூலதத்துவம்** ஒருகட்டிடத்தின் அஸ்திவாரம் போல் நன்கு ஊன்றியிருக்கையில், **அந்த அஸ்திவாரமான மூலக்கோள்கைகள் முக்கியமேயன்றி,** பிற்காலத்தில் அதன் மேற்படிந்த மாசுகளால் அக்கட்டிடம் அழுக்கு படிந்திருப்பின் அந்த மாசுகளைக்கொண்டு எந்த அவசரத் தீர்மானமும் செய்துவிட வொண்ணாது. மத தூஷகர்கட்குப்பிறமதநிந்தையிலேயே பொழுதுகழியுமேயன்றி இறைவனைத் தூயமனத்துடன்சிந்திக்கவோ, துதித்துப் பக்குவம் பெறவோ நேரமேயிராது. அகங்கார உள்ளத்தில் எப்போதுமே திடமான பக்தி உதயமாகாது. முற்றுமுணர்ந்த பெரியோர் மௌனிகளாய்த் தியான பரவசர்களாவரன்றி ஒருபோதும் பிறமத தூஷகராகார். முற்காலத்திய நிகழ்ச்சிகளின் படிப் பினை இதுவாக, இது இக்காலத்துக்கும் பொருத்தமுடையதே. ப-ர்.]

## ஞானோபதேசமல்ல—உட்கருத்தைக்கவனிக்கவும்.

ஒருவரது பிரிவுக்காக ஆயுட்காலம் முழுமையும் வருந்தினும் கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ இயலுமாவெனச் சிறிது சிந்தித்துப் பார்த்திடுக. பிரதி இரவும் நாம் தூங்கும்போது நமது பந்து மித்திரர்கள் சம்பத்து முதலியன எங்கே போகின்றதென்று கவனித்துப் பார்க்கக்கடவோம். அப்பொழுது நாம் ஸ்வப்பனவஸ்தையிலிருப்பதும், எவ்வித பற்றுதலுமற்று ஒதுங்கித் தூரத் தன்னை மறந்து கிடப்பதும் விளங்கும். இது தத்துவ போதனையல்ல; உண்மையில் நடப்பதுதான். காலமானவர் யார்? நாம் யார்? யாருக்கு யார் துணை? என்ன சம்பந்தம்? அவரவர் கர்மாநுஸாரம் தீர்ந்ததும் அவரவர்க்கு ஏற்பட்ட வழிப்பிரகாரம் அவரவர் முந்தியோ—பிறகோ போகநேருகிறது. நாமும் ஒருநாள் இறக்கவேண்டியவர்களே. நமது உயர்ந்த கல்வி ஞானம் நமது விஷயங்களில் தான் (நம்மைத் தேற்றிக் கொள்வதில்) காட்டப்படவேண்டும். வருத்தத்தைவிட்டு எப்போதும் போல் சாந்தமாய் சகித்து இருக்க முயலவேண்டும். வருந்தியழைத்தாலும் வாராதது வாரா என ஆயிரம் முறையாவது பிறருக்குச் சொல்லியும் எழுதியும் இருப்போமல்லவா? அதைநமக்கே கூறியதாகக்கொண்டு ஸாந்திபெறக்கடவோம்.

மற்றவர்பால் சார்ந்து அவர் இல்லத்தில் வசிக்கும் நாளில் கனத்த மனக் கஷ்டமும், சகிக்கொணாதவாதனையும், சுடுசொல்லும் எவ்விதமோ தானேபுகும்.

# மூளைக்கு வேலை.

## I

## தொடரெழுத்து வினா ?

வரிசை:—(1) இன்பரஸ நூல்களிலொன்று. (2) சிரஞ்சீவிகளில் ஒருவரின் பெயர். (3) ஆதித்தனின் நாமங்களில் ஒன்று. (4) மரங்களில் ஒன்று. (5) மதுபானம் செய்யும் புல்லர் என்பதற்கு வேறு பெயர். (6) பைரவ மூர்த்தியின் பெயர். (7) அஷ்டநாகங்களி லொன்று.

குறிப்பு :—இந்த எழு பெயர்களின் தொடரெழுத்துக்களால் சுப்ரமண்யரின் நாமங்களில் ஒன்று வரவேண்டும். அப்படி அமைக்கும் ஒவ்வொரு பெயரும் எழு எழுத்துக்களுள்ளதாய் இருக்கவேண்டும்.

☞ சுப்ரமண்யாது நாமத்தின் முதல் எழுத்து முதல் வரிசையான இன்பரஸ நூல்களில் ஒன்றாயும், இரண்டாவது எழுத்து இரண்டாம் வரியான சிரஞ்சீவிகளின் பெயர்களில் ஒன்றாயும், இவ்விதமே வரிசைக் கிரமமாய் ஒவ்வொரு எழுத்தாகப் பின்தொடரப்பெற்று முடிவுபெறவேண்டும்.

பரிசு:—இதற்கு விடை யனுப்புவோரின் பெயர்களைக் குலுக்கி சீட்டுப்போட்டு சீட்டு விழுந்த ஒருவருக்கு "அமிர்த குணபோதினி" நம்மால் ஒரு வருஷத்திற்கு இனாமாகத் தரப்படும். பத்திராசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.

N. S. வெங்கட சுப்ரமணியம்.

## II

## விடுகதை வினா ?

(1) ஓர் ஊரின் கடைசி இரண்டெழுத்தும், மற்றோர் ஊரின் முதல் இரண்டெழுத்தும் சேர்க்கில் "ராஸ்கல்" என விளங்கும்.—அவ்விரண்டு ஊர்களின் நாமதேயங்களென்ன ?

(2) அ என்பவர் ஆ என்பவருடன் இ என்பவரின் இல்லத்திற்குச் சென்றார்கள். இ:—வாருங்கள் ! (இருவரும் ஓரேமுகச் சாயலாயிருக்கக் கண்டு ஆ என்பவரைச் சுட்டிக் காண்பித்து) "இவர் உமது சகோதரரா"? என வினவினார். அ:—இல்லை, சகோதரரும் சகோதரியும் எனக்கில்லை, ஆனால் (ஆ-என்பவரைச் சுட்டிக் காண்பித்து) இன்னவருடைய தகப்பனார் எனது தகப்பனாரின் குமாரன் என்றார்.—ஆ என்பவர் அ என்பவருக்கு என்ன விதமான பந்து ?

மு. நா. தெண்டாயுதபாணி பிள்ளை.

## III

## விடுகதை வினா ?

(1) சாலையில் போய்க்கொண்டிருந்தபோது எதிரில் ஒரு வாலிபனும் ஒரு மங்கையும் வந்தனர். "இவன் உனக்கு என்ன சொந்தம்?" என்று அம்மங்கையைக் கேட்க, அவள் "இவனுக்குத் தகப்பன் எவனுக்கு மாமனாரோ, அவனுக்குத் தகப்பன் எனக்கு மாமனார்" என்றாள். இருவருக்குமுள்ள சொந்தம் என்ன ?

(2) நான்கெழுத்துப் பெயர் உற்பிச்சமாம். முதலெழுத்து ஈயாகும். இரண்டாவதெழுத்தின்றேல் இல்லாளாகும். முதலெழுத்தை நீக்கின் கடவுளை வேண்டிப் பெறுவதாம்.

(3) ஒரு கோபுரத்தின் படிகளை இரண்டு இரண்டாகத் தாண்டிச்சென்ருல் ஒரு படி மிஞ்சும். மூன்று மூன்ருகத் தாண்டிப்போனுல் இரண்டு படி மிஞ்சும். நான்கு நான்காகப்போனுல் மூன்றுபடி மிஞ்சும். ஐந்து ஐந்தாகத் தாண்டிச் சென்ருல் நான்கு படி யிருக்கும். மொத்தப் படிகள் எத்தனை?

(4) இருவர் ஆளுக்கு ஒரு சாக்கை எடுத்துக்கொண்டு அயலூர் சந்தைக்குச் சென்று, ஆளுக்கு ஐம்பது தேங்காய் வாங்கிக்கொண்டு திரும்பினுர்கள். வழியில் ஐம்பது சுங்கக்கேட்டுகள் இருக்கின்றன. ஒவ்வொரு கேட்டுக்கும் சுமை ஒன்றுக்கு ஒரு காய் வீதம் கொடுத்துப் பின்னர் தன்னூர் வந்து லாபம் சம்பாதிப்பதெவ்விதம்? V. சிவசுப்பிரமணியன்.

## IV

ஆவணிமாத ஸஞ்சிகையில் 256-ம் பக்கத்தின் விடுகதைகளுக்கு விடை:—

I (1) விடுகதை விஞ:—1. சுந்தரர். (இது அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் பெயராகும். 2. சுரேசுவரர். (இது அமரர் என்னும் தேவர்களுக்கு இறைவனுகிய சிவபெருமானுக்குரிய பெயராகும்) 3. சுசுவரர். (இது எப்பொழுதும் எக்காலங்களிலும் சுத்தத்தையே அனுசரிக்கிறவர்களுக்குரிய பெயராகும். நல்ல சரீர சம்பந்தத்தை யுடையவர் என்றும் பொருள் படும்.) 4. சுவர். (இது வீட்டுக்கு அடைப்பாகிய சுவரின் பெயராகும்.) 5. சுரர். (இது அமரர்களுக்குரிய மற்ருெரு பெயர். தேவர்கள் என்று பொருள்படும்.) 6. சுர். (இது தணலைத் தண்ணீரில் போட்டவுடனே உண்டாகும் ஓர் சப்தமாகும். 7. வரர். (இது திருமண மகனுக்குரிய மற்ருெரு பெயராகும்.) 8. சுந்தரேசுவரர். (மேற்கண்ட எட்டு எழுத்தையும் சேர்த்துப் பார்த்தால் சுந்தரேசுவரர் ஆகும். இது நமது தமிழ் நாட்டில் உள்ள வளம் பொருந்திய ஓர் பெரிய ஸ்தலத்திலுள்ள தெய்வத்தின் பெயர். மதுரை (மீனுக்ஷி) சுந்தரேசுவரர் என்பதாம்.) M. வேதநாயகம் (கொழும்பு.)

K. S. வீராசாமி செட்டியார்.

(2) விடுகதை விஞவிடை:—அரி. (அரி—மஹா விஷ்ணு. அரி—தவளை.) "அ" என்ருல் அகரம். "ரி" எனருல் ரிஷி. K. S. வீராசாமி செட்டியார்.

II எழுத்துமாற்றுச் சொற்களின் விடுவிப்பு:—1. பழனி. 2. ஆரூர். 3. மக்கா. 4. ஏரகம். 5. மதுரை. 6. காசி. 7. தேவாரம். 8. சிதம்பரம். 9. நாகூர். 10. மதிஞ. 11. சீரங்கம். 12. சென்னை. K. S. வீராசாமி.

☞ அன்பர்கள் மனமுவந்து அனுப்பியுள்ள மற்ற விடுகதைகள் மறு ஸஞ்சிகையில் பிரசுரமாகும். ஒரு ஸஞ்சிகையில் வரும் விடுகதை விஞக்களுக்கு அடுத்த ஸஞ்சிகையில் அவற்றின் விடைகளைக் கண்டுகொள்ளலாம்.

---

அமிர்தம் அருந்த ஆவலாயின் "அமிர்த குணபோதினி"யை அடிக்கடி வாசி.

T. N. பேர்ஞண்டு.



# பெரியாரின் மொழிகள்



(254-ம் பக்கத் தொடர்ச்சி.)

## ஷேக்ஸ்பியரின் வாக்கு.

440. Between two hawles, which flies the higher pith, Between two dogs, which hath the deeper mouth, Between two horses, which doth bear him best, Between two girls, which hath the merriest eye, I have, perhaps, some shallow spirit of judgment; But in these nice sharp quillets of the law Good faith, I am no wiser than a daw.

இரண்டு பருந்துகளுள் எது வெகு உயரத்தில் பறக்கும்; இரண்டு நாய்களுள் எது ஆழமான வாயை உடையது; இரண்டு குதிரைகளில் அவனை எது நன்றாகத் தூக்கிச் செல்லும்; இரண்டு பெண்களுள் எவளுக்கு அழகிய கண்கள் இருக்கின்றன; இவைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் நியாயக் கிளர்ச்சி எனக்கு ஒருக்காலும் கிடையாது. இந்த விதமான ஆராய்ச்சிகளில் ஒரு காகம் என்னைவிட புத்தி கூர்மை உடையதென்று எனக்கு நம்பிக்கை.

441. What stronger breast plate than a heart untainted? Thrice is he arm'd that hath his quarrel just; And he but naked, though lock'd up in steel, Whose conscience with injustice is corrupted.

கெடுநினைப்பில்லாத இருதயத்தை விட உறுதியான வேறு மார்புக்கவசம் எது? எவன் ஞாயத்திற்கு சண்டை செய்கிறானோ அவன் மூன்று மனிதர்களுடைய பலத்தை உடையவனாகிறான். வைரம் பொருந்திய எஃகுவாலேயே அவன் மூடப்பட்டிருந்தாலும், அவனுடைய உள்ளக்கிடக்கையானது கெட்டுத் தவறான நெறியில் இருக்குமானால் அவன் நிர்வாணனே.

442. A little fire is quickly brodden out, Which, being suffered, rivers cannot quench.

நெருப்பு கொஞ்சமாக இருக்கும் போதே சீக்கிரத்தில் அணைத்துவிட வேண்டும். அப்படியே விட்டுவிட்டால் ஆறுகூட அதை அணைக்க முடியாது.

443. True hopes is swift, and flies with swallows' wings; Kings it makes gods, and meaner creatures kings.

உண்மையான நம்பிக்கை வேகமுடையது. அது சிட்டுக்குருவியின் இறகை உடையதாய்ப் பறக்கிறது. அதனால் அரசன் கடவுளாகிறான். அவனைவிடக் குறைந்தவர்கள் அரசனாக மாறுகின்றனர்.

444. This is the state of man; to-day he puts forth

---

சுகமாக இருக்கையில் நம்முடன் சேர்ந்து வாழ்பவர்கள் ஒரு எண்ணிக்கையோடு வைத்து நினைக்கக்கூடியவர்களல்ல. நாம் பாயிற் படுத்துக்கொண்டபோது நமக்கு அன்பாய் உதவக்கூடியவர்களே நமக்கு வேண்டியவராவர்.

The sender leaves of hope, tomorrow blossoms And bears his blushing honours thick upon him: The third day, comes a frost, a killing feast.

இதுதான் மனிதனுடைய நிலை; அவன் நம்பிக்கை என்னும் நுண்ணிய இலையை இன்று விடுகிறான். நாளை அது மலர்ந்து அற்பமான மரியாதைகள் எல்லாம் ஒன்றுகூடி அவன்மேல் குவிகின்றன. மூன்றாம்நாள் உறைந்த பனிக்கட்டியாக, ஆளைக்கொல்லும் பனிக்கட்டியாக மாறுகிறது.

445. I charge thee, fling away ambition: by that sin fell the angels.

பேராசையை உதறித்தள்ளென்று உனக்கு நான் கட்டளை இடுகிறேன். அதனுடைய பாவத்தால் தேவதைகள்கூடக் கெட்டழிந்திருக்கின்றன.

446. Love thyself last; cherist those hearts that hate thee, Corruption wins not more than honesty. Still in thy right hand carry gentle place, to silence envious tongues: but just, and fear not. Let all the ends thou aim'st at be thy country's, Thy God's, and truths.

கடைசியாக உனக்கு நீயே அன்பு கொள். உன்னை வெறுத்தவர்களை அப்படியே விட்டுவிடு. தீயவை உண்மையை வெல்லாது. எப்போதும் உன்னுடைய வலதுகை அமைதியையே நடத்திச் சென்று பொறாமையுடையவர்களை அடக்கட்டும். ஆனால் உண்மையாக இரு. அஞ்சாதே. உன்னுடைய எல்லா நோக்கமும் உன்னுடைய தேசத்தின் நலத்தின் முடிவுக்கும், கடவுளுக்கும் உண்மைக்குமாக இருக்கட்டும்.

447. Welcome ever smiles, And farewell goes out sighing.

இனிய முகத்தை எப்போதும் வரவேற்பு கொள். துக்கத்தைப் 'போய் வா' என்று சொல்லி அனுப்பிவிடு.

448. He that is stricken blind cannot forget the precious treasure of his eyesight lost.

கண்ணின் பார்வையைத் திடீரென்று இழந்தவன், அந்த பார்வையினது அருமையின் பெருமையை மறக்கவேமாட்டான்.

449. One fire burns out another's burning, One pain is lessen'd by another's anguish.

ஒரு நெருப்பு எரிந்து நிற்கும் போது மற்றொன்று எரிகிறது. மற்றொரு தீவிரவேதனையால் ஒரு உபாதை தணிகிறது.

450. What is in a name? That which we call a rose, By any other name would smell as sweet.

பெயரில் என்ன இருக்கிறது? ரோஜா புஷ்பம் என்று நாம் எதைக் கூப்பிடுகிறோமோ அதைவேறு எந்தப் பெயரிட்டழைத்தாலும், அப்போதுகூட அதனுடைய வாசனை முகர்வதற்கு இனிமையாகவே இருக்கும்.

(தொடரும்.)

P. G. குலசேகரன்.

---

தன் கடைசி காலத்தில் தன் அருகிலிருந்து கண்ணீருடன் தன் வாயில் பாலை ஊற்றக்கூடியவர்கள் யார் என்பதை ஆராய்கையில், எவரையுமே அதற்கான ஒரு நம்பிக்கையுடன் காணாத நிலை மனிதனைத் தத்தளிக்கச்செய்கிறது.

# சென்றமாதம்

**நம்பிச் சென்றதில் நேர்ந்த கதி.**

"ஒட்டக் கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்பதாய், நெல்லூர் ஜில்லா சுப்பராம ரெட்டி செய்து கொண்ட அப்பீலில் சென்னை ஹைகோர்ட்டார் அவரது ஐந்து வருஷ தண்டனை போதாதென்று கூறிப் பத்து வருஷங்களாக உயர்த்தி விட்டனர். இந்த ரெட்டி, தான் கறவை மாடு வாங்கித் தருவதாய் ஒரு பெண்ணை யழைத்துச் சென்று நடுவழியில் அவளை 11-இடங்களில் குத்தி ஜலம் நிறைந்த ஓர் குட்டையில் தூக்கி எறிந்துவிட்டதாயும் பிறகு அப்பெண் மறுநாட் காலையில் பிரக்ஞை வரப்பெற்று அவ்வழி வந்தோரால், மீட்கப்பட்டாளென்றும் தெரிகிறது. வழித்துணைக்கு மனுஷ்யர்கள் வேண்டியதாயிருந்து இந்த ரெட்டியைப் போன்றவர்களை அழைத்துக்கொண்டு சென்றால் சௌக்கியமாய் வீடு திரும்பிவிடலாம்! உலக வாழ்வில் நம்பாமல் முடிவதில்லை. நம்பிய இடமோ முழுதும் வஞ்சகமாகிறது. இத்தகைய விஸ்வாசக் கொக்குகள் குடும்பங்களில் எத்தனையோபேர்! நெருங்கி நிற்கிற நண்பர்களிலுங்கூட.

* * *

**காமத்துக்கு இரையான ஒரு மாணவி.**

"ஊர் இருக்கிறது, வாய் இருக்கிறது" அதற்கு நாம் பயந்து ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்கி நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அதில் தான் நமக்கு நற்பெயரும் கிடைக்கிறது; நமது நன்மார்க்கமும் தவறாதபடி அதில் அடக்கியாளப்படுகிறது. இதற்கு மீறிச் சுய இச்சைகட்கு இடங்கொடுத்து விடுவதில் நேரும் கேடுபாடுகள் சொல்லொணாது. இதில் காமம் என்பது ஒரு பொல்லாத பேய். தூண்டி விடுவதில் மிக்க சமர்த்துள்ளது. அது எத்துணைக் கல்வியையும் அறிவையும் ஓட்டிவிட்டு இச்சைக்கு இணங்கி விடும்படி செய்யத்தக்க வலுவுள்ளது. எவ்விதமோ மதியைக் கலக்கிக் கெடுத்துவிடுகிறது. அது ஒரு பெரிய சனியன். லாகூரில் 19-வயதுள்ள மிஸ் கிரேஸ் என்ற மாணவி 9-ம் வகுப்பில் வாசித்து வந்தவள்; எவ்விதமோ காமச் சனியனில் சிக்கி ஒரு குழந்தையைப் பெற்றுக் கொன்றுவிட்டதற்காக ஆயுள்பரியந்தம் தீவாந்திர சிக்ஷை விதிக்கப்பட்டாள். பருவமடைந்தபின் பெண்களைப் பாடசாலைக்கு அனுப்புவதில் இதுபோன்ற சோதனைகளும் இல்லாமலில்லை. பெண்கல்விக்குள்ள பிணி எண்ணித் தொலையாது! எட்டிலும் அடங்காது.

---

நெடுநாள் பொறுத்து ஒருவர் ஒரு வீட்டுக்கு வருகையில் உடனே ஆவலாய் விசாரிப்போரை நம்பலாம். வந்தது தெரிந்தும் எதிரில் வராமல் தமது வேலையாய் அலக்ஷியத்தோடும் இருந்துவிட்டு, அப்பால் வெகுநேரம் பொறுத்து "எப்போது ஐயா வந்தீர்கள்?" என்பவர்களை நம்பமுடியாது.

**எகிப்தின் விடுதலை.**

"முயற்சி திருவினையாக்கும்" என்பது முதியோர் வாக்கு. "உரோமைப் பட்டணம் ஒரே தினத்தில் கட்டவில்லை" யென்பது ஆங்கிலேயப் பழமொழி. எகிப்து தேசத்தார் செய்துவந்த சலியாமுயற்சிகளுக்கு இப்பொழுது விடிவுகாலம் தோன்றியிருக்கிறது. பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இப்பொழுது ஆதிக்கம் பெற்றுள்ள தொழிற் கட்சியார் பிரிட்டிஷாருக்கு அவசியமான ஸூயெஸ்கால்வாய் பிரிட்டிஷின் சுவாதீனத்திலிருப்பதற்கான பாதுகாப்புகளை மட்டும் தேடிக்கொண்டு மற்றபடி எகிப்துவுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்துவிடத் தீர்மானித்துவிட்டனர். வெகுகால கஷ்டங்களுக்குப் பிறகு இப்பொழுது எகிப்து விடுதலை பெறுகின்றது. இந்தியாவுக்கும் இவ்வித விடுதலை நாள் என்று வாய்க்குமோ? நம் காலத்தில் முடியுமா?

***

**சேதுபதி அவர்களின் கிரீடதாரண மகோத்ஸவம்.**

"சீதாராம நாதனயோத்தி சிங்காசனக் கொலுமங்களமே, சிங்காசனத்திலும் வெங்கானகத்திலும் செந்தாமரை முகம் மங்களமே" என்று சரபம் முத்துசாமிக்கவிராயரவர்கள் பாடினர். அந்த சிங்காசன மேறும் வைபவமும் பட்டாபிஷேகமும் ராமநாதபுரம் சேதுபதி அவர்கட்கு சென்ற ஆகஸ்டு 19-ந் தேதியில் நிறைவேறியது. கங்கை முதலான புண்ணிய தீர்த்தங்களால் மங்களஸ்நானம் செய்விக்கப்பெற்று சுபமுகூர்த்தத்தில் சேதுபதியவர்கட்கு சிரசில் கிரீடம் வைக்கப்பட்டது. 250-வருஷங்களாக ஸ்வீகாரப் புதல்வர்கட்கே சிம்மாசனம் கிடைக்கப்பெற்று வந்தது. மூன்று தலைமுறைகளாகத்தான் மூத்த குமாரர்கட்கு இப்பொழுது சிம்மாசனம் கிடைத்து வருகின்றது. "தமிழ் வளர்ப்புப் பண்ணை" என்ற சொல் இராமநாதபுரத்திற்கே பொருந்தும். புது அரசர் வாழ்க.

***

**முகம்மது நபியவர்களின் ஜனன தின வைபவம்.**

"தலை பலவாய் பேயர் பலவாய் நதிகளெல்லாம் சாகரத்தில் ஒரு நீராம் தன்மைபோல" அந்தந்த மதங்களை ஸ்தாபித்த பரமஞானிகளின் கொள்கைகளெல்லாம் கடைசியில் பரமாத்மாவை யறிந்து அவருடன் ஒன்றுபடுவதின் தன்மையதாகவே முடிவு கொள்ளும். அங்ஙனமாக, முகம்மதுநபி யவர்கள் உலகத்தார் உய்யுமாறு உதவிய ஞானப்பாலும், அவர் காட்டிய மார்க்கங்களும், தீர்க்க தரிசனங்களும் ஒப்பற்ற மகத்துவ முடையவைகளாகும். நமக்கு வேண்டியது ஞானப்பாலும் அன்புமே. அவை கிடைக்கு மிடங்களிலெலாம் சென்று ஆநந்தமாய்ப் பருகக்கடவோம். மற்ற ஆராய்ச்சி பாகங்களை மற்றவர்கட்கு விட்டுவிடுவோம். தோட்டம் யாருடையது, எவ்வளவுக்கு வாங்கியது, அந்தப் பத்திரம் எப்பொழுது ரிஜிஸ்தரானது என்ற விவரங்களை மற்றவர்கள் விசாரித்துக் கொள்ள விட்டுவிட்டு நாம் அந்தத்

---

வீட்டுக்கு வரும் விருந்தாளிகள் தன்னைச் சேர்ந்தவர்களாக வில்லை. யாரோ?—என்னென்ன உறவோ? அவர்களுக்குச் செலவிடவேண்டியது மட்டும் தன் கைக்காசைக் கொண்டுதான். இது பூர்வம் பட்ட கடனோ?

தோட்டத்திலுள்ள கனிகளை யுண்ணக் கடவோம். முகம்மதுநபி யவர்களின் ஜனனதின மகோத்ஸவம் சென்ற ஆகஸ்டு 18-ந் தேதி யன்று பாரதபூமி யெங்கணும் கொண்டாடப்பெற்றது. ஒப்பற்ற மஹாஞானிகளான தீர்க்கதரிசிகளை நாம் துதித்துப் பக்தி புரியுங்கால் நாமும் அவர்களின்சாயலைச்சற்று பெற்றுக்கொண்டு பக்குவமடைகிறோம். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் வயிறு ஒன்றாக ஒட்டி மற்ற அவயவங்கள் மட்டும் வெவ்வேறாயுள்ள இரு சரீரங்கட்கு இணையாவார். இவ்விருவரும் எக்காலத்தும் பிரிக்கப்பட முடியாதவர்கள். உலக சம்பந்தமான காரியங்களில் சில பிரிவினைகள் தோற்றினும், அவற்றை இதுபோன்ற பூஜார்ஹமான ஜனன தினங்களை ஒருமனப்பட்டுக் கொண்டாடுவதின் மூலம் சமரஸப் படுத்திக் கொண்டு பரஸ்பரம் ஐக்கியப் பான்மையை வளர்த்து முன்னோக்கிச் செல்லக் கடவோம். ஒருவர் மதத்தை யொருவர் கௌரவித்து வாழ்வதே கடவுளுக்குப் பிரீதி. எந்த மதத்தின் கடைசி தத்துவமும் இறைவனின் திருவடி நிழலை யடைதலையே யுணர்ந்துகின்றது. நமது ஸகோதர—பரிசுத்தஇஸ்லாம் வாழ்க. வெற்றிகொள்க.

***

**முஸ்லிம்களிடையில் ஸ்திரீ சுதந்திரமும் மத தத்துவமும்.**

**"நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே, நல்லார் குணங்களுரைப்பவும் நன்றே"** என்றவாறாக, சென்னையில் நபிகள் நாயகத்தின் அவதாரத்திருநாளன்று கூடிய கூட்டத்தில்கனம் வி. பி. இராமசாமி ஐயரவர்கள்செய்த பிரஸங்கத்தினின்றும் இரு குறிப்புகளை இங்கு தருகின்றோம். (1) "முஸ்லிம் ஸ்திரீகளைத் தங்களின் ஆநந்தக் கருவிகள் என்றும், விளையாட்டுப் பதார்த்தங்கள் என்றும் முஸ்லிம்கள் கருதுகிறார்க ளென்று ஒரு தப்பெண்ணம் இருந்துவருகிறது. குர்ஆனில் இதற்கு ஆதாரமேயில்லை. மனைவி மீது கணவனுக்கு எவ்வித பாத்தியங்கள் இருக்கின்றனவோ, அவ்வித சம பாத்தியம் மனைவிக்கும் கணவனிடமுண்டு என்று குர்ஆன் விதிக்கிறது. தவிரவும் வார்ஸு பாத்யம் ஸ்திரீ புருஷர்கட்குச் சமமாக ஏற்பட்டிருக்கிறது." (2) "விஷய மறியாதவர் கூறுவதைப்போல், பிறமதத்திற்கு இடமளிக்கக்கூடாது என்பது இஸ்லாத்தின் நோக்கமேயில்லை. பிறமதத்தினரை நம்பாதீர்கள் என்றும் இஸ்லாத்தில் கூறப்படவில்லை. குர்ஆன் என்ன சொல்லுகிறது? "பிற மதத்தினருக்கு உபதேசம் ஏற்பட்டிருப்பது போல், இம்மதத்தினருக்கு இவ்வழியில் உபதேசிக்கப்படுகிறது" என்று குர்ஆன் கூறுகிறது. இதன் அர்த்தம் என்ன? நமக்கு முன் பல மதத்தினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு அத்தகைய போதனைகள் சரி; நம் மதத்தினர் அனுஷ்டிக்க வேண்டிய முறைகளும் கோட்பாடுகளும் குர்ரானில் கண்டபடி என்பதேயாகும். ஆகையால் எல்லா மதத்தைப்போலவும் இஸ்லாமும் ஒன்றுஎன்று குர்ஆன் கூறுகிறதேஒழிய வேறுமதத்தை அழித்து வாழவேண்டும் என்பதே யில்லை. ஆகையினால் இஸ்லாமியர்கள் தங்கள் மதப்போதனைப் பிரகாரம் ஒழுகத் தங்கள் சித்தாந்தத்தைப் பெறுவார்களாக - பிற மதத்தினர் தங்கள் தங்கள் ஆசாரத்தைப் பின் தழுவி, யாவரும் ஒரே லக்ஷியத்தை நாடுவோமாக!"

---

என்ன உடம்பு சரியாயில்லையா? அப்படியானால் புறப்படவே கூடாது; சுகமானபிறகே போகவேண்டும் என்று நிறுத்தி ஆதரிப்போர் எங்கோ ஒருவர்.

# மக்கா நகரம்.

நமது இந்து தேசத்துக்கு மேற்கே நெடுந் தூரத்துக் கப்பால் இஸ்லாமியமதம் செழித்தோங்குமிடமான அரேபியா என்று பிரசித்தி பெற்ற பரியாயத்தீவு ஒன்று இருக்கிறதல்லவா? அது வெகுவாய் மணல் வெளியாகி, அவ்விடத்தில் நெடுங் காலமாய் ஒட்டைகளும், ஆடுமாடுகளும் மேய்த்து ஜீவிப்பவர்களே வாசம் செய்யும் இடமாக முற்காலத்தில் இருந்தது. அக்காலத்தில் அவர்களுக்கு நிலையான இருப்பிடம் ஒன்றும் கிடையாது. தமக்கும் தமது ஒட்டகம் முதலியவைகளுக்கும் உணவு தேடிக்கொண்டு அவர்கள் அம் மணல் வெளிகளில் ஸஞ்சாரமாயிருந்தனர். போகும்போது தங்கள் தட்டு முட்டு கூடாரம் முதலிய சாமான்கள் எல்லாவற்றையும் அவர்கள் கூடவே எடுத்துக்கொண்டு போய்த் தங்களுக்கு இஷ்டமான இடங்களில் கூடாரமடித்துச் சில நாள் தங்கியிருந்து, மறுபடி அங்கிருந்து அப்புறம் போய்விடுவார்கள். அவர்கள் தமது தலைவன் ஒருவன் தவிர, மற்றெவர்க்கும் கீழ்ப்படிவதில்லை.

***

அவ்வாறிருக்க, நாளளவிலே சில இடங்களில் நிலையாய் நல்ல ஜீவனம் கிடைத்ததுகண்டு அவ்விடங்களிலேயே சிலர் வசிக்கவேண்டுமென விருப்பம் கொண்டவர்களாகி, அங்கங்கே கிராமங்களும் நகரங்களும் கட்டிக்கொள்ளலானார்கள். இவ்விதமாக அரபிதேசத்தில் ஆதியில் ஏற்பட்ட நகரங்களுள் **மக்கா, மெதினா** முதலியவை மிகப் பிரசித்தமானவைகளாம்.

***

இந்த மக்கா நகரமானது மகம்மது நபிகள் பிறப்பதற்கு வெகு நாள் முன்னதாக அரபிதேசத்தில் மதவிஷயங்கள் செழித்தோங்குவதற்கு மத்திய ஸ்தானமாயிருந்தது. ஆயினும், கிறிஸ்து பிறந்த ஐந்தாவது நூற்றாண்டிலேதான் அதன் உண்மையான சரித்திரம் ஆரம்பமாகின்றது. அங்குள்ள **காபா** என்னும் ஆலயத்தில் நீல நிறமான கல் **விக்கிரகம்** ஒன்றுண்டு. அதை அங்குள்ளவர்களெல்லாம் கடவுளே தம்மிடத்தில் கருணைகூர்ந்து தந்தருளியதென்று மிகுந்த பயபக்தியுடனே ஆராதித்துக்கொண்டிருந்தனர். அங்கிருந்த **கோரிஷ்** என்னும் வமிசத்தார் தாங்களே அநாதியான இஸ்மேல் ஜாதியாரென்று சொல்லி, அந்த ஆலயத்திற்கு அதிபதியாயினர். அந்த வமிஸத்தில் தான் மகம்மது நபிகள் அவதரித்தார். அந்தக் கோயிலுக்கு அரபி ஜாதியார் வெகு காலமாகக் காணிக்கைகள் கொண்டுவந்து கொடுப்பதும், வருஷந்தோறும் தேசா தேசங்களிலுமிருந்து திவ்ய தேசயாத்திரையாக வந்து தரிசிப்பதுமாயிருந்தனர். அதனால் அந்த ஆலயத்திற்கு விசேஷமான ஆபரணங்களும் திரவியங்களும்

---

விவாகம்—விசேஷம்—மரணம் முதலிய காலங்களுக்கு வராமல் அவையெல்லாம் தீர்ந்தபிறகு சாதாரணப் பொழுதில் வந்து குலாவி விருந்துபசாரங்கள் ஏற்றுச் செல்லும் உறவினர் சிலருண்டு. இது குள்ளநரியின் வேலை.

சேர்ந்து போயின. கொரிஷ் வமிசத்தார் அந்த ஆலயத்திற்கு விசாரணைத் தலைவரா யிருந்ததுபற்றி, அத்தேசத்து மற்றச் சாதியார் அனைவருள்ளும் அவர்களே மதாசாரியர்களானது மன்றி, அக்கோவிலின் ஸ்திதிகளுக்கெல்லாம் யஜமானர்களுமாயினர். ஒரு காலத்தில் அக்கோவிலின் திறவுகோல் ஈமென் ராஜாக்களுடைய ஆதீனத்திலிருந்து, அதைப் பிறகு கொரிஷ் வமிஸத்தார் கைப்பற்றிக் கொண்டார்கள். பிறகு எத்தனையோ பேர் படை யெடுத்துவந்து போர் செய்தும், எவ்வளவு கலகங்கள் உண்டாகியும், வெகு காலம் வரையில் அவர்கள் அதைக் கைவிடாமலே பத்திரமாய்க் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் அபிசீனியர்களும் கிறிஸ்தவர்களும் அடிக்கடி படையெடுத்துப் போராடிய போராட்டங்களே அரபிதேச சரித்திரத்தில் முக்கியமான விஷயங்களாக இருக்கின்றன.

***

இந்த மக்கா நகரமானது செங்கடற்கரைக்கு 50-மைல் தூரத்தில் சுற்றிலும் உன்னதமான மலைகளால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்கில் அமைந்திருக்கின்றது. வீடுகளெல்லாம் வெகுவாய்க் கற்கட்டடம். கற்களால் கட்டப்பட்டு வெள்ளை யடித்து வெள்ளை வெளேலென்று காணப்படும். இக்கட்டடங்கள் நிறைந்துள்ள வீதிகளுடன் அந்நகரம் காபா என்னும் ஆலயத்தைச் சுற்றி யிருக்கின்றது.

## மரணத்துடன் மற்றவைகளும் மரணமா ?

மரணம் மட்டும் நேர்வதில்லை. அதனால் ஒரு தேகத்தினின்றும் உயிர்மட்டுமே பிரிவதில்லை. அந்த மரண பலிக்கு உட்பட்ட மனிதனின் எல்லா கவித்வ வித்தைகளும், நிபுணத்துவங்களும், வீரப்பிரதாப சக்தி தத்துவங்களும், எத்தனையோ பாடுபட்டுத் தெரிந்துகொண்ட அறிவுகளும், அநுபவங்களும் யாவுமே அந்த மரணத்துடன் மற்றொரு மரணமாய் மாண்டு மறைகின்றன. இன்றோ நாளையோ எனக் கிடக்கும் மனிதனிடம் எத்தனைக் கல்வி மேன்மைகள் உள்ளன ? அவற்றை இன்னொருவருக்குக் கொடுத்துவிட்டுப்போக முடிகின்றனவா ? மனப்பயிற்சிகள் யாவும் மரணத்துக்குப் பலியாகின்றன. அவன் சேர்த்து வைத்த ரிக்கார்டுகள் அவனுக்குப்பின் ஒரு குப்பை மூட்டையாகிறது. அதின் அருமை மற்றவர்க்குத் தெரிவதில்லை. ஏதேனும் ஒரு தொல்லையில் சிக்கிக்கொண்டபோது மட்டும் தமது தகப்பனார் ஏதாவது ரிக்கார்டு ஆதரவு வைத்துவிட்டுப் போயிருக்கிறாரா என்று அந்தக் குப்பையை அப்போதுமட்டும் வெகு சிரத்தையோடும் ஆராயத் தொடங்குகிறார்கள் !



# ஹாஸ்ய சஞ்சீவினி



1. ஒரு உபாத்தியாயர் தன் மாணுக்கர்களுக்கு இலக்கணம் கற்றுக் கொடுத்துக்கொண்டிருக்கையில் ஒருவன் அதைக் கவனியாமல் அலக்ஷியமாயிருந்தான். இதைக் கண்ட ஆசிரியர் வருத்தத்துடன் அவனை நோக்கி, தம்பி, 'எழுவாய்; உன்னால் ஒன்றும் 'பயனில்லை, எழுந்து நீ செல்வதே 'செய்யப்படு பொருள்'— என்று அவனை அந்த க்ஷணமே வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

மு. இ. சுப்ரமணியம்.

2. தான் அதிகம் படித்தவரென்று காட்டிக்கொள்ளும் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து:—ஐயா, நீங்கள் எழுதிய புஸ்தகத்தை இப்போதுதான் நான் வாசிக்கிறேன். அக்கதையை நல்ல மாதிரியாய்க் கொண்டுபோய் முடித்திருக்கிறீர்கள்.

எழுதினவர்:—நல்லது, அதன் தொடக்கத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

அதிகம் படித்தவர்:—அவ்விடத்திற்கு நான் இன்னும் வரவில்லை!

3. கணக்குக் கொஞ்சமேனும் விளங்காத ஓர் சிறு பையனுக்குக் கணக்குக் கற்றுக் கொடுப்பதற்காக உபாத்தியாயர் அவனை நோக்கி, "தம்பி, உனது தகப்பனார் ஒரு வாரத்தில் ரூபா 10-வீதம் மிச்சம் பிடித்தாரென்றால் 10-வாரங்களின் முடிவில் எவ்வளவு வைத்திருப்பார் என்று வினவினார்.

பையன்:—"அவருக்கு ஓர் சைக்கிளும், அம்மாவுக்கோர் பட்டுச் சேலையும், எனக்கு ஓர் குடையும் வைத்திருப்பார். வெ. கிருஷ்ணபிள்ளை.

4. நவீன நாகரீக நாராயணய்யர் தெருவழியே போய்க்கொண்டிருக்கும்போது ஒரு இடத்தில் "பிராமணர்கள் நாகரீகமாய் சாப்பிடும் இடம்" என்று போர்டு தொங்குவதைக்கண்டு, அந்த ஹோட்டலில் புகுந்து "ஐயா! ஒயிட் ஹார்ஸ் விஸ்கி (White horse wiskey) இருக்கிறதா? என்று கேட்டார். உடனே ஓட்டல் மானேஜருக்குக் கோபம் வந்துவிட இருவரும் கைகலந்தனர். அங்கு பெருங் கூட்டம் கூடிவிட்டது. அதுமுதல் 'பிராமணன் சாப்பிடுமிடம்' என்று போர்டு திருத்தப்பட்டது.

5. ஒரு உபாத்தியாயர் மாணவர்களுக்கு "இளமையிற்கல்" என்னும் வாக்கியத்தைப் போதித்துக் கொண்டிருக்கையில் அருகிலிருந்தவர் "கற்றபின் ஏங்கல்" முதுமையில் தோங்கல்" என்று கூறினார்.

6. ஆடவர்கள் ஏன் தங்கள் மனைவியரை விட்டுப் பிற ஸ்திரீகளின் மேல் கண் போடுகிறார்கள் என்று அசல்வீட்டு அனந்தன் எதிர் வீட்டு எஞ்சயனைக் கேட்க, எஞ்சயன், "மனைவியர்களின் தயவு எப்பொழுது வேண்டுமென்றாலும் கிடைக்கும்; ஆனால், அன்னிய மாதர்களுடையது அவ்வாறல்ல, எப்பொழுதும் கிட்டாததில்தானே ஆவல்" என்றான்.

7. நீதிபதி:—ஏன் ஐயா அவரை அவிசாரி மகனே என்று வைதீர் ?

பண்டிதர்:—'அ-விசாரி, அதாவது ஒருவராலும் விசாரிக்கப்படாத—சுயேச்சையாய்த் திரிகின்ற—மகனே என்றேன்.' V. சிவசுப்ரமணியன்.

பிராமணர்
கள்மாத்திரம்
ட
சாப்பிடலாம்.

8. ஒரு புதிய ஹோட்டல்காரர் "பிராமணர்கள் மாத்திரம் சாப்பிடலாம்" என்ற வாசகத்தை முக்கோண வடிவமாய் மூன்று வரியில் அடக்கி ஒரு விளம்பரப் பலகை எழுதிக் கொடுக்கும்படி ஆங்கிலக் கம்பெனி ஒன்றுக்கு ஆர்டர் கொடுத்தார். தமிழ் பாஷை தெரியாத அக் கம்பெனியரோ "கள்மாத்திரம் சாப்பிடலாம்" என்று பொருள் படும்படியாக மேற்கண்டபடி பதம் பிரித்துப் பலகையில் வெகு அழகாய் எழுதி யனுப்பினர். அதைக் கண்டவர்கள் சிரிக்க நேர்ந்தது. M. S. கிருஷ்ண ஐயர்.

9. ஒரு ஹோட்டலில் பாயாசம் சாப்பிடப்போனவன் அதில் ஒரு புழுவைக் கண்டு கோபங்கொள்ள, அதற்கு ஹோட்டல்காரன்—"என்மீது கோபம் கொள்ளவேண்டாம்; எல்லாவற்றையும் எடுத்தெறிந்து விட்டுக் கொண்டு வருவதற்குள்ளாகத் தாங்கள் அவசரப்பட்டதால் எப்படியோ தப்பி ஒரு புழு மட்டும் அதில் இருந்துவிட்டது" என்றான்.

10. ஒரு ராணுவத்தைப் பரிசோதித்த உத்தியோகஸ்தர் "இந்த சேனையிலுள்ளவர்கள் சண்டையில்லாத சாலத்தில் புலிகள் தான்; ஆனால் யுத்த காலத்தின்போதோ ஆபத்துக் கிடமானவர்கள்" என்று அபிப்பிராயம் எழுதினர். அப்படியே வீட்டிலும் பலர் கூடியிருக்கும்போது தான் மேலும் மேலும் கூட்டமாய் வந்து குவிவார்கள். ஒண்டியாய் ஹோட்டலில் புசித்துத் தனியாக வீட்டிலிருக்கையில் இரவில் படுத்துக்கொள்ளத் துணைக்குக்கூட எவரும் அகப்பட மாட்டார்கள்.

## ஒரு பெரியோரின் மொழி.

"பூர்வ ஜென்மத்தில் செய்த கர்மங்களை அனுபவித்தே தீரவேண்டும். முந்தின ஜென்மத்தில் போதுமான சொத்துக்கள் இருந்தும், பலர் பசியுடன் வருந்துகின்றனரெனப் பார்த்தும், அதைக் கவனியாது ஒன்றும் அறியாதவர்களைப்போலிருந்திருந்தால், அதன் பயனாக இந்த ஜென்மத்தில் கையில் வேண்டிய திரவியம் இருந்தும், வீட்டில் பல மரக்கால் அரிசி நித்தமும் வடித்துக்கொட்டியும், தான் மட்டும் ஒரு கவளம் அன்னமும் உண்ணாத நிலையில் பிணியால் அழுகும்படியும் அந்த உபாதையை அநுபவிக்கும்படியும் ஈசுவரன் செய்துவிடுகிறார். அவ்வாறு நினைத்தே நான் எவ்வித மருந்தும் புசியாமல் பட்டினியாகக்கிடந்து பகவத் தியானம் செய்து என் பிணியைப் போக்கிக்கொள்ளுகிறேன். நான் சுகப்பட்டதும் அந்தக் கர்மத்தில் ஒருபாகம் தீர்ந்ததென்று எண்ணுகிறேன். முன் வினையின்றி ஏதும் சூழாது—நேராது. நமக்கு வருவதை அனுபவிக்காமல் தீருமா?"

## "சலாம்" போட்டதில் வந்த லாபமென்ன?

எவரொருவருக்கு எவ்வளவு சலாம் வந்தனங்கள் போட்டாலும், அங்கு நடப்பது தான் நடக்கும். வந்தனம் செய்ததாலேயே சாதகம் ஏதும் நேர்ந்திடாது. பாங்கியில் நகைகளை எடைபோட்டு அதற்குப் பணம் தருவோரிடம் எவ்வளவு சலாம் செய்பினும், அவர்கள் தர ஒப்பிய தொகைக்குமேல் ஒரு காசும் சேர்த்துத் தரப்போவதில்லை. அவருக்காக எழுந்து மரியாதை செய்ததும் வீணே! எத்தனையோ பேர் நித்தமும் கௌரவப்பட்ட சிலருக்கு ஓயாது வந்தன சலாம் வகைகள் போடுவதால் அந்த கௌரவஸ்தர்களுக்கு இது ஒரு அருமையாகவும் படுவதில்லை. கும்பிடவோ—சலாம்போடவோ வேண்டியது மற்றவர்களின் தலைவிதியென்று அவர்கள் தீர்மானித்து விடுகிறார்கள். இந்த வந்தன மரியாதைகளை இவர்களுக்குச் செய்யாமல் ஒரு கோயிலைப் பார்த்துப் போட்டாலும் கொஞ்சம் பலனாவது உண்டு.

தனக்கு நகைசெய்து போடவில்லை யென்று "நீ சாதம் தானே போடுகிறாய்" எனக்கணவனுடன் சண்டையிடுவதில், இன்னும் அந்த நகையைச் செய்கிறகாலம் வெகு தூரத்திற்கேதான் போகும். மிருது வசனமாய் வேண்டுவதிலுள்ள காரியாநுகூலம் சிடுசிடுப்பில் ஒருபோதும் நடவாது.


# பிரஜாநுகூலன்

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு பத்திராசிரியர்.

இது நாவல்கள் நிறைந்த அநுபவக் களஞ்சியமான சிறந்த மாதப்பத்திரிகை. 1904-ம் வருஷ முதல் 25-வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. வெகு ருசிகரமான அநுபவங்களுடன் அதி சிலாக்கியமாயிருக்கும். பக்கங்கள் 32.—"அமிர்தகுண போதினி" நேயர்கள் அதன் ஆசிரியர் நடத்தும் பழமையான இப்பத்திரிகையையும் ஆதரிப்பது அவசியம். வருஷ சந்தா ரூபாய் 1.

☞ மானேஜர், "பிரஜாநுகூலன்" ஆபீஸ், ஸ்ரீரங்கம்.